www.tamilarangam.net

THAYAGAM

75¢

11 . 2 . 94

ளமை:5 தேடல்:32

# தாயகம்

## சமாதான முயற்சியில் ஆயர் கென்னத் பெர்ணான்டோ, சர்வோதயத் தலைவர் ஆரியரத்தின யாழ்ப்பாண விஜயம்

## அமெரிக்க ராஜாங்க அமைச்சு அரசு, புலிகளின் மனித உரிமை மீறல்களுக்கு கண்டனம்

## அரசு மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்

நகரின் மத்தியில்
துரித பணமாற்றுச் சேவை
CD விற்பனையாளர்

Senduran & Co
(416) 962 7397
584 A, Parliament st

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®

தரத்தின் சின்னம்

நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®

Niru

Niru

# தரத்தின் சின்னம்

# நிரு பிராண்ட்®

# Niru Brand®

நிரு பிராண்ட் தயாரிப்புகளுக்கு நிகர் Niru Brand® தயாரிப்புகளே.

உங்கள் கைகளில் கிடைப்பது தரமான நிரு பிராண்ட் தயாரிப்புகளா? என்பதை உறுதிப்படுத்துங்கள்

## போலிகளை வாங்கி ஏமாறாதீர்கள்

*Niru Enterprises Inc,*

**Tel:(416) 299-4202**

**நிரு பிராண்ட் தயாரிப்புக்கள் எல்லா இலங்கை வர்த்தக நிலையங்களிலும் விற்பனையாகின்றன. உங்கள் ஏமாற்றத்தைத் தவிர்ப்பதற்கு எம்முடன் தொடர்பு கொண்டு எமது தயாரிப்புகள் எப்பொழுதும் கிடைக்கக் கூடிய வர்த்தக நிலையங்களை அறியலாம்**

www.tamilarangam.net

Second class mail Registration No:8435




# சமாதான முயற்சிகள் தீவிரம் யாழ்ப்பாணத்தில் ஆயர், ஆரியரத்தின

சமாதான முயற்சிகளை மேற்கொள்ளும் நோக்கில் அங்கிளிக்கன் ஆயுர் கென்னத் பெனுண்டோவும் சர்வோதயத் தலைவர் ஆரியரத்தினவும் தற்போது யாழ்ப்பாணம்சென்றுள்ளனர் என்றுதெரிய வருகிறது. அரசாங்கம் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த சம்மதம் தெரிவித்ததை அடுத்து இந்த முயற்சிகள் நடைபெறுகின்றன.

கடந்த மாதம் கத்தோலிக்க பேராயர் நிக்கலஸ் மார்க்கஸ் பெனுண்டோ புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்களைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியதுடன் சமாதான முயற்சிகளுக்கு மத்தியஸ்தம் வகிக்கவும் சம்மதம் தெரிவித்திருந்தார். தாங்கள் நிபந்தனைகளின்றி பேச்சுவார்த்தைகளுக்கு இணங்க சம்மதம் என்று புலிகள் அவரிடம் தெரிவித்திருந்தனர்.

இவர் கொழும்பு சென்று தளபதியிடம் பேசிய போது அவர் இராணுவம் சமாதான முயற்சிகளுக்கு இடையூறாக நிற்காது என்று உறுதியளித்தார். தளபதி கத்தோலிக்கர் என்பதும் குறிப்பிடத்தக்கது. முன்பு சமாதான முயற்சிகள் சிசில் வைத்தியரத்தினவால் தடையானது தெரிந்ததே. இதை மனதில் கொண்டே ஆயர் தளபதியைச் சந்தித்தார்.

பின்னர் பிரதமரைச் சந்தித்த போது அவர் புலிகள் ஆயுதங்களை கைவிடாவிட்டாலும் தீர்வு கிடைக்கும் போது ஆயுதங்களை கைவிடுவதாக உறுதியளிக்க வேண்டும் என்று தெரிவித்தார். பின்னர் மந்திரிசபைக் கூட்டத்தில் பேசிய போது ஜனாதிபதி புலிகளுடனான பேச்சுவார்த்தைக்கு எதிர்ப்பு தெரிவித்திருக்கிறார் என்று கொழும்பு செய்திகள் கூறுகின்றன.

# டென்மார்க்கில் கடலில் தமிழர்கள் மீட்பு

டென்மார்க்கிற்கு கடல் மூலமாக செல்ல முயன்று அவலப்பட்ட 36 தமிழர்கள் காப்பாற்றப்பட்டுள்ளார்கள். கடும் குளிரில் பால்டிக் கடலில் ஒரு இரவை சிறிய வள்ளங்களில் கழித்த இவர்களை டென்மார்க் அதிகாரிகள் காப்பாற்றினர்.

15 முதல் 35 வயது வரையிலான இரண்டு பெண்களும் 34 ஆண்களும் கடந்த வாரம் வியாழக்கிழமை சிறிய வள்ளங்களில் விடப்பட்டிருந்தனர். ரஷ்யாவிலிருந்தும் பால்டிக் குடியரசுகளிலிருந்தும் ஸ்கன்டினேவிய நாடுகளுக்கு அகதிகள் வருவது தற்போது அதிகரித்து வருகிறது. சுவீடனில் மட்டும் 91 ம் ஆண்டு முதல் ஏழு தடவைகள் வள்ளங்களில் வந்தவர்கள் பிடிபட்டிருக்கிறார்கள்.

அவர்கள் களைத்திருந்ததுடன் பயத்தினால் பீடிக்கப்பட்டிருந்தார்கள் என்றும் அவர்களின் உடல் வெப்பநிலை மிகவும் குறைவாக இருந்தது என்றும் அவர்களை பரிசோதித்த மருத்துவர் தெரிவித்திருந்தார்.

முதலில் ஒன்பது பேர்களைக் கொண்ட சிறு வள்ளம் வெள்ளி காலை கரை ஒதுங்கியதை அடுத்து தேடுதல் ஹெலிகொப்டர்களும் வள்ளங்களும் தேடியதை அடுத்து 27 பேர் வேறிரு வள்ளங்களில் சுவீடனுக்கும் டென்மார்க்குக்கும் இடையில் அலைந்து கொண்டிருக்க காணப்பட்டனர். இவர்கள் ஹெலிகொப்டர்களில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

தற்போது கடற்படையினர் அப்பகுதியால் சென்ற கப்பல்களைப் பற்றி விசாரணை செய்து வருகின்றனர்.

4ம் பக்கம் பார்க்க..

# தமிழ்த் தாய்க்கு ஆறு வருட சிறை

தனது குழந்தைகளைக் கொன்ற குற்றச்சாட்டில் தமிழ் பெண்மணியான சிறிஸ்கந்தராஜா அருந்ததிக்கு ஆறு வருட சிறைத்தண்டனை கிடைத்துள்ளது. கழுத்துதிருகி தனது இரண்டு பிள்ளைகளை இரு வருடங்களுக்கு முன்னர் கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்ட இந்தப் பெண் இரண்டு வருடங்களில் பரோலில் வெளிவரலாம். ஏற்கனவே இவர் இரண்டு வருடங்கள் சிறையில் கழித்திருந்தார். கொலைக்குற்றச்சாட்டில் குற்றவாளியாகக் காணப்பட்டவர்கள் ஆயுட்காலச் சிறைத் தண்டனை பெறுகின்ற போதும் இவர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டு கருணை காட்டும்படி கோரியதால் தண்டனை குறைக்கப்பட்டிருக்கிறது.

4ம் பக்கம் பார்க்க..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அரசியல் படுகொலையிலிருந்து படுகொலை அரசியல் வரை..

**ஐம்பது வருடங்களுக்கு முன் ஆங்கிலேய அரசுக்கு எதிரான பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்ட 'நட்சத்திரக் கும்பலின்' தலைவராக இருந்து பின்னர் பிரதமரான இஸ்ரேலிய பிரதமர் யிற்ஷாக் ஷமீர் சமீபத்தில் தனது வாழ்க்கைக் குறிப்புகளை வெளியிட்ட போது ஆரம்ப காலத்தில் தனது கெரில்லா நடவடிக்கைகளில் சகாவாக இருந்த எலியாகு கிலால்டியை தான் கொன்றது பற்றி எழுதியிருக்கிறார். எலியாகு பல உயிர்களைப் பலி கொடுக்க தயாராக இருந்ததாகவும் இதை தான் நிறுத்த வேண்டிய நிர்ப்பந்தம் இருந்ததாகவும் அதில் ஷமீர் கூறியிருக்கிறார். 'எனக்கு வேறு வழி இருக்கவில்லை, ஆனாலும் இதற்கு நான் பெரியதொரு விலையைச் செலுத்த வேண்டியிருந்ததுடன் பெரும் வேதனையையும் தந்தது' என்கிறார்.**

சமீபத்திய மாத்தயா விவகாரம் இதனுடன் ஒப்பிடக் கூடியது என்றாலும் இரண்டிற்குமான வேறுபாடுகள் உள்ளன. மாத்தயா மீதான உளவுக் குற்றச்சாட்டு போலன்றி, கிலால்டி மீதான குற்றச்சாட்டு வித்தியாசமானது. பலஸ்தீனத்தில் இங்கிலாந்தின் கட்டுப்பாட்டை யூத மக்கள் எதிர்க்க வேண்டும் என்பதற்காக, யூதர்களின் ஆர்ப்பாட்டத்தின் போது பிரிட்டிஷ் இராணுவத்தினரை துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வைக்குமாறு ஆத்திரமூட்டுவதற்கு கிலால்டி முயன்றதாக ஷமீர் தற்போது குற்றம் சாட்டுகிறார்.

எதிரியை ஆத்திரமூட்டி பொதுமக்களை தாக்க வைத்து பொதுமக்களின் காவலர்களாக தங்களை அடையாளம் காட்டுகின்ற தந்திரோபாயம் புலிகளுடைய நடைமுறையும் கூட. அது இலங்கை இராணுவமாக இருந்தால் என்ன, இந்திய இராணுவமாக இருந்தாலென்ன, மக்கள் குடியிருப்புகளில் நடத்தப்படுகின்ற கண்ணி வெடித் தாக்குதல்கள் இவ்வாறான ஒரு நடவடிக்கை தான். எதிரியை அழிப்பது மட்டும் தான் என்ற நோக்கம் இருந்தால் மக்கள் நடமாட்டம் அற்ற பிரதேசங்களில் தாக்குதல்கள் நடத்தப் பட்டிருக்கலாம். மக்களுக்கும் அழிவு ஏற்பட்டு மக்கள் எதிரி மேல் வெறுப்புக் கொள்ள வைக்கின்ற நடவடிக்கைகளாகத் தான் இவை இருந்தன. மறுபுறத்தில் பிரசாரங்களுக்கும் ஆட்சேர்ப்புக்கும் இது உதவியது.

அமிர்தலிங்கம் போன்றோரை கொன்ற பின்னர் புலிகள் தாங்கள் கொல்லவில்லை என்று மறுத்த போதும், முதன் முதலாக 'இந்திய உடன்'படிக்கையை ஆதரித்தார், இந்தியாவுடன் சேர்ந்து மக்களுக்கு துரோகம் செய்தார்' என்று தங்கள் கொலையை நியாயப்படுத்தியது மாத்தயா தான். ஆனால் இன்று அதே நிலை மாத்தயாவிற்கு வந்தது துர்லபம் தான். இங்கே குற்றம் சாட்டுகின்றவர்களின் கடந்த கால நடவடிக்கைகள் தான் இன்று குற்றம் சாட்டப்படுபவர் மீது நியாயம் இருக்கலாம் என்ற உணர்வை ஏற்படுத்துகின்றனவே ஒழிய அவர் குற்றமற்றவர் என்றல்ல. துரையப்பா முதல் பிரேமதாசா வரையான படுகொலைகளை சுலபமாக முடிவு செய்த அளவுக்கு மாத்தயாவின் தீர்ப்பை அமுல் செய்ய முடியவில்லை. முன்பொருபோதும் இல்லாதவாறு இன்று கீழ் மட்டத் தொண்டர்களின் கருத்துக்களை தலைவர் கேட்கிறார் என்று செய்தி வருகிறது. இதன் காரணம் ஜனநாயகம் மீதான வேட்கை அல்ல, மாறாக மரண தண்டனை கீழ்மட்டப் போராளிகளின் விருப்புக்கு ஏற்ப நிறைவேற்றப 'பட்டது என்று நியாயப்படுத்தி, யூதர்களின் வேண்டுகோளுக்கு இணங்க யேசுநாதரைச் சிலுவையில் அறையும்படி உத்தரவிட்ட பிலாத்து 'இதில் எனக்கு சம்பந்தமில்லை' என்று கையைக் கழுவிக் கொண்டது போன்று தப்பித்துக் கொள்ளும் நிலை தான். (மாத்தயாவை யேசுநாதருடனான ஒப்பீடல்ல இது). தேசதுரோக குற்றச் சாட்டு என்று கண்டுபிடித்த நிலையிலும் மரண தண்டனை வழங்குவதற்கான தயக்கம் என்ன? புலிகள் எதைச் செய்தாலும் அதை அப்படியே ஏற்றுக் கொண்டு அதற்கு விளக்கமும் கொடுக்கின்ற புலி ஆதரவாளர்களால் கூட ஜீரணிக்க முடியாமல் இருக்கின்ற ஒரு நிலை ஏன்?

ஷமீர் போன்று மாத்தயா மீது எந்தக் குற்றச்சாட்டையும் சுமத்த முடியவில்லை. ஒருவேளை மாத்தயா பிரபாகரனைக் கொன்று விட்டார் என்ற செய்தி வந்த காலங்களில் மாத்தயா இவ்வாறு எதையாவது செய்து விட்டு ஷமீர் சொன்ன அதே விளக்கங்களை, அதாவது தமிழ் மக்களின் உயிரிழப்புகள் குறித்து தலைவர் அக்கறை கொள்ளவில்லை, இதனால் தான் இந்த முடிவுக்கு வந்தேன் என்று சொல்லியிருந்தால் தமிழ் மக்கள் ஓரளவு ஏற்றுக் கொண்டிருக்கக்கூடும். தற்போதும் இந்தியாவின் சதி என்ற குற்றச்சாட்டிலும், பிரபாகரனின் மரணத்தை விடவும் மோசமான இழப்பை அந்த இந்தியாவின் சதி (?) புலிகளுக்கு கொடுத்திருக்கிறது. புலி ஆதரவாளர்கள் இயக்கம் மீது தற்போது கொண்டிருக்கும் சந்தேகம் கூட இந்தியாவுக்கு ஒரு வெற்றிதான். இந்த நிலையில்

## ஏடிட்டோரியல்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இயக்கத்தில் களை எடுப்பதைக் காட்டிலும் புத்திசாதுரியமான நடவடிக்கை, மாத்தயா மீதான கருத்துவேறுபாடுகளை நீக்கி இயக்கத்தை ஒருங்குபடுத்துவது.

ரணில் விக்கிரமசிங்க மாத்தயாவை விடுதலை செய்யும்படியும் அவர் இலங்கை அரசின் ஒற்றன் அல்ல என்றும் கூறும் அளவிலும் இருக்கிறது நிலைமை. இன்று மாத்தயா, உண்மை நிலை எதுவோ, ஒரு மிதவாதத் தலைவராகத் தான் வர்ணிக்கப்படுகிறார்.

துரோகத்திற்கான அதிகபட்சத் தண்டனை மரண தண்டனை தான் என்று இன்று புலிகளின் ஆதரவு வெளியீடுகள் தீர்ப்பு வழங்கி நிற்கின்றன. அரசியல் படுகொலைகள் தமிழ் ஈழப் போராட்டத்தின் ஆரம்ப காலம் முதல் விடுதலைக்கான வழியில் ஏற்படும் தடங்கல்களை முறியடிப்பதற்கான உபாயமாக கைக் கொள்ளப்படுகிறது. துரையப்பா தமிழினத் துரோகி என்று கொல்லப்பட்ட 'முதலாவது இராணுவத் தாக்குதல்' முதல் இன்று மாத்தயா வரை நீள்கின்ற இந்த துரோகி ஒழிப்பு பட்டியல் தமிழ் மக்களின் இனவிடுதலைக்கு என்ன முன்னேற்றத்தைத் தந்திருக்கின்றது?

அரசியல் படுகொலைகளால் ஒரு பாரிய மாற்றம் நடைபெறுமானால் அதற்கான நியாயப் படுத்தல்களை சில தடவைகள் ஏற்றுக் கொள்ள முடியலாம். கொடுங்கோலர்கள் அழிக்கப்படும் போது மாற்றங்கள் நிகழ்வதுண்டு. ஆனால் குருடன் தன் மனைவிக்கு அடிப்பதைப் போல, ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் சரி வரும் தானே என்றால் அது விளைவுகளை திட்டமிட்ட தந்திரோபாயம் அல்ல, அது புள்ளிவிபரவியல் நிகழ்தகவின் மீதான நம்பிக்கை. அல்லது வெறும் பழிவாங்கும் கொலைவெறி.

பாகிஸ்தானில் ஷியா உல் ஹக்கின் மரணம் அங்கு நிலைமை மாற வழிவகுத்தது. அவரது மரணத்தின் பின்னர் ஓரளவாவது மக்களின் ஜனநாயக்குரல் வெளிவர முடிந்தது. ஆனால் இந்திரா காந்தியின் கொலையால் எதைச் சாதிக்க முடிந்தது? பஞ்சாப் மீதான இந்திய அரசின் கொள்கை மாறியதா? இன்று பொலிஸ் தலைவரான கில் பஞ்சாப் கிளர்ச்சியின் முதுகெலும்பை ஒடித்துவிட்டதாகத்தான் செய்திகள் வருகின்றன.

துரையப்பா கொலை கூட்டணி அரசியலின் விளை பொருள். பின்னர் அதுவே புலிகளின் செயல்முறையாகி அமிர்தலிங்கத்தின் உயிருக்கு ஆபத்தாக அமைந்தது. அதே படுகொலை வெறி மாத்தயாவின் உயிருக்கு ஆப்பு வைக்கிறது. இந்த கொலைகள் தமிழீழப் போராட்டத்தில், அல்லது தமிழ் மக்களின் பிரச்சனைக்கான போராட்டத்தில் தமிழ் மக்களையோ புலிகளையே எவ்வளவு தூரம் முன்னே நகர்த்தியிருக்கின்றன? என்ன சூழ்நிலைகளை, நிபந்தனைகளைச் சாதகமாக்கியிருக்கின்றன?

ராஜீவ் கொலை என்ன பண்ணியிருக்கிறது? இந்திய அரசு புலிகள் பற்றியதும் இலங்கைப் பிரச்சனை பற்றியதுமான தனது கொள்கையை மாற்றியிருக்கிறதா? இந்திரா காங்கிரசை அரசுக்கு வர உதவியதுடன் இந்திய அரசு புலிகள் விடயத்தில் மிகவும் இறுக்கமான நிலைப்பாட்டை எடுக்க வைத்திருக்கிறது. 'தலைவர் தேடப்படுகிறார்' என்ற நிலையில்...

அதை விட மேலாக தமிழ் நாட்டில் ஈழப் போராட்டத்திற்கு இருந்த ஆதரவையும் சிதைத்து ஈழத்தமிழர் தமிழகத்தில் நடமாட முடியாத நிலையிலும் கொண்டு போய் விட்டிருக்கிறது. இன்று ஈழத்தமிழர்களால் மாவீரர்கள் என்று புகழப்பட்டவர்கள் கூட 'ஈழ மக்களுக்கு ஆதரவு, புலிகளுக்கு ஆதரவில்லை' என்ற நிலையில் இருக்கிறார்கள்.

பிரேமதாசா கொலை? இலங்கை அரசின் நிலைப்பாட்டில் மாற்றம் வந்ததா? விஜேதுங்க ஆட்சிப் பொறுப்பேற்றதும் ஏடிட்டோரியலில் 'எந்த சிங்களத் தலைவர்களையும் இனவாதம் என்ற நோய் பீடிக்கும்' என்று குறிப்பிட்டிருந்தோம். கொஞ்ச நாளில் பிரேமதாசாவை விட மோசமான இனவாதத்தை கக்குகின்ற ஒரு ஜனாதிபதி தான் கிடைத்திருக்கிறார். பிரேமதாசா இனப்பிரச்சனை இருக்கிறது என்பதை என்றாலும் ஏற்றுக் கொண்டவர். இவரோ பயங்கரவாதப் பிரச்சனை அன்றி வேறல்ல என்கின்றவர். பிரேமதாசாவின் கொலை சாதித்தது என்ன?

தங்கள் குரோத உணர்வை சாதித்துக் கொள்ள, மரண தண்டனை வழங்கியதன் கதிதான் இன்றைய தமிழினத்தின் சாபக்கேடான நிலை. துரையப்பா தமிழாராய்ச்சி மாநாட்டில் பத்துப் பேரின் மரணத்திற்கு காரணமானவர் என்று தமிழினத் துரோகி என்றால், ஜே.ஆர்? (இதற்காக ஜே.ஆருக்கு மரண தண்டனை தான் தீர்ப்பு என்பதல்ல வாதம்!). இந்திய ஒப்பந்தத்தை தமிழர் மேல் பலவந்தப்படுத்தியது தான் ராஜீவ் செய்த தவறு என்றால், ராஜீவ் மரணத்தின் பின்பும் இந்தியா அந்த ஒப்பந்தம் பற்றியே பேசுவதன் காரணம் என்ன? பிரேமதாசா ஏமாற்றி விட்டார் என்று மரண தண்டனை என்றால், விஜேதுங்க பிரச்சனை என்று ஒன்று இருப்பதையே ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லையே!

மற்ற இயக்கங்கள் அழிக்கப்பட்டு உறுப்பினர்கள் கூண்டோடு எரித்துக் கொல்லப்பட்டது எமது விடுதலை வாழ்வில் என்ன திருப்பத்தைக் கொண்டு வந்தது?

இந்தப் படுகொலைகள் எல்லாம் இனவிடுதலைப் போராட்டத்தின் தடைக் கற்களை அழிப்பதற்கான முயற்சிகள் அல்ல, இனவிடுதலைப் போராட்டத்தின் திசை மாறுவதற்கான தவறான வழிகாட்டிக் கற்கள். வெறும் குரூரமான பழிவாங்கல்கள். சகோதர இயக்கப் படுகொலை என்றால் என்ன, ஒரே இயக்க களையெடுப்பு என்றால் என்ன,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவை வெறும் கொலைகள் தான். விடுதலைக்கும் இவற்றிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. ஒரு சில மனிதர்களின் தன்னம்பிக்கையீனத்தின் வெளிப்பாடுகள். ஆனால் இனத்தின் தலைவிதியை மாற்றுகின்ற செயற்பாடுகள். அரசியல் படுகொலைகளில் ஆரம்பித்து படுகொலையே அரசியலாகி விட்ட துன்பகரமான நிலை எம்முடையது.

இந்த வரிசையில் இன்று மாத்தயாவின் சதி விசாரணை. மாத்தயாவிற்கு மரண தண்டனை கொடுப்பது தமிழ் மக்களின் விடுதலைக்கு என்ன பங்களிப்பு செய்யப் போகிறது? இது தான் உண்மையான பங்களிப்பு செய்யப் போகிறது என்று கருத வேண்டியுள்ளது. முதன்முதலாக புலிகளுக்கு எதிராக பகிரங்கமான ஆர்ப்பாட்டம் சிறிய அளவில் என்றாலும் நடைபெற்றிருக்கிறது. புலிகளின் நடவடிக்கைகளை கண்முடித்தனமாக ஏற்றுக் கொள்ளாமல் அதை சந்தேகக் கண் கொண்டு கேள்வி கேட்பவர்கள் எழுந்திருக்கிறார்கள். இதுதான் எங்கள் விடுதலைக்கான முதல்படி. இதுவரையும் புலிகளின் செய்கைகளை மக்கள் ஏற்றுக் கொள்கின்ற நிலை போய், மக்களின் எதிர்பார்ப்புகளை புலிகள் நடைமுறைப்படுத்துகின்ற நிலைக்கான மாற்றம் எனவும் இதைக் கொள்ளலாமா? மாத்தயாவின் மரண தண்டனை மீதான தயக்கமே, இனிமேல் மரண தண்டனை நிகழ்த்தப்பட்டாலும் கூட, புலிகளின் பலவீனத்தை மக்களுக்கு உணர்த்தி விட்டது. படுகொலைகள் மூலம் பகைவர்களைத் தேடிக் கொண்டு, இன்று மாத்தயா விவகாரத்தில் மக்களின் சந்தேகத்தையும் சம்பாதித்துக் கொண்டது தங்களை இன்னமும் தனிமைப்படுத்துகின்ற நிலையே!

இறுதியாக தனது சகாவைக் கொன்ற யிற்ஷாக் ஷமீருக்கு நடந்ததை சொல்வது பொருத்தமானது. ஐம்பதாண்டுகளுக்கு முன்னர் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டு பின்னர் அரசியல் நீரோட்டத்தில் கலந்து கொண்டு பிரதமரான ஷமீர் ஆட்சியிலிருக்கும் வரை 'ஒரு அங்குல மண்ணைக் கூட விட்டுக் கொடுக்க மாட்டேன்' என்று வீரம் பேசியவர். பலஸ்தீன விடுதலை இயக்கத்தை பயங்கரவாத இயக்கம் என்று பேச மறுத்தவர். இறுதியாக அதே பலஸ்தீன விடுதலை இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி சமாதானம் வேண்டும் என்பதற்காக இதே ஷமீரை இதே இஸ்ரேலிய மக்கள் ஆட்சியிலிருந்து அப்புறப்படுத்தி வந்த புதிய ராபினின் அரசு கோலான் குன்றுப் பிரதேசங்களை விட்டுக் கொடுக்கும் நிலை வரைக்கும் பேச்சுவார்த்தைக்கு வந்துள்ளது.

இன்று ஈழம் தான் முடிந்த முடிவு என்று தீவிரவாதம் பேசுவோர் நாளை சமாதானத்திற்கான வேட்கையில் மக்களால் தூக்கி எறியப்படவும் கூடும். நண்பன் யார், பகைவன் யார் என்று பேதமின்றி இரு தரப்பினரையுமே தங்கள் போராட்டத்திற்காக கொல்பவர்களுக்கு 'இந்த சரித்திரம் வழிகாட்டட்டும்'.

## தமிழ்த் தாய்..

இவரது கணவனினதும் அவரது உறவினர்களதும் துன்புறுத்தல் காரணமாக இவர் குழந்தைகளையும் கொன்று தானும் தற்கொலை செய்ய முடிவு செய்திருந்தார். தற்கொலை செய்ய நஞ்சருந்திய போது தப்பித்துக் கொண்டார். பின்னர் குளியலறையில் நீரில் மூழ்கித் தற்கொலை செய்ய முயற்சி செய்தும் தோல்வியில் முடிய தானே பொலிசாரை அழைத்து தான் கொலை செய்த விடயத்தை கூறியிருந்தார்.

## டென்மார்க்...

92ல் 200 குர்திஷ்காரர்கள் டென்மார்க்கிற்கு கப்பல் மூலம் அகதிகளாக வந்திருந்தனர்.

இதற்குள் தமிழ் அகதி ஒருவரின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதை அடுத்து நூறுக்கு மேற்பட்ட தமிழர்கள் டென்மார்க்கில் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர். தற்போது சுமார் 400 பேர் வரையில் டென்மார்க்கில் அகதி தஞ்சம் கோரியிருப்பதாகவும் இதில் நூறு பேர் வரை நிராகரிக்கப்பட்டு விரைவில் நாடு கடத்தப்பட உள்ளார்கள் என்றும் செய்திகள் கூறுகின்றன. 91 இல் டென்மார்க் வந்த பொன்னம்பலம் ராஜதுரை சேகர் என்ற இளைஞரை நாடு கடத்தியிருந்தனர், இன்னும் ஒருவரை நாட்டை விட்டு வெளியேறும்படி அறிவித்ததற்கே எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## புதிய பல்முக ஏவுகணையை இந்தியா பரீட்சிப்பு

இந்தியா தற்போது நீண்ட தூரம் பாயக் கூடிய நிலத்திலிருந்து வான் நோக்கிப் பாயும் ஏவுகணை ஒன்றை பரீட்சித்துள்ளது. 1430 றாத்தல் நிறையான இந்த ஏவுகணை ஒரே நேரத்தில் ஐந்து விமானங்களைத் தாக்கக் கூடியது பல்முனை கொண்டது. ஆகாஷ் என்ற பெயர் கொண்ட இந்த ஏவுகணை ஒரிசாவில் சண்டிப்பூர் தளத்திலிருந்து ஏவப்பட்டது.

சென்ற வாரம் இராணுவ அணிவகுப்பில் இந்தியா பிருத்வி ஏவுகணையை காட்சிக்கு வைத்திருந்தது. அது ஒரு தொன் குண்டுகளை 155 மைல்களுக்கு கொண்டு செல்லக் கூடியது. பாகிஸ்தானுக்கு அச்சுறுத்தலானது.

அக்கினி ஏவுகணை 1500 மைல் பாயக் கூடியது. இது சீனாவுக்கு அச்சுறுத்தலானது.

இந்தியாவுக்கு ரஷ்யா றொக்கட் தொழில் நுட்பத்தை விற்பதற்கு அமெரிக்கா தடை விதித்த போதும் இந்தியா இந்த முயற்சிகளில் வெற்றி கண்டு வருகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net .

# தேர்தலுக்கு பாதுகாப்பு

கிழக்கில் தேர்தலுக்காக பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப் பட்டிருப்பதாக இராணுவம் கூறியுள்ளது. மார்ச் முதலாம் திகதி நடைபெறவிருக்கும் தேர்தலில் பங்கு கொள்ளும் வேட்பாளர்களுக்கான கூட்டத்தில் பேசிய இராணுவ அதிகாரிகள் அரசியல் கட்சிகள் மக்களை வாக்களிக்க ஊக்குவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். மக்கள் பயமின்றி வாக்களிக்கலாம் என்பதை மக்களிடம் சொல்லும்படியும் இராணுவ அதிகாரிகள் வேட்பாளரிடம் கேட்டுக் கொண்டனர். இதுவரையும் தேர்தல் சம்பந்தமாக வன்முறைகள் நடைபெறவில்லை எனினும் ஒரு வேட்பாளர் கொல்லப் பட்டிருந்தார்.

நாற்பது உள்ளூராட்சி தேர்தல்களுக்கு இரண்டாயிரத்திற்கு மேற்பட்டோர் போட்டியிடுகின்றனர். திருமலை, மட்டக்களப்பு, அம்பாறை, வவுனியா மாவட்டங்களில் தேர்தல் நடைபெறவுள்ளது.

கிழக்குப் பகுதிக்கு தேர்தலுக்காக அதிகளவில் துருப்புகள் அனுப்பப படுகின்றன.

# இராணுவம் மோதல்

ஐதராபாத்தில் இராணுவ அதிகாரி ஒருவரின் பிள்ளைகள் இருவர் கடத்தப்பட்டிருந்தனர். இரண்டு நாட்களின் பின்னர் இவர்களின் உடல்கள் கிணறு ஒன்றில் கண்டெடுக்கப்பட்டன. 12 வயதும் எட்டு வயதுமான அவர்கள் கடத்தப்பட்டது குறித்து பொலிசாருக்கு அறிவித்தும் அவர்கள் விசாரணை எதுவும் செய்யவில்லை என்ற கோபத்தில் இராணுவ அணி ஒன்று பொலிஸ் நிலையத்தைத்தாக்கியதுடன் வீடுகளுக்கும்வாகனங்களுக்கும் தீ வைத்தது. பொலிசாரும் ஒரு உதவி பொலிஸ் கமிஷனரும் தாக்கப்பட்டனர். தாக்கிய பின்னர் அவர்களை ட்ரக்கில் ஏற்றிச் சென்று விடுவித்தனர்.

இது குறித்து விசாரணை செய்த பின்னர் குற்றவாளிகளாகக் காணப்பட்ட இராணுவத்தினர் மீது நடவடிகை எடுக்கப்படும் என்று இராணுவத்தளபதி தெரிவித்திருக்கிறார்.

*வேற்றுமையை மதிப்பிடுதல்*
*... சேவையை அங்கீகரித்தல்*

## பணிப்பாளர்

### *பொதுக்கொள்கை & பொதுக்கல்வி*

ஒன்ராறியோ மனித உரிமைகள் ஆணைக்குழுவைப் புதிப்பிப்பதற்கு பங்களிக்க விரும்புகிறீர்களா? ஸ்தாபன ரீதியான அபிவிருத்தித் திட்டங்களையும், இணைக்கப்பட்ட திட்டங்களையும் நிர்வகிக்க, எங்கள் சிரேஷ்ட அதிகாரிகள் குழுவில் இணைந்து செயற்பட வாருங்கள். நிறைவேற்று அதிகார பணிப்பாளரின் கீழ் பணிபுரிய வேண்டும். ஒன்ராறியோவில் பாகுபாட்டினை ஒழித்திடவும், மனித உரிமைகளைப் பேணி வளர்த்திடவும், தலைமைத்துவத்தைப் பொறுப்பேற்க வேண்டும்; திறமையான நம்பிக்கையான, உரிய நேரத்துக்கான வகையில், முக்கியமான ஸ்தாபனக் கொள்கைகளை அமல் செய்வதற்கானதாக உங்கள் நோக்கம், திட்டமிடும் ஆற்றல், தலைமைத்துவம், கூட்டுச் செயற்பாட்டுத் தகுதி ஆகியவை அமைந்திருக்க வேண்டும். நேரடியாக பொதுக் கொள்கையைத் திட்டமிடுதலும் தயாரித்தலும், இன-சமூக கொள்கை விடயங்களின் ஆய்வு/பகுப்பு ஆகியவைகளை மேற்பார்வையிடுதல், பொதுக்கல்வி நிகழ்ச்சிகளின் அபிவிருத்தி/ வழங்குதல் ஆகியவைகளுக்கு முன்னணியில் நின்று செயற்படுதல், பொதுமக்கள் தொடர்புச் சாதன நிகழ்ச்சிகளுக்குத் திட்டமிடுதல் மற்றும் செயற்படுத்தலுக்கு நேரடியாகப் பங்களிக்க வேண்டும். **இடம்: ரொறன்ரோ.**

**தகைமைகள்:** கொள்கை அபிவிருத்தி, பொதுக்கல்வி ஆகியவற்றில் நிரூபிக்கக்கூடிய அனுபவம்; சிரேஷ்ட நிர்வாக அனுபவம், மனித உரிமைகள், இனங்களின் முன்னெடுப்பு, சமூக நீதி, வேற்றுமை ஆகியவற்றின் கோட்பாடுகளை விளக்கக்கூடிய அறிவு; ஒன்ராறியோவில் மனித உரிமைகள் பிரச்சனைகள், அதன் நிலை, மனித உரிமைகள் சட்டம், சட்ட ஒழுங்கு முறைகள், கொள்கை அபிவிருத்தி, பொதுக் கல்வி, இனங்களின் கோட்பாடு, நிகழ்ச்சிகள், ஆய்வுகள், பிரச்சனைகள் தீர்த்தல், நிர்வாகத்துடனான உறவு பேணுதல், கூட்டாகச் செயற்படுதல், இணைந்து தொழில்புரிதல், விளக்கவுரை நிகழ்த்துதல், மனிதவள நிர்வாகத்தில் பயிற்சி ஆகியவை இருக்க வேண்டும். ஆங்கிலத்தில் திறமையான புலமை இருக்க வேண்டும்.

தகைமைக்கும் அனுபவத்துக்குமேற்ப சம்பளம் நிர்ணயிக்கப்படும்.

ஒன்ராறியோ மக்களின் வெவ்வேறான தன்மைகளைப் பிரதிபலிக்கும் வகையில் வேலைத்தலங்கள் அமைய வேண்டும் என்பதே ஒன்ராறியோ மனித உரிமைகள் ஆணைக் குழுவின் அர்ப்பணம்.

விண்ணப்பங்கள் 1994 பெப்ரவரி 24ம் திகதிக்குப் பிந்தாமல் பின்வரும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். பைல் இலக்கம் **OHRC-1/94/T-T** என்று குறிப்பிடவும். முகவரி- Management Board Secretariat, Ministry Support Branch, 595 Bay Street, Suite: 303, Toronto, Ontario, M5G 2C2.

**சகலருக்கும் வேலைவாய்ப்புச் சமத்துவம்**

Ontario



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அரசு புலிகளுக்கு அமெரிக்கா கண்டனம்

அமெரிக்க ராஜாங்க அமைச்சினால் கடந்த வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில் மனித உரிமைகளை மீறியதற்காக இலங்கை அரசும் புலிகளும் கண்டனத்துக்குள்ளாகியுள்ளன.

12 பக்கம் கொண்ட மனித உரிமைகள் நாட்டுஅறிக்கையில் '93ல் யுத்தத்துடன் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் மனித உரிமை மீறலில் ஈடுபட்டுள்ளனர் என்று கூறப்பட்டிருக்கிறது.

அரசாங்கம் மனித உரிமை மீறலை தடுகக நடவடிக்கை எடுத்த போதிலும் அது மெதுவாகவே நடைபெறுவதாக குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது.

கடந்த வருடத்தை விட சென்ற வருடம் குறைந்த அளவினரே தடுத்து வைக்கப்பட்ட போதும், சித்திரவதையும் துன் புறுத்தலும் அரச படைகளினாலும் புலிகளாலும் நடைபெறுவதாக அறிக்கை கூறுகிறது.

அரச படைகளும் புலிகளும் அரசியல் கொலைகளில் ஈடுபட்ட போதிலும் அந்த எண்ணிக்கை குறைந்துள்ளது. கடந்த மூன்று வருடங்களின் பின்னர் சிங்கள, முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டது பற்றி செய்திகள் இல்லை.

புலிகள் யாழ்ப்பாணத்திலும் முல்லைத்தீவிலும் நடத்திய கொலைகள் பற்றி குறிப்பிட்ட அறிக்கை புலிகள் தங்கள் எதிரிகள், அரசுக்கு தகவல் கொடுத்தவர்கள் என்று கூறிக் கொலை செய்வது பற்றியும் குறிப்பிட்டுள்ளது.

புலிகளால் கடத்தப்பட்ட பொலிசார் பற்றி இன்னமும் தகவல் இல்லை என்றும் தகவல் தர புலிகள் மறுப்பதாகவும் புலிகள் உயர்தர பாடசாலை மாணவர்களை சமையல்காரர்களாகவும் எழுது வினைஞர்களாகவும் வேலை செய்வதற்காக சேர்த்துக் கொண்டதாகவும் மற்ற இளைஞர்களை பங்கர் வெட்ட பலவந்தப்படுத்துவதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

# இந்து மதகுரு தாக்கப்பட்டார்

ஸ்காபரோவில் உள்ள துர்க்கை அம்மன் ஆலய நிறுவனர் தியாகராஜ கணேஷ் சுவாமிகள் கடந்த வாரம் முகமூடி அணிந்த இருவரால் கடந்த வாரம் தாக்கப்பட்டிருக்கிறார். இரவு பணிகள் முடிந்து ஆலயத்தை மூடி வீடு திரும்புவதற்கு தயாரான போது மூகமூடி அணிந்த இருவர் ஓடி வந்து அவரைத் தாக்கினர். வந்தவர்கள் எதுவுமே பேசாமல் அவரைத் தாக்கிய போதிலும் கையைப் பிடிக்கும்படி ஒருவர் சொன்னதிலிருந்து அவர்கள் தமிழர்கள் தான் என்று தெரிய வருகிறது. நிலத்தில் விழுந்த அவரை கடுமையாகத் தாக்கிய போது, அவரது மகன் அருகில் உள்ள ஆலயத்திற்கு சென்று உதவி கேட்ட போது அங்குள்ள அர்ச்சகரும் தர்மகர்த்தாவும் உதவிக்கு விரைந்த போது இருவரும் தப்பிச் சென்று விட்டனர்.

இது குறித்து பொலிஸ் விசாரணை நடைபெறுகிறது.

# அரசு மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம்

யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வராததையும் வாழ்க்கைச் செலவை கட்டுப்படுத்தாததையும் காரணம் காட்டி அரசாங்கத்திற்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வர எதிர்க்கட்சிகள் முடிவு செய்துள்ளன. இது சம்பந்தமான தீர்மானம் தற்போது தயாரிக்கப்பட்டு வருவதாக சுதந்திரக் கட்சியின் பிரதம கொறடாவான றிச்சாட் பத்திரான தெரிவித்துள்ளார்.

அடுத்த வாரம் சபாநாயகரிடம் இது கையளிக்கப்பட்டு விவாதத்திற்கான தேதி முடிவாகும் என்றும் அவர் தெரிவித்தார். மற்ற எதிர்க்கட்சிகளுடன் கலந்தாலோசித்து அவர்களின் ஆதரவைப் பெற இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

225 பேர் கொண்ட பாராளுமன்றத்தில் சுதந்திரக்கட்சி 67 ஆசனங்களைக் கொண்டுள்ளனது. மீதி இருபது ஆசனங்களும் மற்ற எதிர்க்கட்சிகளுக்குரியவை.

முன்பு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்ட போதும் அது தோல்வியில் முடிந்திருந்தன. தொடர்பு சாதனங்களின் கவனத்தை பெறுவதற்கான நோக்கம் இதுவென்றே கருதப்படுகிறது.

# மாத்தயா விசாரணை பற்றி கூட்டங்கள்

மாத்தயா விசாரிக்கப்படுகிறார் என்பது பற்றி தற்போது குடாநாடெங்கும் கூட்டங்கள் நடத்தி புலிகள் மக்களுக்கு அறிவித்து வருகிறார்கள். றோவுடன் சேர்ந்து சதி செய்ததான குற்றச்சாட்டு குறித்து தாம் மாத்தயாவை விசாரித்து வருவதாகவும் அவர் தற்போது வீட்டுக்காவலில் உள்ளார் என்றும் புலிகள் மக்களுக்கு அறிவித்துள்ளனர்.

ஆட் சேர்ப்புக்காக நடத்தப்படும் இந்தக் கூட்டங்களிலேயே மாத்தயா பற்றி தெரிவிக்கப்படுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தேர்தலில் போட்டியிட ஜனதிபதிக்கு பயம் சிறிமா கேலி

ஜனதிபதித் தேர்தல் இன்றி பாராளுமன்றம் மூலம் ஜனதிபதியைத் தெரிவு செய்யும் நோக்கத்துடன் அரசியலமைப்பை மாற்றுவது குறித்து ஜனதிபதி தெரிவித்த கருத்தை சிறிமாவோ எள்ளிநகையாடியுள்ளார். 'தன்னேடு போட்டியிட்டு தோல்வியுற வேண்டும்' என்ற பயம் காரணமாகவே இவ்வாறு முயற்சிக்கிருர் என்று சிறிமாவோ கூறியுள்ளார். தேர்தலுக்கு பயப்படாமல் தன்னேடு போட்டியிட்டு வெல்லும்படி சிறிமாவோ ஜனதிபதிக்கு சவால் விடுத்துள்ளார்.

இந்த அரசியலமைப்பு மாற்றத்திற்கு சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும், அதன் பின்னரே இது சாத்தியமாகும் என்பதையும் சிறிமாவோ சுட்டிக் காட்டியுள்ளார்.

சிறுபான்மையினரின் வாக்குகளால் தான் வெற்றி நிர்ணயிக்கப்படுவதை நிறுத்த வேண்டும் என்று காரணம் காட்டி ஜனதிபதி புதிய முறை பற்றி பிரஸ்தாபித்திருந்தார். ஆனல் சிறிமாவோ 'நாம் சிறுபான்மையினரையும் சேர்த்து செல்ல வேண்டும், அவர்களின் ஒத்துழைப்பைப் பெற வேண்டும், தோட்டத் தொழிலாளர்களின் வாக்குகளும் பெற வேண்டும்' என்று கூறியுள்ளார்.

# பயங்கரவாதத்தை அழிக்க வேண்டும் என்கிருர் ஜனதிபதி

நாட்டின் அபிவிருத்தியை உறுதி செய்வதற்காக பயங்கரவாதத்தை அழிக்க வேண்டிய அவசியம் முன்னெப்போதையும் விட விரைவாக உள்ளது என்று விஜேதுங்க தெரிவித்திருக்கிருர். 'வடக்கில் உள்ள எங்கள் சகோதரர்களுக்கு நாங்கள் கடன்பட்டிருக்கும் கடமை இது. எங்கள் சனத்தொகையில் மிகவும் கலாசார உயர்வு மிக்கதும் கடும் உழைப்புள்ளதுமான பிரிவின் எதிர்கால வளம் சுதந்திரமான சமூகத்திஞல் தான் உறுதி செய்யப்பட வேண்டுமே ஒழிய பாசிச சர்வாதிகாரத்திஞல் அல்ல' என்று சுதந்திர தினக் கூட்டத்தில் பேசும் போது ஜனதிபதி குறிப்பிட்டார்.

பெப்ரவரி நான்காம் திகதி இலங்கையின் 46வது சுதந்திர தினத்தைக் கொண்டாட்டங்களின் போது பேசி ஜனதிபதி 'முன்னெப்போதுமில்லாத குரூரத்தனத்தைக் கொண்ட பயங்கரவாதம் இது' என்று வர்ணித்தார்.

இலங்கைக்கு சுதந்திரம் வழங்கப்பட்ட சுதந்திர சதுக்கத்தில் நடைபெற்ற வைபவங்களின் போது 21 மரியாதை வேட்டுக்களையும் ஜனதிபதி ஏற்றுக் கொண்டார்.

அடுத்த மாத தேர்தல்களை புலிகள் குழப்ப விடமாட்டோம் என்ற ஜனதிபதி ஜனநாயகத்திற்கு எதிரான சக்திகள் சுதந்திரமான வாக்களிப்பை தடுக்க சதி செய்ய விடமாட்டோம் என்றும் தமிழர், சிங்களவர், முஸ்லிம்களின் கூட்டு முயற்சியால் தான் இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தது என்றும் எங்கள் ஐக்கியமே எங்கள் சக்தி என்றும் கூறினர்.

# பாப்பரசர் இலங்கை வருகிருர்

பாப்பாண்டவர் இரண்டாம் ஜோன் போல் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார். அடுத்த வருடம் தை மாதம் இவர் இலங்கைக்கு செல்வார். பிலிப்பைன்ஸ்க்கு தை 18ம் திகதியும் பின் அவுஸ்திரேலியாவுக்கு தை 19ம் திகதி செல்லும் இவர் இலங்கைக்கு தை மாதம் 20ம திகதி செல்வார். முன்பு ஆரும் சின்னப்பர் இலங்கைக்கு விஜயம் செய்தது குறிப்பிடத்தக்கது.

# மீண்டும் ஐ.நா அமைப்பு


ஐ.நா அகதிகள் ஸ்தானிகரலாயம் மீண்டும் தனது செயற்பாடுகளை ஆரம்பிக்க உள்ளது. புலிகளுடன் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் பின்னர் இநத முடிவு எடுக்கப்பட்டுள்ளது. மடுவில் அகதிகள் முகாமில் நடைபெற்ற களேபரங்கள் தொடர்பாக நிறுவனம தனது பணிகளை இடைநிறுத்தியிருந்தது. தனது அதிகாரிகளுக்கு பாதுகாப்பு இல்லை என்று கூறி நிறுத்திய பணிகளை தற்போது நடத்திய பேச்சுவார்த்தைகளின் பின்னர் தொடங்க உத்தேசித்து ள்ளது. தப்பபிப்பிராயங்கள் நீக்கப்பட்டதாகவும் இது குறித்து தலைமைப்பீடத்திற்கு அறிவிக்கப்பட்டு அங்கிருந்து பதில்வந்ததும் பணிகள் தொடரும் என்றும் இலங்கைப் பிரதிநிதி தெரிவித்திருக்கிருர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# GOOD BYE BALDNESS



## முடி உதிர்பவர்களுக்கு ஒரு நற்செய்தி

ஒரு சிறு குமிழ்
உங்கள் கேசத்தை
வளரச் செய்கிறது


பரீட்சித்துப் பாருங்கள்
Try First

பலர் இச்சிகிச்சை மூலம் பயன் அடைந்துள்ளனர்

239 Carlton St
Toronto, Ont
Tel:922-0478


## சிறந்ததையே தெரிவு செய்யுங்கள்!

## Dr.ROBERT VITAMOL, BETTER THAN VIVA HORLICKS




VITAMOL சத்துள்ளதாகவும் மிகுந்த சுவையுள்ளதாகவும் இருப்பதால் விவா ஹோர்லிக்ஸை விட விட்டாமோலை பலர் விரும்புகின்றனர். விட்டாமோல் டாக்டர்.றெபேட்டினுல் தயாரிக்கப் பட்ட சத்துணவுப் பானமாகும். விட்டமின்கள், இரும்புச் சத்து, கல்சியம், தேன் கொண்ட ஒரே சத்துணவுப் பானம் இது. உடலின் சகல பகுதிகளுக்கும் தேவையான உணவு இது. உதாரணமாக கல்சியம் எலும்புக்கு அவசியமானது. விட்டமின்களும் இரும்புச் சத்தும் இரத்தக் குறைபாட்டைத் தடுக்க அவசியமானது. எனவே சிறந்ததைக் கொண்டு உங்கள் உடலுக்கு உணவளியுங்கள். ஒவ்வொரு போத்தல் விட்டாமோலிலும் அதிகம் பெறுங்கள். தரம், அளவு, விலை என்பவற்றை ஒப்பிடுங்கள். தரத்திலும் பெறுமதியிலும் சிறந்த விட்டாமோலைக் கேட்டு வாங்குங்கள். விட்டாமோல் குழந்தைகளுக்கும் வயதானவர்களுக்கும் பரிந்துரை செய்யப்படுகிறது.

### NERVOGEN NERVE FOOD




உடலின் கடுமையாக உழைக்கும் பகுதிகளான மூளை, சிறுநீரகம், ஈரல், இதயம் போன்றவற்றிற்கு சிறந்தது. சனட்டோஜனை விட சிறந்த புரதத்தைக் கொண்டிருப்பதுடன் சுவையானதும் கூட. சிறந்த மன வளர்ச்சிக்கு கேட்டு வாங்குங்கள்.


அமெரிக்காவிலும், கனடாவிலும் மேற்கிந்திய தீவுகளிலும் கிடைக்கும்.
Universal Foods & Merchandise Co,
(416) 535-3118, Toronto, Canada

### CHATAK: CURRY EXCELLENT




Chatak Madras Curry Powder *இன்றைய நிலையில் சிறந்த கறி பவுடராகும். 475 வருட காலமாக வரும் பாரம்பரியப்படி தயாரிக்கப்பட்டது. மற்ற கறி பவுடர்களை விடச் சிறந்தது.* Chatak Meat Seasoning, Fish Seasoning, Tandoori Chicken Mix *போன்றவையும் கிடைக்கும்.*

### DR.ROBERT'S GLUCOSE




குளுக்கோஸ் மரக்கறிகளிலும் பழங்களிலும் இயற்கையாகக் கிடைக்கிறது. டாக்டர் றெபேட்டின் குளுக்கோஸ் இயற்கையான மூலப்பொருட்களிலிருந்து அதிஉயர் தரத்திற்கு தூய்மைப்படுத்திப் பெறப்பட்டது. இது உடனடியான சக்தித் தேவைகளுக்குரியது. மூளை, இரத்தம், ஈரல், தசைகள் போன்றவற்றிற்கு சிறந்தது. பால்குடிக்கும்குழந்தைகளுக்கும் வயதானவர்களுக்கும் சிறந்தது, ஏனெனில் இது உடலினுல் உடனடியாக உறுஞ்சப்படுகிறது

அன்பளிப்புப் பொருட்கள், பொம்மைகள், இலங்கை உணவுப் பொருட்கள், மேற்குறிப்பிட்ட பொருட்கள் அனைத்திற்கும் தொடர்பு கொள்ளுங்கள்

BUDGET SUPERSAVINGS DISCOUNT
1340 Queen st west (East of lansdowne)
Tel:(416) 5370394

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# குழந்தைக்காக ஏங்கும் இதயங்கள்

**சிவப்பிரகாசம்**

"குழலினது யாழினிது என்பவர் தம்மக்கள் மழலைச் சொல் கேளாதவர்" என வள்ளுவன் சொல்லிவிட்டு வானுலகு சென்றுவிட்டான். குழந்தை பெற முடியாதவர்களுக்கு அந்த வாக்கு எப்படிச் சுட்டிருக்கும் என அவன் நினைத்துப் பார்த்தனு? "ஆருதே வாயினுல் சுட்ட வடு" என்று சொன்னதும் அவன்தான். அந்த மழலைச் செல்வம் என்பது கிடைக்கவில்லை என மனம் வேதனைப் படுபவர்கள் எத்தனையோ பேர். மனைவி அமைவது மட்டும்தான் இறைவன் கொடுத்த வரம் என்று நினைக்காதீர்கள். குழந்தைகளும் அமைவதற்கு அவன் கருணை தேவை என பலர் சொல்லிக் கொள்வதை காண்கிறோம்.

**விஞ்ஞான மூலம் குழந்தை;**

கணவன் மனைவி இருவருமே குழந்தை உருவாக்க கூடிய ஆரோக்கியமானவர்களாய் இருந்தும் சில குடும்பத்தில் குழந்தைப் பாக்கியம் இல்லாதிருக்கிறது. கருவை தாங்கக்கூடிய உடல்நிலையை மனைவி கொண்டிராததும் ஒரு காரணம். இவ்வாருன சூழ்நிலையில் மருத்துவ ரீதியாக பெண் கருத்தாங்க கூடிய நிலைக்கு ஆக்க முடியா தாயின் அவர்கள் இனி மழலைச் செல்வத்தை அனுபவிக்க முடியாது என்ற பொருள் அல்ல. கணவனின் ஆண் உயிர்தாதுவும் மனைவியின் பெண் உயிர்தாதுவும் குறைபாடு அற்றதாயின் அவற்றை இணைத்து கருவாக்கி இன்னெரு பெண்ணின் கருப்பையில் பொருத்தி ஆரோக்கியமான குழந்தை ஒன்றைப் பெற்றுக்கொள்ளலாம். "அவன் – அவள் – அது" படத்தில் வந்த விஷயத்தையே இங்கு குறிப்பிடுகின்றேன். குழந்தையை தனது கருப்பையில் "வளர்க்கும் தாயின்" கடமை குழந்தை பெற்றுத் தருவதுடன் முடிவடைகிறது. அந்தத் தாய் உறவினராயும் இருக்கலாம் அல்லது "வாடகை" ஆகவும் இருக்கலாம். இவ்வாருன முறையில் குழந்தை பெற்றுக் கொள்வது சட்டப்படி மேலைத்தேசங்களில் உடன்பாடானது. வட அமெரிக்காவில் உள்ள பல வைத்தியசாலைகளில் இதைச்செய்து கொள்ள முடியுமாம். ஆனுல் பணம் கொஞ்சம் செலவாகும்.

மனைவியின் உயிர்தாதுவும் கணவனின் உயிர்த்தாதுவும் குறைபாடு அற்றதாய் இருக்க சில நோய் காரணமாக கணவன் உடலுறவுக்குரிய தேக ஆரோக்கியத்தை இழந்திருப்பினும் மேலே கூறப்பட்ட முறையில் இணைக்கப்படுகிறது. தனது குழந்தையை தானே கருப்பையில் சுமக்கிருள் சொந்தத் தாய். இம்முறை கலாச்சார வரம்புக்குள் வந்துவிட்டது என தமிழ் மக்கள் கருதுவதால் இவ்வாருன நிலையில் உள்ள பல தமிழ் குடும்பங்கள் பயன் பெற்றுள்ளன. குழந்தை என்ன முறையில் உருவாக்கப்பட்டது என்பது வெளியாருக்கு தெரியவராமல் பாதுகாத்தால் வெறும் வாயை மெல்லும் சமூகத்துக்கு அவல் கிடைக்க வழியில்லை. நீங்கள் தப்பித்தீர்கள்!

ஆணின் உயிர்த்தாதுகளில் குறைபாடு இருந்தால் என்ன செய்வது? அந்தக் குடும்பம் மழலைச்செல்வத்தை அனுபவிக்க முடியாதா? இதற்கும் வழி உள்ளது. மேலைத்தேச நாடுகளில் "விந்து வங்கி" என ஒன்று உண்டு. பல உடல் ஆரோக்கியம் மிகுந்தவர்கள், கல்விமான்கள் போன்றவர்களின் உயித்தாதுகள் பெறப்பட்டு இங்கே சேகரித்து வைப்பார்கள். இந்த வங்கியில் இருந்து ஆண் உயிர்தாதுவைப் பெற்றுக்கொள்ள முடியும். "விந்து வங்கி"யில் சகல விபரமும் அந்தரங்கமாகவே வைத்திருப்பார்கள். பெண்ணின் கருப்பையில் செயற்கையாக அவை செலுத்தப்பட்டு கரு உருவாக்கப்படும். இதுவும் செலவு அதிகமான முறையே. இந்த முறையை தற்சமயம் தமிழர்கள் விரும்பமாட்டார்கள் பெறப்பட்ட விந்து வேற்று இனத்தவருடையதாக இருப்பின் குழந்தை நிறம் மாறிப் பிறக்க சிக்கல் வேறு மாதிரிப் போய் முடிந்துவிடும் என்ற பயமே அது.

இங்கு கூறப்பட்ட எந்த முறையும் பண்பாட்டையோ ஒழுக்கத்தையோ அசுத்தம் செய்வன அல்ல. ஆனுல் அடுத்தவனின் குறைபாட்டுக்கு ஆலோசனை சொல்லாது அதையே தமது பட்டி மன்றமாக மாற்றும் பழக்க தோஷம் எமக்கு உள்ளவரை இம்முறைகளை நாடும் குடும்பங்கள் சற்றுப் பின்னிற்கவே செய்யும். குடும்ப நன்மைக்காக சில விஷயங்களை நீங்கள் செய்யும் போது அவற்றை குடும்பத்துக்கு உள்ளேயே மிக அந்தரமாக வைத்துக்கொண்டால் பல பின்னுக்கு வரும் மனக்குமைவுகளை முன் கூட்டியே தவிர்த்துக் கொள்ளலாம். நான் குடும்பம் எனக் குறிப்பிட்டது கணவன் மனைவியை மட்டுமே. சகோதரங்கள் கூட அந்த வரையறையுள் வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இனி குழந்தை அமைவதற்கு கையாளப்படும் மற்ற முறைகளைப் பற்றிப்பார்ப்போம்.

**கடவுள் பக்தியும் குழந்தைப்பேறும்;**

பிள்ளைப்பேறுகேட்டு கோவில் கோவிலாக யாத்திரை செய்வதும் நாம் அறிந்த விடயம். சில குறிப்பிட்ட கோவிலுக்குப் போனுல் கட்டாயமாக பிள்ளை வரம் கிடைக்கும் என்றும் சில விரதங்கள் அனுஷ்டித்தால் கடவுள் கைவிடமாட்டார் என்றும் இந்துக்களிடம் ஒரு நம்பிக்கை இருக்கிறது. சில விரதங்கள் அதற்கென்றே விஷேடமாக கூறப்பட்டுள்ளன. பட்டினி கிடப்பதற்கும் பாகம் நோக நடப்பதற்கும் கருப்பையில் (அகப் பை) குழந்தை உருவாகுவதற்கும் என்ன சம்பந்தம்? என கேலி செய்பவர்கள் சில தாக்கங்களை கருத்தில் கொள்ளவில்லை. கோபம் கொள்ளும் போது சில நோய்களின் தாக்கம் அதிகரிப்பதாயும் சந்தோசமாக இருக்கும் போது அது குறைவதாயும் மருத்துவர்கள் கூறும் போது மனநிலைக்கும் உடல்நிலைக்கும் சம்பந்தம் இருக்கிறது என்பதை ஏற்றுக்கொள்கின்றீர்கள் அல்லவா? அது போலத்தான் தீவிர நம்பிக்கையால் ஏற்படும் மனநிலைக்கும் அதனுல் அகலும் உடற்குறைக்கும் ஏன் தொடர்பு இருக்கக்கூடாது. புத்திர பாக்கியத்துக்காக செய்யப்படும்

**32ம் பக்கம் பார்க்க...**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புத்தி(யற்ற)ஜீவியின் புத்தி கெட்ட செயல்

## நிலா குகதாசன்

ஆசிரியர்
"சுபமங்களா"
ஐயா!

தங்களின் "சுபமங்களா" ஜனவரி 94 இதழில் மகரந்தன் என்பவரால் எழுதப்பட்ட "கனடாவில் தமிழ்" என்னும் கட்டுரையில் வெளிச்சத்துக்கு வராத பல செய்திகளை இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது. யார் இந்த இலக்கிய(வியாதி)வாதி என்று இங்குள்ள பத்திரிகைளால் தேடப்பட்டு வரும் இந்த மகர(ந்)தனின் எந்தவொரு ஆக்கமும் இதுவரை கனடாவில் வெளியானதில்லை என்பதுடன், இன்றுவரை தன்னை யாரென்று அடையாளம் காட்டும் துணிவில்லாத இவரெல்லாம்தமிழ் வளர்க்க முன்வந்ததுதான் வேடிக்கை.

எந்தவொரு விடயம் பற்றியும் தரவுகளையோ பதிவுகளையோ கொடுக்கும்போது அதில் காழ்ப்புணர்ச்சி தவிர்க்கப பட வேண்டியது. எதிரியா யிருந்தாலும் அவனது பலம், பலவீனம் நிச்சயமாகக் குறிப்பிட வேண்டியது அவசியம். அந்த அடிப்படை மரபுகள் கூடத் தெரியாத இந்த இலக்கிய விபசாரி எப்படி "சுபமங்களா" போன்ற ஒரு சஞ்சிகைக்கு எழுத முற்பட்டார்? அதுமட்டுமன்றி ஒரு முக்கியமான தகவல் பற்றி எழுதும்போது தனது சொந்தப் பெயரிலோ அல்லது அறிமுகமான புனைபெயரிலோ எழுதாமல் ஒரு புதியபெயரில் மறைந்துள்ள இந்த மகர(ந்)தன் யார்?....

பொதுவாகவே இங்குள்ள புத்திஜீவிகளுக்கும் (அல்லது புத்தி ஜீவிகளாகத் தம்மை நினைப்பவர்களுக்கும்) ஒரு குணம் உண்டு. அதாவது தம்மையாராவது வெளிநாட்டவரோ அல்லது ஒரு விசய ஞானமுள்ளவரோ ஒரு இலக்கியவாதியாக, ஒரு படைப்பாளியாக, ஒருகலைஞனை அங்கீகரிக்க வேண்டுமென்ற அவா. இது எமது மொத்தத் தமிழினத்திற்குமே ஓரளவு பொருந்தும். ஒருவர் திறமைசாலி என்பதை அங்கீகரித்தால் போதும் உடனே சேர்ந்து ஆமா போடுவது இந்த வகையில் வசிட்டர் வாயால் பிரம்மரிஷிபட்டம் பெறும் எண்ணத்தின் வெளிப்பாடுதான் இந்தக் கனடாவில் தமிழ் கட்டுரையின் பிறப்பு.

மேற்படி கட்டுரையில் மகர(ந்)தன் குறிப்பிட்ட தரமான எழுத்தாளர்களில் சிலர் இதுவரை யாரென்று யாராலுமே அறியப்படாதவர்கள். சிலவேளை அவர்கள் விமர்சகரின் உறவினராகவோ அல்லது பணம் கொடுத்துத் தம்மையும் இணைத்துக் கொண்டவர்களாகவோ இருக்கலாம்.

மேற்படி கட்டுரையில் மறக்கப்பட்ட அல்லது மறைக்கப்பட்ட சில தரவுகளைத் தருகிறேன்.. காலாண்டிதழாக அறிமுகமாகி விரைவில் மாத இதழாக மலரவுள்ள "ரோஜா", கடந்த மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக மாதந்தோறும் கனடாவிலுள்ள தமிழர்களுக்கு தேவையான தகவல்களுடன் இலவசமாக வெளியாகும் தரமான சஞ்சிகை "தமிழர் தகவல்" (இதன் மூன்றுவது ஆண்டுவிழா அண்மையில் TORONTO CITY HALL சிறப்பாகக் கொண்டாடப் பட்டது) கனடாவின் முதலாவது வீடியோ சஞ்சிகை "இளையநிலா" இவைதவிர கனடாவின் முதலாவது தமிழ் வானொலியான உலகத்தமிழர் இயக்கத்தின் "தமிழ்ச்சோலை" முதன்முறையாக F.M அலைவரிசையில் ஒலிபரப் பாகும் "கீதவாணி" எழுத்தாளர்கள் பட்டியலில் பல முன்னணி எழுத்தாளர்களும், பத்திரிகை ஆசிரியர்களும் மறக்கடிக்கப் பட்டுள்ளனர். சரியான தரவுகள் இல்லாத பட்சத்தில் பல எழுத்தாளர்கள், இலக்கிய முயற்சிகள் என்று பொதுவாகக் குறிப்பிட்டிருக்கலாம். மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்பதை அங்கீகரிக்காத இந்த மகர(ந்)னின் கண்களில் உலகத்தமிழரால் நடத்தப்படும் நூலகம் தட்டுப்படாதது மிகவும் விந்தையே!

வாயில் நுழையாத வெளிநாட்டு எழுத்தாளர்களை வரிக்கு வரி அழைக்கும் இவர் போன்றோர் ஏனோ தமிழிலும் தரமான எழுத்தாளர்கள், நாடகாசிரியர்கள இருக்கின்றனர் என்பதை ஒப்புக்கொள்ளும்

கிறிஸ்தவ
திருமணங்களில்
மணப்பெண்ணிற்கான
தலைச்சோடனை,
அலங்காரப்
பொருட்கள்
குறைந்த விலையில்
வாடகைக்கு
பெற்றுக் கொள்ள
மாஜி
796 2672

பூங்கொத்துக்கள்
நீங்கள் விரும்பிய
வடிவங்களில்
பெற்றுக்
கொள்ளலாம்
Net, Colorful Flower
Bouquet, Flower
Basket



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பக்குவமற்றவர்கள் இதனால் நான் மொழிபெயர்ப்புக்கு எதிராளி என்பதல்ல, எதற்கெடுத்தாலும் வெளிநாட்டு எழுத்தாளரை ஒப்புவிக்கும் இவர் போன்ற புத்தி (யற்ற) ஜீவிகள் எமது இலக்கியங்களையும் ஏன் ஒப்புக் கொள்ளக்கூடாது?

எனக்கென்று சில தனிப்பட்ட கருத்துக்களுண்டு. ஈழத்து இலக்கியமோ, சினிமாவோ இன்றுவரை இருளில் இருக்கக் காரணம் தென்னிந்திய ஆதிக்கம், குப்பையாகிவிட்ட தென்னிந்திய சினிமா, பத்திரிகைகளுக்கு முன்னால்போட்டி போடமுடியாமல் ஈழத்துப் படைப்புக்கள் இல்லாமற் போனதற்குச்சான்றுகள் பலவுண்டு எமது ஈழத்து வரலாற்றின் மகர(ந்)தன் போன்ற ஒருசில இலக்கிய விபசாரிகளின் தவறான தரவுகள், பதிவுகளால் பல நல்ல படைப்பாளிகளும், இலக்கியங்களும் வெளியுலகத்துக்கு அறிமுகமாகாமலே அழிந்து போனார்கள். ஆனால் அண்மைக் காலங்களாகத் தமிழக சஞ்சிகைகளிலும் குறிப்பாகச் "சுபமங்களா" வில் ஈழத்து எழுத்தாளர்களுக்கு வரவேற் புள்ளதை அவதானித்துள்ளேன். ஆனால் இந்த மகரந்தன் போன்ற இலக்கிய விபசாரிகளின் பெயரால் இனி "சுபமங்களாவும் இதுபோன்ற ஆக்கங்களை நன்கு பரிசோதித்த பின்பே பிரசுரம் செய்யவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்காக வருந்துகிறேன்.

மொத்தத்தில் வெளிநாடு களில் தரமான சஞ்சிகையென்று பெயரெடுத்து வரும் "சுபமங்களா"வில் வந்த இந்தக் கட்டுரை கனடாவிலுள்ள தமிழர்வகைதுறை நிலையத்தை சேர்ந்த ஒருவரின் கைங்கர்யம் என்பது தெள்ளந் தெளிவாகிறது. மேற்படி நிலையத்தை வெகுவாகப் புகழ்ந்தும், அதைச் சார்ந்தோரை எழுத்தாளர் வரிசையில் இணைத்திருப்பதும் இதற்குச சான்று. இனி இந்த மகரந்தன் செய்யவேண்டியது ஒன்று.... பகிரங்கமாக "சுபமங்களா" மூலம் தன்னை அடையாளம் காட்டி இதில் சம்பந்தப்பட்ட அனைவரிடமும் மன்னிப்புக் கேட்பாரா? கேட்பதன் மூலம் ஈழத்து எழுத்தாளர்கட்கு ஏற்பட்ட அவமானத்தை போக்க வேண்டும் அல்லது வெகுவிரைவில் அவர் யாரென்பதை வாசகர்களும், எழுத்தாளர்களும் கண்டுபிடித்து பகிரங்கப்படுத்த வேண்டிவரும்.

நன்றி
அன்புடன்
நிலா குகதாசன்
கனடா

# கனடாவில் தமிழ்: ஒரு இலவச இணைப்பு

"இலக்கிய (வியாதி) வாதியாகவும் வளர்ந்துவிட்ட ஒரு எழுத்தாளரையும் தன்னை இனம்காட்ட நினைத்தவர்தான் இந்த மகர(ந்)தன். வரிக்குவரி வாயில் நுழையாத எழுத்தாளர்களைத் துணைக்குக் கூப்பிடுவது இன்றைய புத்திஜீவிகளின் அடிப்படைத் தகுதி. அவர் என்ன சொன்னார்? இவர் என்ன சொன்னார்? என்பதே இவர்களின் வாதமே தவிர தாம் என்ன சொல்கின்றனர் என்பது அவர்களுக்கே தெரியாது,

புரியாத எழுத்துக்களையும்,

தமக்கே தெரியாத கருத்துக்களையும் கூறுவதும் ஒரு வேற்றுமொழியாரின் எழுத்தைச் சிலாகித்துக்கூறுவதும் இன்றைய புத்தி(யற்ற) ஜீவித்தனம். இந்தவகையில் தன்னை ஒரு "ஜீனியஸ்" ஆகத் தானே நினைத்து எழுதியதுதான் இந்தக் "கனடாவில் தமிழ்" இது பற்றி எழுதமுன் ஒரு இலக்கியவாதி பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். சில காலங்களுக்கு முன் இங்கு ஒரு கவிதை நூல் வெளியானது அதில் சில கவிஞர்களின் கவிதைகள் இடம் பெற்றன. அச்சமயம் கவிதைகளைத் தெரிவு செய்யும் பொறுப்பு ஒருவரிடம் விடப்பட்டது, அவர் கவிதைகளை ஆராய்ந்தபோது அதில் சில கவிதைகளை எங்கோ வாசித்த உணர்ச்சி ஏற்பட்டது, சற்று ஆழமாக ஆராய்ந்தபோது அவை பல காலங்களுக்கு முன்னர் கணையாழியிலும் அதைவிட ஒரு கவிஞரின் தொகுப்பிலும் இடம் பெற்றதை அறிந்தார் இதை மேற்படி கவிஞரிடம் குறிப்பிட அவர் அந்தக் கவிதைகளை விட்டுவிட்டு வேறு புதிய கவிதைகளை இணைத்தாராம். இதுபோலவே இங்கு வெளிவரும் ஒரு இலக்கிய சஞ்சிகையில் தமிழன் பனின் கவிதை இன்னுமொருவரால் பெயர்மாற்றி வர அதை அடுத்த சஞ்சிகையில் திருத்தவேண்டியதாயிற்று. இப்படியும் இலக்கிய வியாபாரிகளுள்ளனர்.

இன்று ஒரு புதிய பெயரில் ஒருவர் பதுங்கியுள்ளார்.வேடிக்கை என்னவென்றால் அவரால் தவறவிடப்பட்ட ஒரு வானொலித் தயாரிப்பாளரிடம் சொன்னாராம், "ஆரெண்டு தெரியேல்ல.. கிட்டடியில சுபமங்களாவில ஒரு கட்டுரை வந்தது, அதில பல விசயங்கள எழுதேல்ல, உங்கட ரேடியோ பற்றியும் எழுதஇல்ல...." இது எப்படியிருக்கு? போன தாயகத்தில கியூரியஸ் ஜி கடித்திருந்தார் ஆனால் முனி பதிலில் இந்தக் கட்டுரை ஏன் தேடகத்திற்கு எதிரானவர்களால் எழுதப்பட்டிருக்கக் கூடாது? என்று கேட்டிருந்தார் ஐயா முனியே! என்ன நடந்தது? சரி, இன்றுவரை தேடகம் ஏன் இதற்கு மறுப்பு எழுதவில்லை? மகர(ந்)தனின் எழுத்தை சரியென்கிறதா? அல்லது மகரந்தன் தமது அங்கத்தவர் என்று துணை போகிறதா? அல்லது அபிப்பிராயம் சொல்லத் துணிவில்லையா?

இங்கு ஒரு விடயத்தை குறிப்பிட விரும்புகிறேன். இளையநிலாவின் பெயரையோ அல்லது என் பெயரையோ

**32ம் பக்கம் பார்க்க..**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# செத்துக் கொண்டிருக்கும் சமூக பொறுப்புணர்ச்சி...

## விழிப்பு

மார்ச் 1992 இல், கணவன் தன்னை நிரந்தரமாக கைவிட்டு விட்டார் என்ற நம்பிக்கையில், உடல் இயக்கமற்ற ஒன்றரை வயது பெண் குழந்தையையும், இரண்டரை வயது பெண் குழந்தையையும், பேணிக்காக்க யாருமில்லாத சூழ்நிலையில், தமிழ் பெண்ணொருவர் தன்னையும் அழித்து, பிள்ளைகளையும் இவ் ஆதரவற்ற உலகிலிருந்து எடுத்துவிட முடிவு செய்தார். இரு குழந்தைகளும் உயிரிழந்தார்கள் ஆனால் துரதிஷ்டவசமாக அப்பெண் (அப்படித்தான் இன்றும் நினைக்கிறார்) தாய் உயிர்பிழைத்தார்.

பிள்ளைகளை கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டில் சிறைதண்டனை அனுபவித்துக் கொண்டிருக்கும் இவரது குற்றவியல் வழக்கு விசாரணை ஜனவரி 17ம் திகதி முதல் 24ம் திகதி வரை நடந்தது. பெப்பிரவரி 4ம் திகதி, காலை 10 மணியளவில் இவருக்கு தீர்ப்பு வழங்கப்பட்டது. இவர் கணவனது துன்புறுத்தல், தனிமைப் படுத்தப் படல், உறவினர்களின் புறக்கணிப்பு, பாராமுகம், சமூகத்தில் உதவி செய்யக் கூடிய மூலங்களை அறியாமை ஆகியவற்றின் கூட்டுத்தாக்கத்திற்கு பலியானவர். உண்மையில் இவர் ஆயிரத்தில் ஒருவரல்ல, எமது சமூகத்தில் இன்று பரவலாக பல பெண்கள் அனுபவிக்கும் அனுபவங்களே இவை என்பதே பயங்கர உண்மை. மீண்டும் மீண்டும், பாரம்பரியத்தை பேணவென்றும், வளரும் குழந்தைகளுக்காகவென்றும், குடும்ப மரியாதையைக் காக்கவென்றும் இவரைப் போன்று அல்லலபடும் பெண்களை தொடர்ந்து அச் சூழலிலேயே தங்கியிருக்கச் செய்வதிலேயே பலர் குறியாக இருக்கிறார்கள். இவ்வாறு செய்வதன் மூலம் தாம் தமிழ் பண்பாட்டை பேணுவதாகவும் மார்தட்டுகிறார்கள்.. பெண்கள் நலனை பேணுவது மூலம், சமூக நலன் பேணலாம் என்ற அடிப்படையில் செயல்படும் ஒரு சிலரை, குடும்பத்தை பிரிக்க வந்த சதிகாரர்கள் என்றும் மேற்கத்தேய பெண்ணிலைவாதிகள் என்றும் சாடி சமூக விரோதிகளாக கணிக்கிறார்கள் (மருத்துவ ரீதியில் கூட அழுகிப்போன உடலுறுப்பை அறுத்தெடுப்பதன் மூலம் எஞ்சியுள்ள உடல் நலத்தை பேணுகிறார்கள்) இவ்வாறு எம் சமூகத்தில் பெண்கள் துன்பப் படுகிறார்கள் என்ற உண்மைக்கு முகங்கொடுக்க மறுக்கும் ஒவ்வொரு கணமும், சமூகமாகிய நாம் இச்சூழலில் அல்லற்படும் பெண்ணொருவர் மேலும் துன்புறுத்தப்பட துணைநிற்கிறோம். தொடர்மாடிக் கட்டிடங்களில் வசிக்கும் சூழலில், பக்கத்து வீட்டில் கேட்கும் பயங்கர சத்தங்களையும், லிப்டில் நடக்கும் அடக்கு முறைகளையும் கண்டும் கேட்டும் மறுபுறம் திரும்பும், தலைகுனியும் நாம் சமூக பொறுப்பிலிருந்து எம்மை தூர விலக்கிக் கொள்கிறோம் ஆனால் நிலைமை மோசமாகி, தற்கொலையில் முடியும் போது, அல்லது தஞ்சம் கோரி பெண் வீட்டை விட்டு விலகும் போது, கூசாமல் விமர்சிக்கிறோம். 'விசரி' 'அடங்காப்பிடாரி' 'ராட்சசி' தமிழ் பண்பாட்டை கப்பலேற்ற வந்தவள் என்று பொங்கி யெழுகிறோம். நம்மவரே இவ்வாறு விமர்சிக்கும் போது கனேடியர்கள் வேறு கோணங்களில் இதை அணுகுவதில் வியப்பிலலையே அருந்ததியின் குற்றவியல் வழக்கில் அரசுதரப்பு வக்கீலான ரொப் கிளார்க் இந்தியாவில் நடைபெறுவதைபோல் அருந்ததி தன் இரு குழந்தைகளையும் பெண் குழந்தைகள் என்ற ஒரே காரணத்திற்காகத்தான் திட்டமிட்டுக் கொலை செய்தார் என வாதாடினார் இவர் கனேடிய ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் வெளியிட்ட "அவளை சாகவிடுங்கள்" (LET HER DIE) என்ற விவரணப்படத்தை பார்வையிட்ட பின்பே தன் வழக்கை தயாரித்தார் போலும். எதிர்தரப்பு வக்கீலான கதரீன் மக்லவுட் (Kathryn Mcleod) சமர்ப்பித்த திருமணமான நாள் முதல் கணவன் மூலம் அருந்ததி அனுபவித்த துன்பங்களையும் அருந்ததியின் சகோதரியின் வாக்குமூலத்தையும், அருந்ததி கணவனின் துன்புறுத்தல் விளைவாக சிகிச்சை பெற்ற சான்றுகளையும், கணவன் குடும்பத்தினரின் மனோவியல் ரீதியான துன்புறுத்தல்களையும் அசட்டை செய்து அரசு தரப்பு வக்கீல் தனது வழக்கைத் தொடர்ந்தார். ஆனால் நீதிபதியின் தலையீட்டினால் எதிர்தரப்பு வக்கீலின் ஆதாரங்களைக் கவனிக்கும்படியும், என்ன சூழ்நிலையில் அருந்ததி அவ்வாறான முடிவுக்குத் தள்ளப்பட்டவர் என்பதைக் கவனிக்கும்படியும் கேட்டுக் கொள்ளப்பட்டார். வெள்ளிக்கிழமை அளிக்கப்பட்ட தீர்ப்பு 6 வருட சிறைதண்டனையாக அமைந்துள்ளது.

கனேடிய ஆதிக் குடிகள் மத்தியில், தனிமனித குற்ற செயல்கள் சமூக பொறுப்புணர்ச்சி சரிவர இயங்காத காரணத்தினால் நடைபெறுகின்றன என்ற நம்பிக்கையினடிப்படையில் வட்ட நியாயத்தீர்ப்பு (Circle sentencing ) என்ற முறை வழக்கிலுள்ளது. இதன்படி குற்றம் செய்தவர் அவர் வாழும் சமூகத்தின் மத்தியில் விசாரணை செய்யப்பட்டு, தீங்கு இழைக்கப்பட்டவர், அவரது குடும்பத்தினர் கண்காணிப்பில் தண்டனை நிபந்தனைகளை நிறை வேற்றுவார். இதன் மூலம் குற்றவாளி மட்டுமல்ல, மௌனமாக

**14ம் பக்கம் பார்க்க..**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒரு சரித்திரம் சரிகிறது



ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்

ஆச்சிக்குக் கிட்டத்தட்ட எண்பது வயசிருக்கலாம், கூடவுமிருக்கலாம். அவள் குழந்தைகளுக்குக் கதை சொல்லும்போது தனது பழைய கால அனுபவங்களையும் சேர்த்துச் சொல்வாள்.

அப்படி அவள் சொல்லும் அனுபவ ரீதியான கதைகளுக்கு வயது பார்த்தால் அவை எழுபது அல்லது எண்பது ஆண்டுகளுக்கு முன் நடந்தவை.

ரஷ்ய புரட்சி பற்றி அவனுக்குத் தெரியாது. ஆனால் அவள் தகப்பன் (அந்தக் காலத்தில் திண்ணைப் பள்ளிக்கூட வாத்தியார்) தனக்குச் சொன்ன விடயங்களை, ஷார் மகாராசனும் குடும்பமும் அழிந்த கதையை அவள் குழந்தைகளுக்குச் சொல்வாள் அவளைப் பொறுத்தவரையில் சரித்திரமென்பது அரச பரம்பரை ஒருத்தரை ஒருத்தர் கொலை செய்வதும் பழிவாங்குவதும்தான்.

அவள் இன்று சரித்திரமாகிவிட்டாள்

அவளையும் கொலை செய்து விட்டார்கள்.

அவள் எந்த அரச பரம்பரையையும் சேர்ந்தவளில்லை. அரசமரம் மாதிரி பெருத்த வளர்ந்த ஒரு குடும்பத்தின் பரம்பரைக்கும் மூலமானவள்.

அவளை அவர்கள் அடித்து- நொறுக்கி உருட்டி, உதைத்து கடைசியாக அவளின் பழமையான பண்பட்ட, வயது போன, நாளையோ அடுத்த நாளோ இறக்க வேண்டிய எலும்புக் கூட்டில் ஏறி நின்று மிதித்துக் கொலை செய்து விட்டார்கள்.

நாரான தசையால், பீறிட்டெழுந்த முது ரத்தம் அவர்கள் யூனிபோர்மில் புரளப் புரள அவர்கள் அவளைப் புரட்டிப் புரட்டி அடித்தார்கள்.

கிழவிக்கும் கொலைகாரர்களுக்கும் மூன்று தலைமுறை வித்தியாசமிருக்கலாம்.

அவர்களைப் போல இளம் சிறுர்களுக்குத்தான் அவள் வளைந்து போன தென்னை மரத்தடியிற் சாய்ந்திருந்து, தென்றல் கொஞ்சும் இரவுகளில் ராசா, ராணி, வேதாளம் என்றெல்லாம் கதை சொல்வாள். அவள் கதைகளில் இளைஞர்கள் காதலர்கள், இலட்சியவாதிகள், கண்ணியமானவர்கள். அவள் கதைகளில் வரும் இளைஞர்கள் இளவரசர்கள்தான் ஆனாலும் அவள் குழந்தைகள் பேரப் பிள்ளைகள் எல்லாம் அவளைப் பொறுத்தவரையில் இளவரசர்கள்தான்.

அவளுக்குப் பெரிய குடும்பம் அந்தக் குடும்பம் மட்டக்களப்பு எட்டுப்பகுதியிலும் சிதறிக் கிடக்கின்றுர்கள். அவள் ஆடி ஓடித் திரிந்த காலத்தில் அக்கரைப்பற்று, திருக்கோயில், காரைதீவு, புளியந்தீவு என்று போய் வந்து கொண்டிருந்தாள்.

மாலைக்கண் வருத்தம்வந்து இரவில் பார்வை போய்விட்ட பின் பகலில் போய் வரக் கூடிய இடங்களுக்குப் போய் வந்து கொண்டிருந்தாள்.

பேரப் பிள்ளைகள் பெரியவர்களாகி வளர்ந்து, மனிதர்களாகி ஒவ்வொருத்தராய் கூண்டை விட்டுப் பறந்து போய்க் கொண்டிருந்தார்கள்.

சிலரின் முகமும் பலரின் குரலும் அவளுக்குப் பழக்கம். ஞாபகமும் அவ்வளவு சரியில்லை.

ஒரு காலத்தில் அழகியாய் இருந்திருக்கவேண்டும், அதை நிட்சயிக்க ஒரு புகைப்படமுமில்லை. அந்தக் காலத்தில் யாரும் படம் எடுத்துக் கொள்வதில்லை. ஆயுள் குறைந்து விடும் என்ற பயம்!

அவள் பேரன் திருச்செந்தில்நாதன் படமெடுக்கப் பழகிக் கொண்டபோது ஆச்சியை வளைந்த தென்னமரத்தினடியில் வைத்துப் படம் எடுத்தான்.

ஆச்சியின் பேரன் திருச்செந்தில்நாதனில் அவளுக்கு உயிர். திரு என்று ஆசையாகக் கூப்பிடுவாள்.

திரு அவளுடைய முதல் பேத்தியின் மகன். அவன் தாயின் வயிற்றிலிருக்கும்போது ஆச்சியின் கணவர் இறந்து விட்டார்.

தனது பேத்தியின் வயிற்றில் பிறந்திருப்பது தனது இறந்த கணவன் என்பது ஆச்சிக்கு நம்பிக்கை.

திரு பிறந்தான், தவழ்ந்தான், எழும்பி நின்று 'ஆச்சி' என்று மழலை சொல்ல அவள் அழுது விட்டாள். திருவின் சிரிப்பு அவளின் இறந்த கணவனை ஞாபகப்படுத்தியது என்று சொல்லியழுதாள்.

அவன் வளர்ந்தான், படித்தான், படம் எடுக்கக் கற்றும் கொண்டான். யாழ்ப்பாணம் போய்ப் படித்து பட்டதாரியாகி விட்டான்.

**24ம் பக்கம் பார்க்க..**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**இருத்தலியல் விசாரணைகள்**

**எஸ்.கௌந்தி**

# தஸ்லீமா நஸ்ரீன்: இஸ்லாமிய தீவிரவாதத்தின் கைதி

My life has ben taken over by a demonic man
he wants to own my body
when he wishes

(1987 இல், நஸ்ரீன் எழுதிய "திருமணம்" கவிதையிலிருந்து)

"வெட்கம்" என்ற 69 பக்க நாவலை எழுதியதற்காக, பங்களாதேஷ் பெண் எழுத்தாளரும், பெண்ணிலைவாதியுமான 31 வயது தஸ்லீமா நஸ்ரீனுக்கு (Taslima Nastine) இஸ்லாமிய தீவிரவாதிகள் மரணதண்டனையைக் கோரியுள்ளனர். இந்தப் பெண்ணின் இருத்தலிற்கும், படைப்புச் சுதந்திரத்துக்கும் அச்சுறுத்தல் விடும் இஸ்லாமியத் தீவிரவாதம் ஏற்கனவே சாலமன் றூஷ்டியின் மீது விதித்த மரண தண்டனையை வாபஸ் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மத, அரசியல் அதிகாரங்கள் தனிமனிதர்களது படைப்புச் சுதந்திரத்திற்கு குந்தகம்செய்வதில் பின்னிற்கவில்லை என்பதற்கு உலக வரலாற்றில் பல சாட்சியங்கள் உள்ளன.

1992 டிசம்பரில், இந்தியாவிலே அயோத்தி மசூதி இந்து தீவிரவாதிகளால் உடைக்கப்பட்டபோது, பங்களாதேசத்தில் ஓர் இந்துக்குடும்பம் இஸ்லாமிய வெறிக்கு எவ்வாறு உள்ளாகியது என்பதை எழுதியது தான் குற்றமாகக் கருதப்பட்டுள்ளது. "வெட்கம்" 50,000 ஆயிரம் பிரதிகள் விற்கப்பட்டதன் பின்னர் சமூக சுவாத்தியத்திற்கு குந்தகமாக இருக்கும் எனச்சொல்லி பிரஸ்தாப நாவலை, திருமதி ஷியாவின் சிறுபான்மை அரசு தடை செய்தபோதும், தஸ்லீமா நஸ்ரீனிற்கு ஒரு பாதுகாப்பை வழங்கியுள்ளது. சர்வதேச எழுத்தாளர் நிறுவனமான PEN உம், சர்வதேச மன்னிப்புச்சபையும் நஸ்ரீனுக்காக வாதாடியுள்ளன. ஆனால், இஸ்லாமிய தீவிரவாதிகளோ, கொலை தண்டனையாக அமையவேண்டும் எனக் கோரியுள்ளனர். இவரது வீட்டின் முன்சென்று ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர்.

"இஸ்லாமிற்கு எதிரான சதி" என நஸ்ரீனின் எழுத்தினைக் கணிப்பிட்ட "இஸ்லாமிய சிப்பாய்கள் சபை" 15 நாள்களில் இந்தப் பெண்ணிலைவாதி தூக்கிலிடப்படவேண்டும் என்று கேட்டுள்ளது. ஓர் இஸ்லாமியப் பெண், இந்துக்களுக்காக இரங்குவது தவறு? அயோத்திய மசூதியை இந்து வெறியர்கள் உடைத்தால், அதற்குப் பதிலாக இஸ்லாமிய வெறியர்கள் இந்துக்களைத் தாக்குவதிலும், கொல்வதிலும் தீர்வு வந்துவிடுமா? மதம், மொழி, இனம் சார்பான மூர்க்கத்தனமான ஆர்ப்பாட்டங்கள் அனைத்துமே, அரசுகளின் லாபநோக்குக் கொண்ட பலவீனங்களையே காட்டுவன. அயோத்தி மசூதி உடைக்கப்படும் என்பது இந்திய அரசுக்குத் தெரியாத விஷயமல்ல. இதனது அழிவைத் தடுக்க மூன்றும் உலகின் இராணுவரீதியான Super power எனக் கருதப்படும் இந்திய அரசால் எப்படி முடியாது போனது? பெரும்பான்மை இந்துகளில் அதிருப்தியை சம்பாதித்து தமது பாராளுமன்ற நாற்காலிகள் உடைவதைக் காட்டிலும், மசூதி உடைபட்டு போதல் மேலானது என்ற ஒரு கருத்தை இந்திய அரசு கொண்டிருந்ததல்லவா? எமக்கு முந்திய காலத்திலே விடப்பட்ட வரலாற்றுத் தவறுகளை எவ்வாறு திருத்துதல் என்பதிலே எமக்கு இன்னமும் தெளிவான ஞாயங்கள் பிடிபடவில்லையெனில் நமது யுகம் நாகரிகமடையா யுகமாக உள்ளதென்றே அர்த்தம்.

அயோத்தியில் மசூதி உடைக்கப்பட்ட பின்னர், இஸ்லாமிய தீவிரவாதிகள் பங்களாதேஷில் உள்ள ஓர் இந்துப் பேராசிரியரின் வீட்டுக்குள் நுழைகின்றனர். இவரது மகள்களில் ஒருத்தியை பலவந்தமாக மானபங்கம் செய்கின்றனர், அவள் இறந்து விடுகின்ருள். அண்ணல் நபியின் போதனைகள் இத்தகைய

---

**செத்துக் கொண்டிருக்கும்.**

..

துணைநின்ற சமூக அங்கத்தினரும் தாம் விட்ட பிழையை நினைவு கூருவதோடு மீண்டும் அவ்வாறு பாராமுகமாக இருப்பதால் அல்லது குற்றம் செய்ய துணையாக இருப்பதால் ஏற்படும் விளைவுகளைக் குறித்து எச்சரிக்கையாக இருக்கிருர்கள். இதே முறையில் எம்மவர் மத்தியில் நடக்கும் பெண்களுக்கெதிரான வன்முறைகளை அலசினுல், பெற்ருேர் சகோதரர்கள் நண்பர்கள், புகுந்த வீட்டார் அடக்கு முறைகளை கண்ணுற்றும் வாளாவிருந்த அயல்வீட்டார் என்று குற்றம் செய்ய துணைநின்ருேர் பட்டியல் நீண்டு கொண்டே போகும். சமூக ஒருங்கிணைவும், நலன் பேணும் பொறுப்புணர்ச்சியும் இல்லாத காரணத்திஞலும், அடிப்படையில் குடும்பப்பிரச்சினைகள் தனிமனித பிரச்சினைகள் என்ற எண்ணம் பரவலாக எம்மிடையே நிலவுவதாலும் பெண்களுக்கெதிரான வன்முறைகளுக்கு ஆண்களும், பெண்களும் துணை நிற்கிருேம் என்பதே கசப்பான உண்மை.

**விழிப்பு**
**பெண்கள் அமைப்பு**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொடூரங்களை ஆதரிக்கின்றனவா? இஸ்லாமிய தண்டனை முறைகளிலே இஸ்லாமிய தீவிரம் அறிமுகப்படுத்துகின்ற ஞாயம் சாரா நடவடிக்கைகளுக்குத் தண்டனைகள் எழுதப்பட்டுள்ளனவா? அப்படி எழுதப்பட்டிருப்பினும், அவைகள் நடைமுறைப்படுத்தப்படா என்பது வேறு விஷயம்.

இரண்டு தடவைகள் விவாகரத்துச் செய்தவர் நஸ்ரீன். பெண்ணிலைவாதிகள் விவாகரத்துடன் ஓர் தொடர்பைக் கொண்டவர்கள். "லண்டன் உலா" (Promenade dans Londre எனும் புத்தகத்தை எழுதிய உலகின் மூத்த பெண்ணிலைவாதிகளில் ஒருவரான புளோரரா திறிஸ்ரன் (Flora Tristan) கூட விவாகரத்துச் செய்தவர். பெண்கள் மீதான ஆண்களது அடக்கு முறைகளே அநேகமான விவாகரத்துகளின் காரணிகளாக உள்ளபோதும் வேறு காரணிகள் இல்லையெனும் முடிவுக்கு நாம்வந்துவிடமுடியாது (உலகப் பாலியல் வரட்சி பற்றிய விசாரணையில் இது தொடர்பாக விரிவாகப் பார்க்கப்படும்)

"அவர் விரும்பும் போதெல்லாம், எனது உடலைத் தனது சொந்தமாக்க விரும்புகிறார்" என்ற வரிகளை எழுதிய நஸ்ரீன், ஏற்கனவே 14 புத்தகங்களை எழுதியுள்ளார். பெண்களின் பாலியல் சுதந்திரம், ஏனைய சுதந்திரங்கள் இவைகளையே தனது படைப்புகளில் விசாரணைகள் எடுத்த இவர் மீது இஸ்லாமிய தீவிரவாதிகள் ஏற்கனவே ஆத்திரம்கொண்டிருந்தனர். கடந்த வருடம் இவரது கடவுச் சீட்டுக் கூடப் பறிக்கப்பட்டது.

15 வயதில் இருந்து பெண்ணிலைவாதக் கருத்துகள் வெளிப்படுத்திவரும் நஸ்ரீன் இன்று இஸ்லாமிய தீவிரவாதத்தின் கைதி. இவரது வாழ்வின் இன்றைய நிலை, இஸ்லாமிய தீவிரவாதிகள் முக்காடுகளையே பெண்களுக்குத் தீர்வுகளாக வழங்குகின்றன என்பதையே உரத்த குரலில் சொல்கின்றது. இது சத்தியத்தின் குரலுமல்ல, வாழ்வின் குரலுமல்ல.

(பிரஸ்தாப விசாரணை 31.01.94 டைம் இதழைத் தழுவி எழுதப்பட்டது. "சுபமங்களாவிலும் இவர் தொடர்பாக ஓர் கட்டுரை பிரசுரமாகியுள்ளது. தாயகத்திலும் ஒரு செய்திக் குறிப்பு ஏற்கனவே வந்திருந்தது)


இலங்கை, இந்திய உணவுப் பொருட்கள், கடலுணவு, மரக்கறி வகைகள் அனைத்தும் மலிவுவிலையில் பெற்றுக்கொள்ள விரையுங்கள்

**துர்க்காஸ் சுப்பர்மார்க்கட்**

**Tel:297 9444**

**விசேட மலிவு விற்பனை**

மிளகாய்த்தூள் 3.29/450 கி
6.99/900 கி

| | 5 கிலோ | 1 கிலோ |
|---|---|---|
| சம்பா அரிசி | 6.99 | 1.49 |
| குத்தரிசி | 6.99 | 1.49 |
| அரிசிமா | 6.99 | 1.49 |


மைசூர் பருப்பு, உழுத்தம்பருப்பு, துவரம்பருப்பு, பயத்தம்பருப்பு
1 கிலோ $ 1.59
2 கிலோ $ 2.99

சீனி 1.39/2 கிலோ
பால் 2% $2.99
முட்டை(12) $1.39
5 றேசஸ் மா $10.99
சவர்க்காரம் .39

**THURKAS SUPERMARKET**

*4080 Sheppard ave E (Kennedy/Sheppard)*

மற்றும் ஆட்டிறைச்சி, கோழி, கோழிக்கால், ஈரல், கிட்னி, மரக்கறி வகைகள், பழவகைகள் அனைத்தும் மலிவு விலையில்...







தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஈழம் ஒரு தொடர்கதை 2

## அத்தியாயம் 8

## சின்னத்தம்பி வேலாயுதம்

1963ம் ஆண்டு இந்திய மத்திய அரசினால் கொண்டுவரப்பட்ட பிரிவினைத் தடைச்சட்டமும் அதைத்தொடர்ந்து 1967 ல்நடந்த தேர்தலில் அண்ணா தலைமையிலான தி.மு.க ஆட்சியைப் பிடித்துக் கொண்டதும், அந்யோன்ய பேச்சுவார்த்தைகளில் சென்னைமாநிலம், தமிழ்நாடு மாநிலமான கதைகளையும் முன்னர் பார்த்தீர்கள். இந்தக் காலகட்டத்தில் தி.மு.கவின் அரசியற் போக்கில் பாரிய மாற்றங்கள் காணப்பட்டன தி.மு.க. ஒரு தேசியக் கட்சியாகவும் அண்ணா தேசியத்தலைவராகவும் கணிக்கக் கூடிய பிரமைகள் ஏற்படுத்தப்பட்டன.

இத்தகைய தமிழ்நாடு தங்கள் விவகாரத்தில் ஒரு கொள்கையையும் உலகம் பூராவும் பரந்து வாழும் தமிழர்கள் விடயத்தில் இன்னொரு கொள்கையையும் பின் பற்றியது. குறிப்பாக இலங்கை விவகாரங்களையே நாம் எடுத்துக்கொள்ள முடிகிறது. 1967 ல் அண்ணா பதவிக்கு வந்த பின் தமிழரசு கட்சியினர் அடிக்கடி தமிழக விஜயங்களை மேற்கொண்டு தமிழகத்துடன் உறவுகளை ஆரம்பித்துப் பேணத் தொடங்கினர் இதிலே குறிப்பாக இனவாத சக்திகளைக் குறிப்பிடலாம். இந்தியாவில் தடைசெய்யப்பட்ட பிரிவினைப் பிரச்சாரங்களையும் விடுதலை வேட்கையையும் இலங்கை மக்கள் சார்பாக திருப்பி, தமது மக்களையும் எமது மக்களையும் உணர்ச்சி மேலிடவைத்துக் கொள்வதுடன் இந்திய சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிக் கொள்ளவும் முடிந்தது.

அண்ணா பதவிக்கு வந்தபோது இலங்கையில் ஐக்கிய தேசிய கட்சி அரசுடன் தமிழரசுக்கட்சி ஒட்டிக் கொண்டிருந்தும் கூட அண்ணாவை வரவேற்று இலங்கையில் ஒரு மகத்தான வரவேற்புக் கொடுக்கவில்லை. அதற்கான ஏற்பாடுகளைச் செய்து விசா மறுக்கப்பட்டதாகவும் இல்லை. அண்ணாவை அழைக்கும் முயற்சியில் இறங்கித் தமது அருமையான "தேன்நிலவை" ஐ.தே.கட்சியுடன் களிப்பதை திருச்செல்வம் உட்பட்ட யாரும் விரும்பவில்லை. 1967ல் பதவிக்கு வந்த தி.மு.க வின் எந்த அமைச்சரும் 1970 வரை யாழ்ப்பாணத்துக்கோ ஏனைய தமிழ் நகரங்களுக்கோ அழைத்து வரப்படவில்லை. ஐ.தே.கட்சி மறுத்திருப்பின் ஜனநாயக முறையில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட தி.மு.க அமைச்சர்களைத் தடுப்பதன் காரணத்தை தமிழரசு அரசிடம் கேட்கவில்லை.

ஆனால் 1974ம் ஆண்டு 4 வது தமிழாராய்ச்சி மகாநாட்டுக்கு ஒரு அமைச்சர் அல்லாத டாக்டர் ஜனார்த்தனம் வருவதற்கு விசா மறுத்த ஸ்ரீமாவோ அரசை ஒட்டு மொத்தமாக தமிழரசாரும் ஆதரவாளரும் வசைபாடினார்கள். சட்டவிரோதமாகக் கொண்டுவந்து இறக்கி ஒன்பது உயிரைப் பல கொடுத்தார்கள். துரையப்பாவைச் சுட்டுப் பலமுள்ளவன் தீர்ப்பே நீதியானது என்ற தத்துவத்தையும் அறிமுகம் செய்தார்கள்.

அன்றைய கதாநாயகன் டாக்டர் ஜனார்த்தனம் இன்று எங்கிருக்கிறார் என்று தெரியவில்லை. இன்னொரு சுவாரஷ்யமான கதையையும் இவ்விடத்தில் கூறுவது பொருத்தம். 1970 ஸ்ரீமாவோ பதவிக்கு வந்ததும் இந்திரா காந்தியை சந்திக்க டெல்லி சென்ற வழியில் மதராஸில் கருணாநிதியை சந்தித்துச் செல்ல விரும்பினார். கருணாநிதியும் சம்மதித்து இருக்க விமான நிலையத்தில் ஆர்ப்பாட்டம் செய்து கறுப்பு கொடி பிடித்த டாக்டர் ஜனார்த்தனத்தையும் இன்னும் ஐம்பது பேரையும் கருணாநிதி உள்ளே தள்ளும்படி கட்டளையிட்டு அது நடந்தது.

நிருபர்கள் கேட்ட கேள்விக்கு பதிலளித்த கருணாநிதி கூறினார். "நான் ஒரு முதலமைச்சர் இன்னொரு நாட்டின் பிரதமர் என்னைப் பார்க்க வரும் போது தடுப்பதில் என்ன நியாயம் இருக்கிறது?" நல்ல பதில். இதையே எமது தமிழரசுக் கட்சிக்காரரும் யூ என்பிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் செய்திருந்தால் எவ்வளவோ பிரச்சனை குறைந்திருக்கும்.

1967 தி.மு.க பதவிக்கு வந்ததும் தமிழரசுக்கட்சியின் தொடர்புகள் வலுக்கவே எமக்கு உதவி செய்யத்தமிழகம் இருக்கிறது என்ற மாயை தமிழ் மக்கள் மத்தியில் வளர்க்கப்பட்டது. இதன் உச்சம்தான் 1974ல் யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழாராய்ச்சி மகாநாட்டை தமிழரசு அரசியல் வாடை வீசச் செய்ததும் இந்திய அறிஞர்களை கொணர்ந்ததும் ஸ்ரீமாவோ, துரையப்பா (யாழ்ப்பாண நகரபிதா) போன்றோரைப் புறக்கணித்ததுமாகும். இது தமிழரசுக் கட்சியின் குறிப்பாக அமிர்தலிங்கத்தின் குறுகிய அரசியல் செயற்பாடுகளாகும்.

இங்கு முக்கியமாக ஆராய்ந்து பார்க்க வேண்டியது தமிழகத் தலைவர்களுக்குக் குறிப்பாக அண்ணாவுக்கும், அவரின் வாரிசுகளுக்கும் ஈழத் தமிழ் மக்களின் வாழ்வு முறைகளில் நேரடிப் பரிச்சயம் உண்டா என்பது, ஏனெனில் தமிழகத் தலைவர்கள் எல்லாம் ஈழத்தமிழர் பிரச்சனைகளைக் "கேள்விச்செவியர்" களாக இருந்து அறிந்துகொண்டது தான். இலங்கைத் தமிழர்களுடன் வாழ்வில் கலந்து அனுபவரீதியாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவர்களின் பிரச்சனைகளை அறிந்து கொண்ட தமிழ்த் தலைவர்கள் தமிழகத்தில் இல்லை. அப்படியிருக்க எங்கள் பிரச்சனைகளில் அவர்கள் எவ்விதம் சரியான முடிவுகளை எடுக்க முடியும்?

தமிழரசுக் கட்சியோ குறிப்பாக அமிர்தலிங்கமோ தமிழகத்தலைவர்களை எமது பிரச்சனைத்தீர்ப்பதற்கான தார்மீக ஆதரவுகளைப் பெறும் வழிகளையே நாசமாக்கினர். அது எப்படியெனில் அமிர்தலிங்கம் ஏதோ கருணாநிதியென்றால் உடன்பிறப்பு என்ற மாதிரி நடந்து ஈழத் தமிழர் தமிழக அரசியல் பிளவுகளில் மூக்கை நுழைக்கும் வேலையைச் செய்தார். ஈழத்தமிழர் மக்கள் அவருக்கு இடாத கட்டளை இது. இது பற்றி இரண்டு முக்கிய சம்பவங்களைக் கூறலாம். முதலாவது 5வது தமிழாய்ச்சி மகாநாடு மதுரையில் நடந்த போது எம்.ஜி.ஆர் முதலமைச்சராகவும் கருணாநிதி எதிர்க்கட்சியிலுமிருந்தனர். மகாநாட்டு முடிவில் அமிர்தலிங்கம் பயணம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்ட அரச வாகனத்தை விட்டு கருணாநிதியின் காரில் பயணம் செய்து எம்.ஜீ ஆரின் ஆத்திரத்தை பெற்றுக் கொண்ட அமிர்தலிங்கம் மறுநாள் அமர்வின் போது எம்.ஜி..ஆரின் உரையில் வாங்கிக் கட்டினார். அதன் சாராம்சம் "அமிர்தலிங்கம் தன் வீட்டு பிரச்சனையை (சாதிப்பிரச்சனை) கவனிக்கத் தெரியாதவர், இங்கு எங்களுக்குப் புத்தி சொல்ல வேண்டாம்" என்பதாக அமைந்தது. இந்தக் காலகட்டத்தில் எம்.ஜி.ஆரின் மிக நெருங்கிய நண்பபன் இராசதுரை கூட்டணியுடன் விரிசல் கண்டதையும் குறிப்பிடவேண்டும்.

இன்னொரு கட்டம் மரீனா கடற்கரையில் கருணாநிதியின் பிறந்தநாள் வைபவம் தேர்தலின் மறுநாள் நடக்கிறது. கருணாநிதி தனது உரையில் "தம்பி அமிர்தலிங்கம் என்னை முதலமைச்சராகப் பார்க்கவல்லவோ இம்முறை வந்தேன் என்றார். ஆனால் அவர் எப்போதும் என்னை ஒரு தமிழனாகப் பார்க்கலாம்" என்றார். இதை அறிந்த எம்.ஜி.ஆர் அமிர்தலிங்கத்தில் ஆத்திரமடைந்து எமது உள்வீட்டு விவகாரங்களில் தலையிட வேண்டாமென அறிக்கை விடுத்தார். இவ்விதமாக தமிழகத்தின் உள்முரண்பாடுகள் எங்கள் அரசியலை வெகுவாகப் பாதித்தன. எமது தலைவர்களும் தேவையில்லாமல் அவர்கள் பிரச்சனைகளில் கையைப்போட்டுப் பிரச்சனைகளை வளர்த்தார்கள். தமிழக மக்களின் ஏகோபித்த அபிமானத்தைப் பெற்ற எம்.ஜி ஆர் ஒரு மலையாளி எனக் கருணாநிதி விழித்தது கருணாநிதியின் கீழ்த்தர இனவாதத்துக்கு உதாரணமாகும்.

பிரிவினையைக் கைவிட்ட திராவிடக் கட்சிகள் 1967 லிருந்து இன்றுவரை படுமோசமான ஊழல் நிறைந்த ஆட்சியை நடத்தி வருகின்றன. தி.மு.க கட்சிகளின் பிளவுகளின் பின்னால் தமிழ்மொழி அல்லது தமிழ் மக்கள் பற்றிய பிரச்சனை இன்று இல்லை. பதவி போட்டிகளும், ஊழல்களும், வாரிசுப் போட்டிகளுமென பலவகை ஆள்வோருக்கான பிரச்சனைகளே வெளிவருகின்றன. இந்தநிலையில் இவர்கள் அயல் நாடுகளில் வாழும் தமிழர்களுக்கு உதவுவார்கள் என எவ்வகையில் நம்புவது.

1983க் கலவரத்தினைத் தொடர்ந்து தமிழகம் தமிழ்ப் போராளிகளின் பின் தளமாகிறது. இதிலே முன்னணிப் பாத்திரததை வகித்தது தமிழகமல்ல இந்திய மத்திய அரசேயாகும். இது பற்றிப் பார்ப்போம் இதற்கான அரசியற் பின்னணிகளை இலங்கையும் இந்தியாவும் என்ற அடுத்த பகுதியில் அலசுவோம். 1977ல் இலங்கையில் பதவிக்கு வந்த ஜே. ஆர் அரசு இந்திரா காந்தியை கேவலமாகத் திட்டித் தீர்த்ததை இந்திரா நன்கு அறிந்திருந்தார். சிறிமாவோவின் குடியுரிமை பறிப்பு, அமெரிக்காவுடன் இறுக்கமான தொடர்பு, சுதந்திர வர்த்தகம், இந்தியாவை மதிக்காமைபோன்ற எல்லா விடயங்களும் இந்திராவை ஏதாவது ஒரு நடவடிக்கையில் இறங்கத் தூண்டுகிறது. வைகுந்த வாசனுக்கு சில உறுதிமொழிகளையும் கூட்டணித் தலைமைகளுக்குச் சில உறுதிமொழிகளை அளித்தபோதும் 1983 கலவரத்தில் தனது இராணுவத்தை அனுப்பி கலகத்தை அடக்க சந்தர்ப்பம் கிடைத்தபோதும் நிதானமாகவே செயற்பட்டார். இந்திய லோகசபாவில் சில தினங்களின் பின் தான் இலங்கை கலவரங்களை அடக்குமாறு ஜே. ஆரைப் பணித்தார்.

ஆனால் தமிழ் போராளிகளின் பயிற்சிக்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தார். இந்திரா காந்தி என்ன எதிர்பார்ப்புகளுடன் அத்தகைய இராணுவப் பயிற்சிகளை அளிக்க உடன் பட்டார். என்பது இதுவரை புரியாத புதிராகவே உள்ளது. பிரிவினையின் சாத்தியங்கள் பற்றிய அவரின் முடிவு, பிரிவினை பொருந்தாதெனின் ஒரு சமாதான தீர்வுக்கு இட்டுச் செல்லும்போது போராளிகளின் நிலை என்ன என்பது, தனது கட்டுப்பாட்டுக்குள் பிரச்சனை இல்லாது மீறும் போது தனது நடவடிக்கை என்ன என்பன போன்ற விடயங்களில் இந்திரா என்ன தீர்வுகளை வைத்திருந்தார் என்பது கூறமுடியாமலுள்ளது.

ஈழப்பிரிவினை விடயத்தில் திட்டமிடல் மத்திய அரசிடமேயிருந்தது. தமிழகம் வெறும் செயலற்ற பொம்மைதான். தமிழகத்துக்காகத்தான் தாங்கள் ஈழத்தமிழரைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது என்ற மத்திய அரசின் விளக்கம் ஒரு தந்திரோபாயம் தான். தமிழகத்தில் வெறும் அகதிமுகாம்கள் தான் உண்டு பயிற்சி முகாம்கள் இல்லை என இந்திரா பலதடவை கூறியது ஈழத்தமிழர் பிரச்சனையில் தமிழகத் தமிழர் விருப்புகளை விட இந்திராவின், மத்திய அரசின் விருப்புக்கள் அதிகமாக விருந்ததை நிருபிக்கின்றன.


இப்படியாக மத்திய அரசு கரிஜனை எடுத்துச் செய்யத்

**21ம் பக்கம் பார்க்க..**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## எரிஷ். ஃப்றீட் கவிதைகள்

### ஆக்க பூர்வமான சுயவிமர்சனம்

எனது பலவீனம்
என் மேன்மை பற்றிய
உணர்வாக இருந்தது

நான் அதை
இப்போது வென்றுவிட்டேன்
நான் பரிபூரணன்

### கேள்விகள்

உன் வாழ்க்கை எவ்வளவு பெரியது?
எவ்வளவு ஆழமானது?
அதற்காகும் விலை என்ன?
எவ்வளவு காலங் கொடுக்க வேண்டும்?
அதற்கு எத்தனை கதவுகள்?
நீ எத்தனை தடவை
புதிதாக ஒன்றைத் தொடங்குகிருய்?

அதற்காக நீ
எப்போதாவது ஓ நேர்ந்ததா?
அவ்வாருயின்
அதற்காக நீ
வளைய வளைய வட்டமிட்டாயா?
அல்லது முன்னும் பின்னும் ஓடிஞயா?
உனக்குள் என்ன யோசித்தாய்?

ஒரு முழுச் சுற்று வந்து விட்டதாக
எப்படி அறிந்தாய்?
ஒரு முறைக்கும் அதிகமாக ஓடிஞயா?
மூன்ரும் முறை
இரண்டாவதைப் போலிருந்ததா?

அந்தக் தொலைவைக்
காரோட்டிக் செல்ல விரும்புவாயா?
அல்லது ஓட்டப்பட?
எத்திசையில்?
யாரால்?

## இரண்டு அறிக்கைகள்

### புரட்சியின் அலுவலர்கள்

கடமை என்ற வகையில்
அலுவலர்களிடமுள்ள
அதே அளவு உணர்வே
புரட்சியின் அலுவலர்களிடம்
புரட்சியின் பால்
உள்ளது

அவர்களிடஞ்
சரியான
அதிகார பூர்வமான நோக்கும்
உள்ளதால்
அந்த அடிப்படையிற்
புரட்சியில்
எவரெவர் பங்குபற்றலாம்
என்று
தீர்மானிக்கின்றனர்

### எதிரியை நேசித்தற்கான அடிப்படை

என் நண்பர்களது
மந்த புத்தி
என்னை அயர வைத்த பின்
என் எதிரிகளது
கபடம்
சில சமயம்
எனக்குப்
புதிய வலிமையைத் தருகிறது

தமிழில்: மணி
(ஒஸ்ற்றியரான ஃப்றீட்
புலம்பெயர்ந்து வாழும் முக்கிய
ஜேர்மன் கவிஞராவர்)

## விட்டில் பூச்சிகள்

விளக்கின் ஒளியிலும்
வீசுகின்ற மணத்திலும்
மழைக்கரு மேகம் போன்ற
புகையிலும்
மனதைப் பறிகொடுத்து
மணிக்கணக்காய்
சுற்றிய பூச்சி ஒன்று!?
ஆசையில் தனக்குமுன்
அக்கினிப் பிரவேசித்து
ஓசையின்றி
அனலாகிக் கருகாகி
அழிந்து போன பல
அகாலமரணங்களைப்
பார்த்திருந்தும்...
அனுபவங்கள் சொந்தமாக
அறிவதுதான் நன்று என்று
தானும் அந்த அக்கினியில்
பிரவேசித்தது
ஆண்டவன் பாரபட்சம்
அதற்குமட்டும் காட்டுவானு?
மாண்டதுதான்மிச்சம்.

**வர்மன்**

## நிஜம்

ஆண் ஒன்றும் பெண் ஒன்றும்
ஓர் நாள் இணைந்து....
உள்ளம் துறு துறுக்க
உடல் வேர்க்க....
உயிர் ஒன்று உருவானது!
பெண்
புளி தின்ருள்! புழுதியும்
தின்ருள்!
பசியென்று புசித்ததெல்லாம்
இரையென்று ஆகுமுன்னே
வெளியேற
பசிகிடந்து.. கண்விழித்து...
சிசுவொன்று வெளிவந்தது!
எமர்கள் வந்தார்கள்...
மழலையின் உயிர் தமக்கே
சொந்தம் எனச் சொல்லிச்
சென்ருர்கள்!!

**சாந்தன் மார்க்கண்டு**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிவாஸ் ரேடிங் நிறுவனத்தினரின் மாபெரும் மலிவு விற்பனை

மேலதிக விபரங்களுக்கு பின் அட்டையைப் பார்க்கவும்

| | |
|---|---|
| மைசூர் பருப்பு 4 றுத் | 2.99 |
| நல்லெண்ணெய் | 5.99 |
| சோயா இறைச்சி 200 கி | .99 |
| கோழி | 1.99 |
| ஐந்து கிலோ அரிசி மா | 6.99 |
| ஒரு கிலோ அரிசிமா | 1.49 |
| ஹோமோ பால் 2வீதம் | 2.95 |
| குடாஸ் பத்து கிலோ கோதுமை மா | 4.99 |
| முட்டை முப்பது | 1.99 |
| வெங்காயம் 10 று | 2.99 |
| உள்ளி 1 றுத் | .99 |
| நிரு பிராண்ட் மிளகாய்த்தூள் 2 றுத் | 6.49 |
| நிரு பிராண்ட் அரிசிமா 1 கிலோ | 1.69 |
| நிரு பிராண்ட் அரிசிமா ஐந்து கிலோ | 7.99 |
| இருபது கிலோ பஸ்மதி | 27.99 |
| 5 கிலோ பஸ்மதி | 7.99 |
| நிரு கோப்பி பவுடர் | 3.49 |
| சன்யோ றைஸ் குக்கர் | 55.99 |
| 400 கி தேங்காய்ப் பால் பவுடர் | 1.99 |
| ஐந்து கிலோ உழுத்தம்பருப்பு | 6.99 |
| ஐந்து கிலோ மைசூர் பருப்பு | 7.99 |

**Sivas Trading Co**
**3852 Finch Ave E (Kennedy/Finch)**
**321 2739**

| | |
|---|---|
| goat leg | 1.99 lbs |
| boneless | 1.99 lbs |
| chicken legs | .69 lbs |
| fresh chicken | 1.99 |
| Red Shnapper, King fish | 2.99 lbs |
| String Hopper mix, Pittu Mix | 1.99 |
| Small dictionary | 3.99 |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அமெரிக்காவின் வியட்நாமுக்கு எதிரான பொருளாதார தடை நீக்கல்

# ஒரு புதிய அத்தியாயம்

வியட்நாம் மீது அமெரிக்கா விதித்திருந்த பொருளாதாரத் தடையை நீக்குவதாக அமெரிக்க ஜனதிபதி பில் கிளின்ரன் அறிவித்திருப்பது சர்வதேச அரசியலில் ஏற்பட்டுவரும் புதிய மாற்றங்களின் ஓர் அம்சமாகக் கருதப்படுகிறது. வியட்நாமுடனுன யுத்தத்தில் ஏற்பட்ட இராணுவத் தோல்வி காரணமாக கடந்த 19 வருடங்களாக அமெரிக்கா வியட்னும் மீது பொருளாதாரத் தடையை விதித்திருந்தது. அமெரிக்க அரசின் இந்தப் புதிய முடிவை அபிப்பிராய வாக்கெடுப்புகளின்படி பெரும்பான்மையான வாக்காளர்கள் ஆதரித்தும் இருக்கின்றனர்.

கிளின்ரன் நிர்வாகம் இத்தகையதொரு முடிவை எடுப்பதற்கான காரணம் வியட்நாம் மக்களின் மீது கொண்ட அன்போ அல்லது வியட்நாமின் வளர்ச்சியிலே கொண்ட அக்கறையோ அல்ல, வியட்நாமில் ஏற்பட்டுவரும் அரசியல், பொருளாதார மாற்றங்கள் விரைவில் வியட்நாமை மலேசியா, தாய்லாந்து போன்ற நாடுகள் போன்று ஒரு பொருளாதார வளர்ச்சி நிலைக்கு கொண்டு போகும் என்பது பொருளாதார நிபுணர்களின் கருத்து. இதனுல் ஜேர்மனி, பிரிட்டன் போன்ற நாடுகள் வியட்நாமில் பாரிய பொருளாதார முதலீட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன. இதுவரைகாலமும் பொருளாதாரத் தடை காரணமாக அமெரிக்க நிறுவனங்கள் வியட்நாமில் எந்த முதலீட்டு முயற்சிகளிலும் ஈடுபட முடியவில்லை.

கடந்த காலங்களில் அமெரிக்க அரசு தனக்கெதிரான நாடுகள் மீது பொருளாதாரத் தடையை விதித்ததற்கான காரணமாக அந்நாடுகள் மனிதஉரிமை மீறல்கள் செய்கின்றன எனக் கூறி வந்தன. இப்போதோ அமெரிக்காவில் தமது உற்பத்திகளுக்கான புதிய சந்தைகளை தேடும் முயற்சியில் மனித உரிமைகள் என்பதற்கான வரைவிலக்கணங்கள் மாற ஆரம்பித்துள்ளன. சீனு, வியட்நாம் போன்ற நாடுகளுடன் அமெரிக்கா கொள்ள ஆரம்பித்திருக்கும் புதிய உறவு இந்த மாற்றங்களுக்கான சிறந்த உதாரணங்கள். இன்றைய உலகில் எல்லா நாடுகளிலும் இன்று ஒரே ஒரு கோஷமே எஞ்சியுள்ளது. "ஏற்றுமதி செய்! அல்லது இறந்து போ!(Export or Die) இதை வைத்துத்தான் இன்று அமெரிக்கா தனது அனைத்து வெளிவிவகாரக் கொள்கையையும் அடகு வைத்துவிட்டு முடிவெடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது.

குளிர் யுத்தம் நிலவிய காலகட்டத்தில் அமெரிக்காவில் மனித உரிமைகள் குறித்த தத்துவவாதிகளுக்கும் இராணுவ ரீதியாக அமெரிக்கா தனிமைப்படுத்தப்படக் கூடாது, அதனுல் அமெரிக்கா சர்வாதிகாரிகளுக்குக்கூட ஆதரவு வழங்க வேண்டும் என்று தர்க்கமிடும் தரப்பினருக்குமிடையே தீவிரமான விவாதம் நடந்தது. இந்த வகையிலேயே ஈரானின் ஷாவும் பிலிப்பைன்சின் மார்க்கோசும் அமெரிக்காவில் பாதுகாக்கப்பட்டனர், ஏனென்றுல் அவர்கள் மொஸ்கோவுக்கு எதிரானவர்கள் என்றவகையில்.

ஆனுல் இன்றே நிலமை முற்றுக தலைகீழாக மாறியிருக்கிறது. அமெரிக்காவில் தத்துவவாதிகள் இன்னமும் மனித உரிமைகளுக்காக வாதிடுகின்றனர். ஆனுல் யாருடன் என்பதில் தான் மாற்றம். மனித உரிமைகள் குறித்து இராணுவ ஜெனரல்களுடன் விவாதித்த இந்த தத்துவவாதிகள் இப்போது பிரபல தொழில் நிறுவனங்களான ஜெனரல் எல்க்றிக்ஸ், ஜெனரல் மோட்டார்ஸ் ஆகியவற்றுடன் விவாதிக்க வேண்டியிருக்கிறது. வளர்ச்சியுறும் நாடுகளான சீனு, வியட்நாம், இந்தியா போன்றவற்றுடன் 'மனித உரிமைகள் மீறல்' என்ற மிரட்டுதல் பேரில் மோதமுடியாது! மோதினுல் எமக்கே நஷ்டம் என்ற முடிவு விவாதங்களில் தெளிவாகிறது.

"பாதுகாப்புக் காரணங்களுக்காக பயங்கள் பல இருந்த போதிலும் இன்றைய அமெரிக்காவின் வெளிவிவகாரக் கொள்கைகள் மனித உரிமைகளுக்கும் பொருதாதாரத்துக்கும் நடக்கும் மோதலை வைத்தே வகுக்கப்படுகின்றன" என்கிறுர் வின்ஸ்ரன் போர்ட், இவர் கிழக்கு ஆசிய மற்றும் பசுபிக் பிராந்திய நாடுகளுக்கான உதவி அமைச்சர்.

"1970களில் நாள் ஹென்றி கிஸிங்கரின் கீழ் வேலைசெய்யும் போது அடிக்கடி புத்திஜீவிகளை சந்தித்தேன். இராணுவ மற்றும் பாதுகாப்புக் காரணங்களுக்காக இது முற்றுகவே அரசியல் மயமான காரணம். ஆனுல் இன்றே காலையில் சர்வதேச மன்னிப்புச்சபை, அல்லது ஆசியா கண்காணிப்பு

## சுழலும் உலகம்



தி. உமாகாந்தன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(ASIA WATCH) போன்ற அமைப்புக்களுடன் காலையில் ஒரு சந்திப்பு பின்னர் சாயங்காலம் வர்த்தகர் சங்கத்துடன் ஒரு சந்திப்பு என்ற வகையில் என் கடமை அமைகிறது. எந்தவகையிலும் இங்கு வர்த்தகமே முன்னிற்கிறது" இது வின்ஸ்ரன் போர்ட்டின் கருத்து.

இதைப்போல 'ஆசியா கண்காணிப்பின்' வாஷிங்ரன் பிரிவின் இயக்குநரான மைக் ஜெண்டர்ஸைக்கின் கருத்தும் இருக்கிறது. அவர் கூறுகிறார். "முன்பு எல்லாம் சீனாவிலிருந்தோ அல்லது இந்தோனேசியாவிலிருந்தோ ஒரு அகதி வந்தால் நான் அவரை அமெரிக்க கொங்கிரசுக்கோ அல்லது ராஜாங்க அமைச்சுக்கோ கொண்டு போவேன். இப்போதோ அவர்களை வர்த்தக ரீதியானவர்களை சந்திக்கும் முயற்சிகளையே மேற்கொள்கிறேன். வர்த்தக ரீதியாக சம்பந்தப்பட்டவர்கள் சிலவேளைகளில் சம்மதிக்கிறார்கள். சிலவேளைகளில் சந்திக்க மறுத்துவிடுகிறார்கள். ஆனால் இப்போதோ அமெரிக்க வர்த்தகர்களில் பலர் மனித உரிமைகள் சம்பந்தமான விவாதம் நமக்கு தேவையானதா என்று சிந்திக்கிறார்கள். காரணம் அமெரிக்காவை பொறுத்தவரை எல்லாமே எண்ணிக்கையை நிர்ணயிக்கப்படுகின்றன.

1970 இல் அமெரிக்காவின் ஏற்றுமதியானது அமெரிக்காவின் மொத்த உற்பத்தியின் 4.2 வீதமாக இருந்தது. இறக்குமதியோ 3.9 வீதமாக இருந்தது ஆனால் இப்போதே அமெரிக்காவின் ஏற்றுமதி மொத்த உற்பத்தியின் 7.2 வீதம். ஆனால் இறக்குமதியோ 9.3 வீதம். அமெரிக்க தொழிலாளர் நிறுவனக் கணிப்பீட்டின்படி அமெரிக்காவின் ஏற்றுமதிப் பொருட்கள் வரும் பகுதிக்கான தொழிலாளர்களின் எண்ணிக்கை உள்நாட்டு உற்பத்தி தொழிலாளர்களின் எண்ணிக்கையை விட 20 வீதம் அதிகம். 20 வருடங்களுக்கு முன்னர் எந்த ஒரு அமெரிக்கனும் சீனாவுடனான வர்த்தகத்தில் தங்கியிருக்கவில்லை. ஆனால் இன்றோ அமெரிக்காவில் சீனாவுடனான 9 பில்லியன் டொலர்கள் பெறுமதியான வர்த்தகத்தில் இரண்டு இலட்சம் அமெரிக்கர்கள் தங்கியிருக்கிறார்கள். போயிங் விமானங்களுக்கான ஏற்றுமதியில் 14 வீதம் சீனாவிலேயே தங்கியிருக்கிறது. இது மாத்திரமல்ல அமெரிக்காவிலுள்ள மில்லியன் கணக்கான மக்கள் சீனாவில் உற்பத்தி செய்யப்படும் குறைந்த விலையுள்ள உடைகளிலேயே தங்கியுள்ளனர்.

அமெரிக்காவை பொறுத்தவரை வியட்நாம் ஒரு பெரும் சந்தை. அமெரிக்க ஆசிய சபையின் கணிப்பீட்டின்படி அடுத்த 5 வருடங்களுக்குள் வியட்நாமில் விமான நிலைய புனருத்தாரணம் சக்திநிலைய நிர்மாணம் உட்பட 8 பில்லியன் டொலர்களுக்கு வர்த்தகம்செய்யமுடியும்வியட்நாம் மாத்திரமில்லை. அமெரிக்காவின் மனித உரிமைகள் மீறல் பட்டியலில் இந்தியா, இந்தோனேசியா, பர்மா அடங்கினாலும் சந்தை முறையில் இவை குறித்த அபிப்பிராயமும் மாறுகிறது.

மனித உரிமைகளை கொள்கையாகக்கொண்டு பதவிக்கு வந்த கிளின்ரன் இப்போதோ சந்தையை வைத்து தனது வெளிவிவகார கொள்கையை நிர்மாணிக்கிறார். கிளின்ரன் பொருளாதார தடையை நீக்குவதாக கூறிவந்த 10 மணித்தியாலத்துக்குள் அமெரிக்கன் எக்ஸ்பிறஸ் தனது கார்ட்டுகளை வியட்நாமில் பாவிப்பதற்கான அதிகாரங்களை வழங்கிவிட்டது. இது மாத்திரமல்ல பல இடைவெளிகளைப் பாவித்து வியட்நாம் விமானச்சேவை ஹனோய்க்கும் ஹோசி மின் நகருக்குமிடையில் அமெரிக்க போயிங் விமானச்சேவையை ஆரம்பித்துவிட்டது. அது மாத்திரமல்ல பல பிரபல அமெரிக்க நிறுவனங்கள் வியட்நாமில் முதலீடு செய்வதற்காக வரிசையில் நிற்கின்றன. சிற்றிபாங், மற்றும் அமெரிக்க வங்கி ஆகியன ஏற்கனவே தமது ஆலோசகர் நிலையங்களை வியட்நாமில் அமைத்துவிட்டன. Lehman Brothers என்றழைக்கப்படும் நிறுவனம் ஹனோய் விமான நிலையத்தை புரனருத்தாரணம் செய்யும் கொந்தராத்தில் கைச்சாத்திட்டு விட்டது. பிரபல எண்ணை உற்பத்தி நிறுவனங்களான Exxon, Amoco, Mibil ஆகியன வியட்நாமில் முதலீடு செய்ய துடித்து நிற்கின்றன. கொக்கோ கோலா, பெப்சி கோலா ஆகிய இரண்டுமே வியட்நாமில் முதலீட்டுக்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு விட்டன. அமெரிக்காவின் பிரபல உற்பத்தி நிறுவனங்களான IBM இலிருந்துஜெனரல் எலக்ரிக்வரை வியட்நாமில் முதலீடு செய்ய துடித்து நிற்கின்றன.

வியட்நாமில் குறைந்த தொழிலாளர் ஊதியமும், உற்பத்தித் செலவும் தாய்லாந்தைவிட இந்தோனேசியாவைவிட, சீனாவை விட வியட்நாமில் பல வர்த்தக வெற்றிகளைத் தரும் என்று இன்று அமெரிக்காவை நம்ப வைத்திருக்கிறது. ஆனால் இது ஒரு புதிய ஒரு சத்திரசிகிச்சை. விளைவு விரைவில் தெரிய வரும்.

---

ஈழம் ஒரு தொடர்கதை..

தொடங்கிய பிரச்சனையில் தமிழகத்தலைவர்கள் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார்கள் என்பதே சரியானது. கருணாநிதி ரெலோவை ஆதரித்தும் அதை அறிந்த எம்.ஜி.ஆர் பிரபாகரனை அழைத்து தனது ஆதரவை வழங்கியதும் ஈழத்தமிழர்பால் கொண்ட கரிசனையை நிருபிக்க போதா. இது அவர்களின் ஏட்டிக்கு போட்டி அரசியலினால் விளைந்த விளைவுகள். இத்தகைய தில்லுமுல்லுகள் நிறைந்த தமிழக அரசியல்- இயக்கங்கள் பற்றி "ரோ" பற்றி பார்க்கும்போது விரிவாகப் பார்ப்போம் தொடரும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஜே.வி.பி.யின் வரலாற்றுக் கதை

வசந்த திசாநாயக, பற்றிக்பெர்னன்டோ
சரத் த சில்வா, ரஞ்சித் குமார

தமிழாக்கம்: செ. லோகநாதன்

**தொண்டமான் மூலமாக அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கான முயற்சி**

1989 அக்டோபர் மாதத்தை அடையும்போது ஜேவிபியின் நடவடிக்கைகள் மேலும் அதிகரித்திருந்த போதிலும் நிலமை அவ்வளவு தூரம் ஜேவிபிக்கு சாதகமானதாக அமையவில்லை. இதனால் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் என ஜேவிபி கருதியது. இதன் காரணமாக மத்தியமாகாணத்தின் ஜேவிபி தலைவர் ஒருவர் மொழிப்பெயர்ப்பாளருடன் ஏற்கனவே திட்டமிட்டவாறு 1989 ம் ஆண்டு அக்டோபர் 14ம்திகதி தொண்டமானைச் சந்தித்தார். இச் சந்திப்பு ரம்பொடை பிரதேசத்திலுள்ள தொண்டமானின் வேவண்டன தோட்டத்தில் இடம்பெற்றது.

தொண்டமானுடன் நடைபெற்ற இப்பேச்சுவார்த்தையில், ஜனாதிபதி பதவி விலகி தேர்தலை நடாத்துவது, மாகாண சபையையும் இலங்கை இந்திய உடன்படிக்கையையும் இரத்துச் செய்தல், இந்திய இராணுவத்தை திருப்பி அனுப்புதல் ஆகியவாறான ஆறு பிரேரணைகளை ஜேவிபி முன்வைத்தது. புதிதாக தேர்தல் நடாத்துவதற்கு தான் உடன்படுவதாகவும் ஆனால் சகல கட்சிகளும் தேர்தலில் பங்குகொண்டு தத்தமது தேர்தல் விஞ்ஞாபனங்களை வெளியிட வேண்டும் எனவும் தேர்தலில் தோல்வி அடைந்தவர்கள் வன்செயல்களில் ஈடுபடக் கூடாதெனவும் தொண்டமான் கூறினர். ஜேவிபி இப்பிரேரணைக்கு இணங்குமானல் தன்னல் அரசாங்கத்தை இசையச் செய்ய முடியும் எனவும் மேலும் அவர் கூறினர்.

ஒரு வாரத்திற்குப் பின்னர் மீண்டும் சந்திப்பது என்னும் முடிவுடன் அன்றைய அப்பேச்சுவார்த்தை முடிவுற்றது. இப்பேச்சுவார்த்தைகள் பற்றி தொண்டமான் ஜனாதிபதி அவர்களுக்கும் ரஞ்சன் விஜேரத்னவுக்கும் அறிவித்தார். இதன் பின்னர் தொடர்ந்தும் ஜேவிபியுடன் பேச்சுவார்த்தைகளை நடாத்துமாறு ஜனாதிபதி தொண்டமானுக்கு அறிவித்தார். ஒரு வாரத்திற்குப் பின்னர் ஜேவிபி பிரதிநிதிகள் மீண்டும் தொண்டமானைச் சந்தித்தனர். ஜனநாயக ஓட்டத்தில் இணைவதா இல்லையா என்பது தொடர்பாக தம் மத்தியில் ஓர் உடன்பாடு இல்லை எனவும் ஆதலால் மீண்டும் பிறிதொரு தினத்தில் சந்திப்பதான பேச்சுடன் அங்கிருந்து சென்றனர். அவர்கள் மீண்டும் நவம்பர் மாதம் 08ம் திகதி தொண்டமானைச் சந்திக்கச் சென்றனர். இந்நேரத்தில் டி.எம். ஆனந்த உட்பட ஜேவிபி தலைவர்கள் பலர் கைது செய்யப் பட்டிருந்தனர். அன்றைக்கே தொண்டமானுடன் பேச்சுவார்த்தை நடாத்தவேண்டிய அவசியம் ஜேவிபி பிரதிநிதிகளுக்கு இருந்த போதிலும் அமைச்சரவைக் கூட்டமும் அன்று நடைபெறவிருந்ததால் பேச்சுவார்த்தைகளை நடாத்த முடியவில்லை. மீண்டும் சந்திப்பை மறுதினம் நடாத்தலாம் என இணங்கிய போதிலும் இது தொடர்பாக ஜேவிபிக்குள் கருத்து வேறுபாடு நிலவிய காரணத்தால் சந்திப்புக்கான தினம் பின்போடப்பட்டது. மீண்டும் ஒருநாளைக்கு சந்திக்கலாம் எனப் பேசிக்கொள்ளப்பட்ட போதிலும் அந்நாள் என்றைக்குமே மீண்டும் வரவில்லை.

**இணைந்த நடவடிக்கைப் பிரிவு ஜேவிபியின் அந்தரங்கத்துக்குள்ளேயே பாய்கிறது.**

ஜேவிபி மீது பாய்வதற்கான உபாயங்களைத் தயாரித்ததே இணைந்த நடவடிக்கை பிரிவு முதலாவதாக செய்த வேலையாகும். இதற்கான முதல் வேலையாக மிகவும் அத்தியாவசியமானதும் நம்பிக்கைக்குரியதுமான தகவல்களைப் பெற வேண்டியிருந்தது. தகவல்களைப் பெறுவதற்கென்றே ஸ்தாபிக்கப்பட்டிருந்த புலனாய்வு சேவைக்கு மேலதிகமாக ஆயுத படையைச் சாராதோரிடமிருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான வேலைத்திட்டம் உருவாக்கப்பட்டது. இந் நோக்கத்துடன் ஜேவிபியினால் படுகொலை செய்யப்பட்டவர்களின் குடும்பத்தைச் சார்ந்தோருடனும் அவர்களுக்கு நெருக்கமானோர்களுடனும் இராணுவம் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டது. ஜேவிபியின் தாக்குதல்களுக்கு உள்ளான காரணத்தால் ஜேவிபியினர் மீது பதில் தாக்குதல் தொடுக்க வேண்டும் என்ற கருத்திற்கு வந்திருந்த சில இடதுசாரியினருடனும் அவ்வாறான தொடர்புகள் ஏற்படுத்தப் பட்டன. தமது தலைவன் தயாபத்திரன ஜேவிபியினால் படுகொலை செய்யப்பட்ட பின்னர் ஜேவிபி மீது பதில் தாக்குதலைத் தொடுக்க தமக்கே உரித்தான வேலைத்திட்டத்தை தயாரிக்க மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியில் முடிந்ததன் பின்னர் அரச படைகளுடன் சேர்ந்தாவது ஜேவிபியை அழிக்க வேண்டும் என்னும் கருத்துக்கு வந்த சுதந்திர மாணவர் சங்கத்தின் பகுதியினர்களோடும் இணைந்த நடவடிக்கைப் பிரிவு தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டது. இடது சாரி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இயக்கத்துள் இருந்த சில பகுதியினரும் அவ்வாறே சுதந்திர மாணவர் சங்கத்தின் சில அங்கத்தவர்களும் இச் செயல்களுக்கு எதிராக இருந்தனர். இவ்வாறு எதிராக இருந்தவர்களை சுதந்திர மாணவர் சங்கத்தில் இருந்து வெளியேற்றி இராணுவ நடவடிக்கைகளுடன் தொடர்பு கொள்வதற்காக சுதந்திர மாணவர் சங்கத்தின் தர்மசிறியை பிரதானமாகக் , கொண்ட பகுதியினர் செயல்பட்டனர்.

ஜேவிபி தலைவர்களையும் அங்கத்தவர்களையும் அடையாளங் காணக்கூடிய ஆற்றல் மற்ற அனைவர்களையும் விட சுதந்திர மாணவர் சங்கத்துக்கே இருந்தது. பல்கலைக்கழக மாணவர் மத்தியிலிருந்து வந்த அனேக தலைவர்களை இவர்கள் நன்றாக அறிவர். ஆதலால் அவர்களைத் தேடிச் செல்லல், தகவல்களைச் சேகரித்தல் ஆகிய வேலைகளை சுதந்திர மாணவர் சங்க இயக்குனர்களால் மிக நன்றாகச் செய்யக் கூடியதாக விருந்தது. இதற்கமைய சுதந்திர மாணவர் சங்கத்தைச் சார்ந்த அனேக இயக்குனர்கள் இணைந்த நடவடிக்கைப் பிரிவுடன் நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டது மட்டுமன்றி சம்பளம் பெறுபவர்களாவும் அதனுடன் இணைந்து செயல் பட்டனர். உளவு பார்ப்பதில் மட்டுமன்றி தாக்குதல்களிலும் தொடர்பாகவிருந்தனர். ஜேவிபியினால் படுகொலை செய்யப் பட்டவர்களுக்கு நெருக்கமான, தாக்கப்பட்ட மாணவர்கள் அல்லாதோரும் கூட இப்பகுதியினருடன் இணைந்திருந்தனர். சுதந்திர மாணவர் சங்கத்தைத் தவிர ஜேவிபியின் தாக்குதல்களுக்கு உள்ளான அனேக பகுதியினரது உதவியைப் பெறுவதிலும் இணைந்த நடவடிக்கைப் பிரிவினர் வெற்றி கண்டனர். எதிர் தரப்பார் மீது தாக்குதல் கொடுத்ததன் மூலம் ஜேவிபியினாலேயே நிர்மாணிக கப்பட்டு வழங்கப்பட்ட இச்சக்தி ஜேவிபியை அழிப்பதில் இராணுவத்துக்கும் பொலிசாருக்கும் மிகப்பெரும் நன்மையை அளித்தது. "ப்ரா" "ஷ்ரா" ஆகிய பல்வேறு பெயர்களில் ஜேவிபிக்கு எதிரான தாக்குதல்களில் ஈடுபட்டது பிரதானமாக இவர்களேயாகும். இவர்களுக்கு வேண்டிய ஆயுதங்கள், வாகனங்கள், பணம் பொருள் அனைத்தும் சகல வசதிகளும் ஆயுதப்படையினரால் வழங்கப் பட்டனர். ஆயினும் அனேக இடங்களில் "ப்ரா" "ஷ்ரா" ஆகிய பெயர்களைப் பாவித்து பாதுகாப்புப் படையினரே கொடூர நடவடிக்கைகளை கட்டவிழ்த்து விட்டனர். ஆரம்பத்தில் போஸ்டர் ஒட்டுபவர்களில் தொடங்கி அவர்கள் மூலமாக பிரதேச தலைவர்கள். மாவட்ட தலைவர்கள் ஆகியவாறு மேல்மட்ட தலைவர்களை கைது செய்வதற்கு வேண்டிய உபாயங்கள் விரைவாகவும் வேகமாகவும் உருவாக்கப்பட்டன.

இவ்வாறான நிலமையின் கீழ் முதன் முதலாக சுற்றிவளைக்கப்பட்ட முக்கியமான நபர் கொழும்பு மாவட்டத்தின் இலக்கம் 2 வது தலைவர் ராஜா மஹத்தயா எனப்படும் மாத்தளை ஜயந்த என்பவராகும். இவர் 1989ம் ஆண்டு ஆர்.டி.எப் இனால் கைது செய்யப்பட்டார்ர். இவரைக் கைது செய்வதற்கு சிறிது நேரத்திற்கு முன்னர்தான் டி.எம். ஆனந்த இவர் இருந்த வீட்டிலிருந்து வெளியேறியுள்ளார். ராஜா மஹத்தயாவிடமிருந்து பெற்றுக்கொண்ட தகவல் மூலமாக மாவட்டக் கமிட்டியைச் சார்ந்த மேலும் மூவர் கைது செய்யப் பட்டனர். களனி பாலத்தடியில் குருநாகலை மாவட்ட செயலாளர் கல்ப கைது செய்யப்பட்டார். ராஜா மஹத்தயா உட்பட கைது செய்யப்பட்டோரிடமிருந்து பெற்றுக் கொண்ட தகவலகளின்படி 1989 நவம்பர் 7ம் திகதி டி.எம். ஆனந்த கைதுசெய்யப் பட்டார். அதற்கு முதல் நாள் தெமட்டகொடையில் குணரத்ன வனசிங்க கைது செய்யப்பட்டார். சேகரிக்கப்பட்ட தகவல்கள் மூலமாக பண்டாரவளையில் சோமவன்ச அமரசிங்க தங்கியிருந்த வீட்டை இராணுவத்தினர் முற்றுகையிட்டபோது அவர் அங்கு இருக்கவில்லை. ஆயினும் பதுளை பிராந்தியச் செயலாளரை கைது செய்யக் கூடியதாயிற்று. இக் காலகட்டத்தை அடையும்போது அதாவது நவம்பர் 1ம் திகதி அம்பாந்தோட்டை பிராந்தியச் செயலாளர் அஹங்கம ஆரியசேனவும் களுத்துறை பிராந்தியச் செயலாளர் சிறிமல் என்பவரும் கைது செய்யப் பட்டிருந்தனர்.

தொடக்கத்தில் டி.எம். ஆனந்தவைத் தாக்கி தகவல்களைப் பெற பாதுகாப்பு அதிகாரிகள் முயற்சிக்கவில்லை. இப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காணப்படல் வேண்டும் என்னும் அடிப்படையிலிருந்தே இவருடன் பேசினர். இவர்களுக்கு மன்னிப்பு வழங்க ஜனாதிபதி தயாராகவுள்ளார் என பாதுகாப்பு அதிகாரிகள் அவரிடம் கூறியபோது ஜேவிபியைப் பாதுகாக்க வேண்டும் என்னும் அடிப்படையில் இருந்து கொண்டு அரசியல் தீர்வு காணவேண்டிய தேவையுடன் ஜனாதிபதி பிரேமதாசவைச் சந்திக்கவேண்டும் என டி.எம் ஆனந்த கூறினார். ஆயினும் அதற்கு முன்னர் விஜேவீர, கமனாயக பற்றிய தகவல்கள் வேண்டும் என பாதுகாப்பு அதிகாரிகள் கோரியபோது மூன்று நிபந்தனையின் கீழ் டி.எம். ஆனந்த அதற்கு உடன்பட்டார். அவ் நிபந்தனைகள் வருமாறு.

1. விஜேவீரவுக்கும் கமனாயகவுக்கும் தனக்கும் ஜனாதிபதியைச் சந்திக்க சந்தர்ப்பம் அளிக்க வேண்டும்.
2. சர்வதேச பத்திரிகையாளர்களுடன் பத்திரிகை மாநாடு ஒன்று நடாத்த சந்தர்ப்பம் வழங்க வேண்டும்.
3. கட்சி சட்டபூர்வமாக்கப் படுவதுடன் கைது செய்யப்பட்ட அனைவரும் விடுதலை செய்யப்படல்

**33ம் பக்கம் பார்க்க..**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒரு சரித்திரம்...
தமிழ்ப் பகுதிகளில் குழப்பம். இலங்கையரசாங்கம் கொலைகள், கற்பழிப்பு, தீவைப்பு பின்னர் இந்திய அரசாங்கம், சினேகிதம், பூமாலை நிறைகுடம் வரவேற்பு, பின்னர் கற்பழிப்பு, கொலை, குண்டுவீச்சு, ஊரழிவு,
கிழவி இரண்டு உலக மகாயுத்தங்களின் அனுபவத்தை தெரிந்தவள் ஆனால் அவள் குடும்பத்தில் யாரும் இறந்ததில்லை. குழந்தைகள் பிறந்தார்கள், வளர்ந்தார்கள், பேரப்பிள்ளைகள் தந்தார்கள் அவர்கள் தங்களுக்கும் பிள்ளையும் பெற்றுக் கொண்டார்கள்.
தமிழ் ஈழப் பிரச்சினை இனவெறி பிடித்த இலங்கை அரசாங்கத்தால் அவள் எத்தனையோ பேரைப் பறி கொடுத்து விட்டாள்.
முதற்தரம் ஒரு பேரன் சிங்கள ராணுவத்தால் சுடுபட்டு இறந்தபோது ஆச்சியும் குடும்பமும் துடித்துப் போய்விட்டார்கள். சிங்களப் பேரினவாதம் தமிழ்ச் சிறு இனத்தைக் கொன்று குவித்தது. ஆச்சிக்குப் பிறப்பும் இறப்பும் மகத்துவமானது.
அந்த 'மகத்துவத்தை' ஒரு துளியும் மதிப்பில்லாமல் ஆக்கிவிட்ட அரசியல் மாற்றத்தை அவளால் விளங்கிக் கொள்ள முடியவில்லை இறப்பதும் புதைப்புக்களும் இவளின் அழுகைக்குக் காத்திராமல் அவசரமாக நடந்து கொண்டிருந்தன. அவளுக்குக் கண் தெரியாது. காதும் அவ்வளவாகக் கேட்காது. அருமைப் பேரன் 'திரு' அவனைத் தென்னைமரத்தினடியில் வைத்தெடுத்த படத்தையும் பார்க்க முடியாது.
திருவைப் பார்ப்பதும் முடியாது. அவனைத் தடவிப் பார்ப்பாள் கொஞ்சிப் பார்ப்பாள், முகர்ந்து பார்ப்பாள், அவன் இருபத்திரெண்டு வயதுக்கு மேலானவன். ஆச்சியின் அன்பில் வெட்கப் படுவான். கிழவிக்கு கண் பார்வை மங்கமுதல் அவளோடு பழகிய போராளிகளை (?) அவனுக்குத் தெரியும். அவர்கள் எங்கேயிருக்கிறார்கள் என்று தெரியும். பால் மணம் மாறாதவர்கள், பந்தடித்து விளையாடும் வயதில் பயங்கர ஆயுதம் தூக்கிக் கொண்டவர்கள் அவர்கள் ஊரில் ஒரு நாளும் வேண்டப்படா தவர்கள். ஊருக்கும் அவர்களுக்கும் உள்ள தொடர்பு கரடு முரடானது. ஆனாலும் அவர்களின் துப்பாக்கிகளுக்கு ஊரார் பயம். துப்பாக்கிகள் புதிதானவை, உயர்தரமானவை என்று யாரும் சொல்லும்போது கிழவியால் எதையும் புரிந்து கொள்ள முடியாது. தென்னை மரத்தடியிலிருந்து கதை கேட்கும் வயதில் கொலை செய்யும் மாற்றத்தைக் கொண்டுவந்த அரசியலைப் புரியாதவள் அவள். இரண்டு உலக யுத்தங்களை அனுபவித்தவள், ஆனாலும் துப்பாக்கிகளை கண்டில்லை.
விடிந்த காலையின் இளம் சூட்டில், வளைந்த தென்ன மரத்தில் காய்ந்து கொண்டு 'திரு' வை யோசித்துக் கொண்டிருந்தாள்.
இப்போதெல்லாம் குழந்தைகளுக்கு அவள் பறக்கும் குதிரைகள் பற்றிக் கதை சொல்ல மாட்டாள். ஏழு கடல்களுக் கப்பாலுள்ள பயங்கரக் குகையில் பாம்பின் தலையில் இருக்கும் மாணிக்கத்தை எடுத்துக் கொண்டு வந்து தன் காதலியிடம் கொடுக்க எந்த இளவரசனும் இப்போது போவதில்லை.
அவளைச் சுற்றி, முது கன்னிகளும், பழம்தோல்களும்தான் மிச்சம். 'திரு எங்கே? அவன் சிரிப்பெங்கே? குரல் எங்கே? அவள் கேள்விக்கு யாரும் உருப்படியாக மறு மொழி சொல்லவில்லை.
திருவைக் கூட்டிக் கொண்டுபோய் 'உனது நீளம் என்ன அகலம் என்ன' என்று கேட்ட பின் அவனைக் கொண்டே குழி தோண்டி அவனை இறங்கவிட்டு இறக்கப் பண்ணியதை அரையும் குறையுமாய் புரிந்து கொண்டாள். 'திருவை' ஏன் கொலை செய்தார்கள்? திருவைப் போல் எத்தனையோ பேர் இறந்து விட்டார்கள்.
ஆச்சியின் உலகம் 'திரு'. புதைத்து விட்டவர்களின் 'காம்ப்' அடுத்த ஒழுங்கையிலிருக்கிறது. கண் சரியாகத் தெரியாமற் போகமுதல் அவர்களை அவள் அடையாளம் கண்டு கொண்டிருக்கிறாள். இன்றைய துப்பாக்கி தூக்கிகள் நேற்றையக் குழந்தைகளா யிருந்ததை நினைவு கொண்டாள். அவளுக்கும் அவர்களுக்கும் எத்தனையோ வித்தியாசம், உலகம் அனுபவங்கள் அவர்களைப் பொறுத்த வரை மிக மிக வித்தியாசமானவை.
"என்ன கிழவி" ஒரு துப்பாக்கி தூக்கி அலட்சியமாகக் கேட்டான் அவள் 'திருவின்' பாட்டியென்பதால் 'ஆச்சி' என்ற மரியாதையில்லை. 'திரு' அவர்களின் எதிரி, ஆச்சியும் அவர்களின் எதிரி. அவள் வயதும் அனுபவமும் வாழும் சுற்றலும் அவர்களின் எதிரிகள். அவர்களின் அவளின் மழுங்கிய பார்வையில் புகை படிந்த உருவங்களால் நகர்ந்தார்கள். நடுமதிய சூரிய வெளிச்சத்தில் அவர்கள் ஏந்திய துப்பாக்கிகளின் வெள்ளி படிந்த இடங்கள் பட படத்தன.
இவர்கள் திருவை உயிரோடு புதைத்தார்கள்!
ஆச்சியின் கண்களில் நீர், இதயத்தில் எரிமலை. அவள் காறித்துப்பினாள். அவர்கள் கோபமானவர்கள். அவர்களுக்கும் அவளின் திருவுக்குமுள்ள வித்தியாசம் சாக்கடைக்கும் கோயிலுக்குமுள்ள வித்தியாசம். அவள் இன்னொரு தரம் காறித்துப்பினாள்.
வார்த்தைகள் வெடித்தன. வார்த்தைகளில் அவளின் வயதின் உரம் தொனித்தது. தொனியில் வெறுப்புத் தகர்ந்தது.
"கொலைகார மிருகங்கள், மனிதர்களை வேட்டையாடும் மிருகங்கள்" அவள் காறித்துப்பினாள்.
அவளின் சுருங்கிய தோலை ஒருத்தன் எட்டியுதைத்தான். இன்னொருத்தன் துப்பினான் அடுத்தவன் ஏறி மிதித்தான்.
எண்பது வயதும், இரு உலக யுத்தங்களின் அனுபவமும் மதியவெயிலில் மிதி பட்டு இறந்து கொண்டிருந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஜெயந்தீஸனின் குட்டிக்கதைகள்

# தேன்



(மாதவனை உங்களுக்குத் தெரியும். ஒரு பெண் இவனை விரும்ப அவளைக் காய் வெட்டி, அவளுக்குக் காட் கிடைத்ததும் LOVE பண்ணத் தொடங்க அவளால் விரட்டப்பட்டவள். பின்னர் திருமண மேடையிலே சீதனக் கணக்கைப் பார்த்து, பாக்கி இருந்த காரணத்தால் அந்தக் கலியாணத்தையும் குழப்பியவன். திறில்மயமான "காதல் வாழ்க்கை" யைக் கொண்ட மாதவனுக்கு இப்போது நாஷனலற்றி கிடைத்துவிட்டது. பெண்கள் கியூவில் நிற்பனரா இல்லையா? பார்த்து விடுவோமே!)

நாஷனலிற்றி கிடைத்ததும் மாதவன் தான் கனடா போவதென தனது றூம் மேட்டுகளிடம் சொன்னான். யாருமே இதனை நம்பத் தயாராக இல்லை. விடுமுறைகள் என வரும்போது, நட்டம் வந்து விடுமே என்பதற்காக பக்கத்திலுள்ள ஜேர்மனிக்கோ, நெதர்லாந்துக்கோ செல்லாமல், விடுமுறையிலும் எப்படியோ ஒரு வேலையைத் தேடி எடுத்துச் செல்கின்ற நல்ல தமிழன் இவன். கனடாவுக்கு மட்டும் எப்படிப் போகத் துணிந்தான் என்பதை மேட்டுகள் நம்பவில்லை. ஆனால் விசாவைக் காட்டியதும் அவர்கள் கூட ஆவென வாயைப் பிளந்தனர். போதாக் குறைக்கு டிக்கெட்டையும் வேறு காட்டி விட்டான்.

"திருமணங்கள் சொர்க்கத்திலல்ல, கனடாவிலேயே நிச்சயிக்கப்படுகின்றன" என்று லக்ய நயத்துடன் இவன் சொன்னதைக் கேட்டதும், கனடாவில் இவனுக்கு எப்படி ஒரு பெட்டை கிடைத்தாள் என்பதையிட்டு R.மேட்டுகளுக்கு மேலும் ஆச்சரியம். R மேட்டுகளின் கனவெல்லாம் கனடா செல்வதுதான். கனடாவில்தான் பூவோடும், பொட்டோடும், கூறைச்சாரிச் சரசரப்போடும் பெட்டைகள் உள்ளனர் என்பது அவர்களது ஏகோபித்த அபிப்பிராயம். விசாவே இல்லாமல், கள்ள விசாவில் திரியும் இவர்களுக்கு எல்லாம் கனடாக் கனவு.....

"கட்டாயம், கலியாணம் முடிச்சிட்டு, அவவையும் கூட்டிக் கொண்டோடா நீ இங்கை வருவாய்?" என மேட்டுகளில் ஒருவர் மாதவனிடம் கேட்டார்.

"நான் முதலாய் கட்டப் பேச்சுவார்த்தைக்காகத் தான் அங்கை போறன். அவை காசனுப்பித்தான் டிக்கெட் எடுத்தனான். நான் கனடியன் டொலரிலை கேட்ட சீதனத்தைத் தர அவை ஓமாம். படம் அனுப்பிற தெண்டவை, நான் வேணுமெண்டிட்டன். போட்டோக்கிருபியாலை வடிவில்லாத பெட்டையளையும் வடிவான பெட்டையள் போல படம் எடுத்திடுவாங்கள். பெட்டை வடிவோ வடிவில்லையோ, அவளிட்டைஇருக்கிறது கள்ளக் குறிப்போ, நேர்மையான குறிப்போ எண்டதுகளைச் செக் பண்ணத்தான் நான் கனடா போறன். எல்லாம் சரியெண்டா, அங்கையே எல்லாத்தையும் முடிச்சிட்டு பெட்டையோடை இங்கை வந்திடுவன்..." என்றான் மாதவன்.

இந்தவேளையில், போன் அடித்தது. மேட் ஒன்று அதை எடுத்து, "கனடா கோல், உங்களுக்கு" என மாதவனிடம் கொடுத்தது.

"டேய், நான் தங்கம் பேசிறன்...."

"டோய் தங்கம், நீ கனடா விலையோடா இருக்கிறாய்...."

"நீ இஞ்சை கலியாணம் முடிக்கப் போறியாம்...."

"ஓமடா, உது என்னெண்டு உனக்குத் தெரியும்..."

"என்ரை பிறண்ட் அன்னராசா, தன்ரை தங்கச்சிக்குக் கலியாணம் எண்டு சொல்லீட்டு, பிரான்ஸ் மாப்பிளை எண்டிட்டு ஒரு படத்தைக் காட்டினான். டேய் அது உன்ரை படம்.... எனக்கு உன்னைத் தெரியுமெண்டு நான் சொல்லேல்லை. ஏனெண்டா எனக்கு பெட்டையைப் பற்றித் தெரியும்...."

"பெட்டை வடிவோடா?"

"வடிவுதானடா! அவள் வடிவுக்கரசியடா! ஆனா..."

"ஆனா இழுத்தடிக்காம விஷயத்தைச் சொல்லடா"?

"அவள் ஊரிலை கலியாணம் செய்தவள். மூண்டுபிள்ளையள், மூண்டு பிள்ளையளையும் புருஷன்ரை தலையில் கட்டி, டிவோர்ஸும் எடுத்திட்டு இங்கை வந்து குமரிக்கு நடிக்கிறாள்... உவளோடா உனக்கு வேணும்.. உடனை கலியாணத்தைக் குழப்பு. நான் ஒறிஜினல் கன்னித்தேன் ஒண்டைத் தேடி எடுத்து உனக்கு அனுப்பி வைக்கிறன்" என்றதும்

"நல்ல காலம் நீ தெய்வம் போல வந்து என்னைக் காத்தாயடா!" என்றபடி போனைவைத்த மாதவன் டிக்கெட்டை தூள் தூளாகக் கிழித்து எறிந்தான். விசாவைக் கிழிக்கவில்லை, பாஸ்போட் கிழிந்து விடும் என்ற பயத்தால்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தொல்காப்பிய திருமணங்கள் பற்றி...

## எஸ்.கே.ஆர்

"பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டொடு
உருபு நிறுத்த காமவாயில்
நிறையே அருளே உணர்வோடு திருவென
இறையுறக் கிளந்த ஒப்பினது வகையே"

தொல்காப்பியர் சொன்னதுதான் அது. யார் இந்த தொல்காப்பியர்? தமிழ் இலக்கணத்துக்கு முதல் நூலான தொல்காப்பியம் என்ற நூலை வழங்கியவர். அதற்கும் முன்னதாக எழுதப்பட்ட அகத்தியம் என்ற நூல் அழிந்துபோன விஷயம் தமிழராகிய நாம் எல்லோரும் அறிந்த விஷயம் தானே.

"எப்ப அண்ணை அழிஞ்சு போனது. யாழ்ப்பாணம் லைபிரரி எரிச்சபோதே?"

"அல்ல.. அல்ல... சரித்திர காலத்துக்கு முன்னதாகவே அழிந்துவிட்டதாம்."

திருமணங்கள் எப்படி பொருந்த வேண்டும் என்றும் திருமணத்தில் எந்த விஷயங்கள் தவிர்க்கப்பட வேண்டும் என்றும் தொல்காப்பியர் கூறியுள்ளதை பலர் பலவிதமாக அர்த்தப்படுத்தி உள்ளார்கள். திருமணம் செய்து கொள்ளப் போகும் ஆணுக்கும் பெண்ணுக்கும் குடிப்பிறப்பு ஒன்ருக அமைய வேண்டும் என்பதா தொல்காப்பியர் கருத்து? அப்படித்தான் பலர் கருத்து எழுதியுள்ளார்கள். அவ்வாருனல் "மலைஜாதிப்பெண்ணை திருமணம் செய்த சிவபெருமானும் குறமகளை கூட்டிக் கொண்ட கந்தப் பெருமானும்" என உபதேசத் துக்காக எழுதப்பட்ட புராணங்களில் கடவுளே தவருன வழிகாட்டினுர் என்ற பொருளா? நிச்சயமாக அப்படி இருக்க நியாயம் இல்லை.

"அந்தக் கால அரசர்கள் வாரிசுகள் கீழ் ஜாதியில் திருமணம் செய்வதை (காதலிப்பதை) தடை செய்தார்களே. அங்கே ஜாதி பொருந்த வேண்டும் என்பது விதியாகி விட்டதே"

"தாம் நடன மாதைக் காதலித்தால் அது சரியாம். ஆனுல் தனது குமாரன் அதைச் செய்தால் அது தவறு என நினைத்த அந்தக்கால அரசர்களின் "புத்திசாலித தனத்தை" பொது நியாயமாக அங்கீகரிக்க முடியுமா?"

"அந்தக்கால அரசர்கள்தான் அப்படியென்ருல் இந்தக்கால அரசர்களான நாமோ (எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள்) அதையும் வென்று விட்டோம்"

அது அப்படி இருக்கட்டும். இங்கே தொல்காப்பியர் "பிறப்பு" என கூறியது எதை? ஈஸ்வர அனுக்கிரகம்பெற்ற அவர் "பிறப்பு" என கருதியது நிச்சயமாக சாதியாக இருக்க முடியாது. ஒரே சொந்தத்தில் விவாகம் செய்வது கூடாது என்பதை வலியுறுத்தவே பிறப்புப் பொருந்துவது பற்றி எழுதியுள்ளார் என்பதும் புலனுகிறது. அவ்வாறு திருமணம் செய்வது பிறக்கும் குழந்தைகளில் குறைபாடுகளை உருவாக்கலாம் என்பது மட்டுமன்றி இல்லற சுகத்துக்கும் இடைஞ்சல் விளைவிக்கலாம் என்பது விஞ்ஞான உடன்பாடு உடையது. அவருடைய அந்த "முக்காலத தாலும் உணரப்பட்ட" கருத்தை சார்பாக ஆக்கிக் கொண்டனர் பின்னல் வந்த நூலாசிரியர்களும் பிற்போக்குவாதிகளும்.

குடிமை பொருந்த வேண்டும் என இரண்டாவதாக சொல்கிருர். குடிமை என்பது குடும்பத்தின் தன்மை. ஒவ்வொரு குடும்பங்களினதும் வாழ்க்கைமுறை வித்தியாசமானது திருமணம் செய்யப்போகும் ஆணும் பெண்ணும் ஒரே தன்மையான குடும்பத்தில் இருந்து வருவதே சிறந்தது. உதாரணத்துக்கு ஒரு விளக்கம். எல்லோரிடமும் மிகநெருங்கிப் பழகும் குடும்பத்தில் இருந்த வந்த பெண் தாமும் தம் பாடுமாக தனிய வாழ்ந்து பழகிய குடும்பத்தில் வந்த ஆணைத் திருமணம் செய்தால் என்னுகும்? வாழ்க்கை சோபை இழந்து போவது மட்டுமா? காலம் பூரா அவள் கண்ணைக் கசக்கியபடி அல்லவா இருக்கவேண்டும். இதைத்தான் தொல்காப்பியர் குடிமை பொருந்த வேண்டும் என்ருர்.

அடுத்தபடியாக ஆண்மை பொருந்த வேண்டும் என சொல்லப்படுகிறது. மனைவியைக் காப்பாற்றும் சக்தி ஆணிடம் இருக்க வேண்டும். உடற்பலம் பொருளாதாரப் பலம் போன்றவற்றுடன் வீரிய பலமும் ஆணுக்கு அவசியம். அந்தப் பலங்களை ஈட்டிக் கொள்ள திருமணம் செய்ய நினைக்கும் ஆண்கள் கருத்தில் கொள்ள வேண்டும். ஆணுக்கு ஆண்மை எவ்வளவு அவசியமோ அப்படி பெண்ணுக்கு பெண்மை இன்றி யமையாதது. விருந்தோம்பல் ஒழுக்கம் குடும்ப நிர்வாகம் எல்லாம் பெண்மையில் அடங்கும்.

வயது பொருந்த வேண்டும் என்கிருர் தொல்காப்பியர். தற்காலத்தில் ஆண்கள் எந்த வயதானுலும் பரவாயில்லை என்றபடிதான் நடைமுறை இருக்கிறது. அந்தக் காலத்திலேயே வயது வித்தியாசம் மிக அவசியம் எனக் கருதப்பட்ட போதும் இன்று அதை புறக்கணிப்பது எவ்வளவு அறியாமை. பொதுவாக பெண் ஆணிலும் ஏழு வயதளவில் குறைந்திருப்பது நல்லது எனக் கருதப்படுகிறது. பாலியல் பிரச்சனைகளை இது உருவாக்கும் என்பதாலேயே வயதுப் பொருத்தம் அவசியமாகிறது.

உருவம் பொருந்த வேண்டும் எனக் கூறப்படுவது தாழ்வு மனப்பான்மை வராது தடுக்கவே. தாழ்வுமனப்பான்மை வாழ்க்கையில் எப்போதும் வரக்கூடாதது. உருவம் எனப்படுவது தேகத்தை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எங்கள் தமிழர்கள் கடை வைத்திருந்தால் ஒன்றில் 'ஸ்டோர்ஸ்', 'சன்ஸ்', பிறதர்ஸ், சுப்பர்மார்க்கட் என்ற பெயரை இஷ்ட தெய்வங்கள் (இறைவன், மனைவி ஆகிய) , ஊர்களின் பெயர்களுக்குப் பின்னால் போட்டிருக்கும். கடையின் அளவு துணுக்காய் பங்கர் சைசில் இருந்தாலும் இந்த ஜொள்ளுக்கு குறைவிருக்காது. இதற்குள் வியாபாரம் கொஞ்சம் சரியாக நடக்காவிட்டால், பண்டிட் சேதுராமனை புத்தகத்தை வாசித்து

**தொல்காப்பிய...**

மட்டுமல்ல. கல்வியின் அளவும் அதில் அடக்கம். காமவாயில் பொருந்த வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது. பாலியல் உறுப்புகள் ஆண் பெண் இருவருக்கும் எத்தகைய குறைவும் அற்று இருக்கவேண்டும். அயலார்களுடன் விசாரித்தால் அதுபற்றிய சில விஷயங்களை அறிந்துகொள்ளலாம். முக்கியமாக பெண் பூப்பெய்தியது பற்றி விசாரித்து அது பற்றிய சில விஷயங்களை அறிந்து கொள்ளலாம். முக்கியமாக பெண் பூப்பெய்தியது பற்றி விசாரித்து அறிதல் அவசியம். இதையே நிறுத்த காமவாயில் பொருந்தவேண்டும் என்கிறார் தொல்காப்பியர். நிறைவான தன்மை அதாவது பொறுமை இருவரிலும் பொருந்துவதன் அவசியத்தையே நிறைப் பொருத்தம் எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. அருள் எனப்படுவது ஒருவரை ஒருவர் நேசிக்கும் பண்பு. உணர்வுகள் பொருந்துவது மிக அவசியம் அல்லவா. அதையும் தொல்காப்பியர் விட்டு வைக்கவில்லை. இறுதியாக "திரு" பொருந்த வேண்டும் என்கிறார். மனைவி அந்தஸ்தில் அதிகமானவளாக இருப்பின் கணவனை மதிப்பாளா? அங்கே யார் பெரிது என்ற வாதமே தலை தூக்கி நிற்கும். எனவேதான் வசதியைப் பொறுத்தமட்டில் இருவரும் இணையாக இருக்கவேண்டும் எனக்கூறப்பட்டுள்ளது.

## பென் சூரியன் குட்டிக்கதைகள்

# அம்பிகாபதி புராணம்

பலன் சொல்லும் சோதிடர்களைப் பிடித்தால், அவர்கள் பெயர்களில் மாற்றம் செய்வார்கள். பெயர் மாற்றம் செய்தாலும் பரவாயில்லை. மாற்றினால் கருத்துச் சிதைந்து போகிற ஆங்கிலச் சொற்களிலும் ஒரிரு எழுத்துக்களைக் கூட்டி போர்ட் மாட்டி விடுவார்கள். ஆனால் வியாபாரம் அதே அளவில் தான் இருக்கும்.

இப்படித்தான் அம்பிகாபதி கொஞ்சக் காலம் வேலை கிடைக்காமல் இருந்ததால் சடாரென்று ஒரு கடையை எடுத்து விட்டான். கடையை எடுத்தால் 'இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மிளகாய்த்தூள் தொடக்கம்' எல்லாமே கடையை நிறைத்தது. முதல் வேலையாக கடைக்கு முன்னால் நின்று போட்டோ எடுத்து ஊருக்கும் அனுப்பி விட்டான். வீட்டாரும் அந்த கடை இருந்த முழுக்கட்டடமுமே அம்பிகா பதியுடையதுதான் என்று நினைத்து ஊரில் வட்டிக்கு கொடுத்து உழைத்து வைத்திருக்கும் 'வட்டி' வல்லிபுரத்தின் மகள் அமராவதிக்கு கலியாணம் பேச வெளிக்கிட்டனர்.

ஒருநாள் இது பற்றியெல்லாம் கேள்விப்பட்ட சூரியன தனனோடும ஜெயநதீஸ னோடும் ஒன்றாகப் படித்து எட்டாம் வகுப்பிலேயே பிறேக் அடித்துக் கொண்ட அம்பிகாபதியைக் காணச் சென்றான். போர்ட்டில் 'சிலாம்பிட்டியடி மூத்த வைரவ பெருமான் சுப்பர்மார்க்கட்' என்று எழுதியிருந்தது. சுப்பர்மார்க்கட் நியுமரோலஜி சாஸ்திரியாரின் உபயத்தில் Suppermarket என்றிருந்தது. ஆகா, இரவுணவு சாப்பிடுவதற்கான பொருட்கள் விற்கின்ற சந்தை.. என்ன பொருத்தம்.

என்னைக் கண்ட அம்பிகாபதி 'டேய், இங்கையோடயா இருக்கிறாய்? என்ன மச்சான்' என்று சடாரென்று போட்டலோவை உடைத்தான். 'டேய் அவன் ஜெயந்தீஸன் இப்ப என்ன செய்யிறான்? அவன் அவள் வசந்தியைக் கலியாணம் செய்திட்டானே?' என்றான். (மிசிஸ் ஓ வின் கவனதிற்கு)

உண்மையில் அம்பிகாபதி ஒரு தொழிலதிபர் தான். வீடியோவில் ஒருவர், இறைச்சிப் பிரிவில் ஒருவர், கல்லாப் பெட்டியில் ஒருவர் என்று மூன்று பேர் வேலைக்கு வைத்து பிஸினஸ் நடக்கிறது. கடையில் நிறையச் சாமான் இருக்கிறது, விற்பனைக்கு ஆளிருக்கிறது, ஆனால் முக்கியமான ஒன்றில்லை... என்ன, வாடிக்கையாளர் தான். ஒரு கிழவர் மட்டும் எதையோ தேடிக் கொண்டிருக்கிறார். கடையில் பொருட்கள் வாங்க வந்தவர்களை விட, விற்பனையாளர்கள் அதிகம்.. . கிழவர் 'தம்பி, கோடாப் போட்ட சுருட்டு இருக்கோ' என்றதும் கல்லாப் பெட்டி மேசைக்கு கீழாக குனிந்தான். கியூறியஸ் சொன்ன மாதிரித்தான் விளையாட்டு நடக்குது போல..

'எப்பிடியடா வியாபாரம்' என்று நான் இழுக்க.. 'அதையேன் கேக்கிறாய் மச்சான், நான் ஒரு கடையைப் போட இதைச் சுத்தி இப்ப மூண்டு கடை வந்திட்டுது, அவங்கள் திறந்த நாள் தொடக்கம் மலிவு விற்பனையாம், நான் இங்க விசரிலை திரியிறன்' என்றான் அம்பி..

'டே பேயா, பிறகென்னத்துக்கு இந்தக் கடையை வைச்சிருக்கிறாய், பேசாமல் உந்தக் காசை வட்டிக்கு குடுத்திட்டு வீட்ட இரனடா'

'மடையா, இந்தக் கடை போட்டதே நான் ஆறுவீதம் வட்டிக்கு எடுத்துத் தானடா'.

'கனடாவில் சொந்த வியாபார நிறுவனம் வைத்திருக்கும் தொழிலதிபருக்கு மணமகள் தேவை... பாவம் அமராவதி..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மேற்கு அவுஸ்திரேலியாவிற் பொங்கற் பெருவிழா

பொங்கல் விழா உழவர் விழா... தமிழர் திருநாள்... தமிழர் எங்கிருந்தாலும் எத்தொழில் புரிந்தாலும் உணவுப்பயிர்களின் உற்பத்திக்கு உதவிய சக்தி மூலமான சூரியனுக்கு நன்றி தெரிவித்து, வணங்கி பொங்கி மகிழும் நன்னாளே பொங்கற் திருவிழா.

(PERTH) பேர்த் நகர் வாழ் தமிழர்கள் இம்முறை பொங்கல் விழாவைக் கலையம்சம் நிறைந்த பெருவிழாவாகக் கொண்டாடத் தீர்மானித்தனர் அதற்கென உருவாகிய கலையார்வமும் சமயசமூக உணர்வும் கொண்ட பொங்கல் விழாக் குழுவினரின் அருமுயற்சியே 15-01-94 ல் மேற்கு அவுஸ்திரேலிய துறைமுகப் பட்டினமாகிய (FREMANTLE) பிறிமன்ரில் நகர மண்டபத்தில் நடைபெற்ற பொங்கற்பெருவிழா மண்டபமும் மக்கள் கூட்டத்தினுற் பொங்கி வழிந்தது.

மேற்கு அவுஸ்திரேலிய இந்து ஆலயச் சங்கத் தலைவர் கலாநிதி A.R கிருஸ்ணன் மங்கள தீபம் ஏற்றி விழாவைத் தொடக்கி வைத்தார். திருமதி சாந்தா ஜெயராஜின் வரவேற்புரையுடன் நிகழ்சிகள் ஆரம்பமாயின. இயல், இசை நாடகமாகிய முத்தமிழ் நிகழ்ச்சிகளின் தரமும், நவரசமும், மெய்ப்பாடும் எல்லோர் மனங்களிலும் மகிழ்ச்சி பொங்கச் செய்தன.

இயற் தமிழ் நிகழ்ச்சியாக அமைந்த பட்டிமன்றம், சோழவள நாட்டின் ஒரு தலைநகரமாக விளங்கிய பூம்புகாரில் நடைபெற்ற கருத்தரங்குகளை நினைவூட்டியது. பொங்கல் விழாப் பட்டிமன்றத்தில் விவாதம், பெண்களின் பிறந்த வீட்டுக் கடமைகளையும் சொந்தக் குடும்பக் கடமைகளையும் ஒப்பிட்டுக் காரசாரமாக நடைபெற்று தமிழ் மூதாட்டி ஒளவையாரின் முதுமொழிகளும், தமிழிற்கு வான்புகழ் தந்த வள்ளுவரின் குறளும், புரட்சிக் கவிஞர் பாரதியின் கவிதைகளும் பேச்சுக்களை வளம்படுத்தி இலக்கிய மணத்தை எங்கும் பரப்பின. ஈடு செய்த முடியாத இலக்கியப் பேரின்பம் எல்லோர் மனத்தையும் பொங்கச் செய்திருக்கும் என்பது நிச்சயம்.

பெண் கடமை பற்றிய விவாதம் இடைக்கிடை எல்லைக் கோட்டைத் தாண்டி பெண் உரிமைப் போராட்டமாக மாறி விவாதத்திற்கு விறுவிறுப ூட்டியது. வாதிகள் எல்லோரும் ஆண்களாவும், பிரதிவாதிகள் யாவரும் பெண்களாகவும் அமையாமற் கலந்து விவாதித்திருந்தால் பட்டி மன்றம் உச்ச நிலையை அடைந்திருக்கலாம். எனினும் வாதி பிரதிவாதிகளின் உற்சாகமும் பேச்சுக்களின் கருத்துச் செறிவும், விவாதத் தாக்குதல் எதிர்த் தாக்குதல்களும், கட்டுப்பாடும், ஒழுங்கும் எதிர்காலத்தில் மேலும் பல பட்டிமன்றங்கள் நடத்த வழிவகுத்துள்ளன.

இசை நிகழ்சிகளில் திரு. ராஜன் வடிவேல் தயாரித்தளித்த மெல்லிசை நிகழ்சி தனியிடம் பெற்றது. ஆண்களும் பெண்களும் வாலிபரும் வயது வந்தோருமாக ஐந்து பாடகர்கள் பல்சுவைப் பாடல்கள் பல பாடிச் சபையோரை மகிழ்வித்தனர். நவீன இசைக் கருவிகளையும் மிருதங்கம் தபேலா போன்ற வாத்தியங்களையும் எமது வாலிபர்களே திறம்பட இசைத்த காட்சி எங்கள் எல்லோருக்கும் பெருமையே.

நடன நிகழ்ச்சிகளில் திருமதி கமலா சிங்கம் தயாரித்த சிறுவர் நடனம் பொங்கல் விழாவுக்கு ஏற்ற சிறப்புடையதாகவிருந்தது. உழவர் உடையில் ஏரும் எருதும் கொண்டு சிறுவர் ஆடிய உருவக நடனம் "காராள ஏர்கள் கரவோசை கேட்கும் நன்செய் புலங்களை" ஞாபகமூட்டின. திருமதி ஜெயலக்ஷ்மி ராமண் தயாரித்த கும்மி நடனமும், திருமதி சாந்தா ஜெயராஜ் தயாரித்த குறத்தி நடனமும் மேற்கு அவுஸ்திரேலியாவில் பரதக்கலையின் வளர்ச்சியைப் பிரதிபலித்தன.

இறுதியாக கலாநிதி சோமாள்குருக்களும்திரு. ந.இராம் குமாரனும் தயாரித்து வழங்கிய "கண்டம் மாறியவர்கள்" என்ற நாடகம் நல்ல கருப்பொருளும் நகைச்சுவையும் நிறைந்த ஒரு கேலிநாடகமாக எல்லோரையும் சிரிக்கவும் சிந்திக்கவும் செய்தது. மாவை நித்தியானந்தனின் கற்பனையில் உருவான தற்காலத்தைப் பிரதிபலிக்கும் இந்நாடகம் ஆக்கியோனின் எண்ணக் கருத்துக்கள் நிறைவுறும்படி திறம்பட நடிக்கப்பட்டது. நாடகத்தைச் சுருக்கியிருந்தால் நாடகத்தின் தாக்கமும், பொழுது போக்கு நோக்கமும், மேம்பாட்டு உணர்வுகளும் மேலும் உயர்ந்திருக்கும். நடிகர்கள் ஒவ்வொருவருக்கும் விசேடமாக ஒரேயொரு பெண் பாத்திரமாக நடித்த திருமதி மகாலக்ஷமி இராம்குமாருக்கும் நடிப்புத் திறமையால் ஈட்டிய வெற்றிக்கு எமது பாராட்டுக்கள்.

மேற்கு அவுஸ்திரேலியாவில் பொங்கல் விழா, கலை நிகழ்ச்சிகள் கலந்த பெருவிழாவாகக் கொண்டாடப்பட்டது இதுவே முதன் முறை. கட்டணம் எதுவுமின்றி எல்லோரும் கலந்து கலையின்பம் அனுபவித்த வாய்ப்பும் ஒரு முன்மாதிரிச் சாதனை பொங்கல் விழாக் குழுவினருக்கு இங்கு வாழ் தமிழர் சார்பில் எமது மனமார்ந்த நன்றி

துன்பங்கள் நீங்கி
இன்பம் பொங்குக
வேற்றுமை நீங்கி
ஒற்றுமை பொங்குக
உரிமைகள் பெற்று
பெருவாழ்வு வாழ்க
பொங்கலோ பொங்கல்

என்று எல்லோரையும் வாழ்த்துகிறோம்

**ரத்னு**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# ஏ.ஆர்.கே மார்க்கட்

## 31-35 St.Dennis Dr

**(Don Mills/Eglinton)**

## (416) 421 3429

இலங்கை இந்திய உணவுப் பொருட்கள்,
மரக்கறி வகைகள்,
கடலுணவு வகைகளை மலிவு விலையில் பெற ...
தமிழ், ஹிந்தி வீடியோப் படங்கள்
வாடகைக்குப் பெற...

**★ பால், பழங்கள், உடன் மரக்கறிகள், இறைச்சி மீன் வகைகள் ★ கனடிய உணவுப் பொருட்கள்**

★ Frozen seafood

CD, Audio **மலிவு விற்பனையில்**

பழைய, புதிய தமிழ் வீடியோ
படங்கள் வாடகைக்கும்
விற்பனைக்கும்
(ஒரிஜினல் பிரதிகள் மட்டும்)

# A.R.K MARKET




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நிஜங்கள் அழுது கொண்டுதானிருக்கும்



## மொனிக்கா

பள்ளிக்கூடத்துக்கு போக நேரமாகிவிட்டது. ஆனால் இன்று எங்கள் வீட்டுக்கு புதிதாக வேலைக்கு வரும் ஆச்சியை பார்த்து விட்டுதான் போகணும் என மனம் கொஞ்சம் ஆசைப்பட்டது. மெல்லிய வெயில் வாசலில் கோலம் போட்டுக் கொண்டிருந்தது... உலர்ந்த இலைகள் உதிர்ந்து கொண்டிருந்தன... அவளை காணவில்லை. ஏன் இன்னும் ஸ்கூலுக்கு போகலியா? அம்மாவின் குரல் கேட்டு நகர்ந்தேன்.

வரிசையாக வெள்ளை சீருடையுடுத்தி மாணவிகள் நல்லாயன் மகளிர் கல்லூரி மாணவிகள் நீலமும் வெள்ளையும் கலந்த டை அணிந்த வண்ணம்... மஞ்சளும்சிவப்புமான டைகள் இது கொலஸ்டிகாஸ் கல்லூரி மாணவிகள்.. டையே இல்லாது சதுர வடிவ கழுத்து அமைப்பில் கொண்ட வெள்ளை சீருடைகள்... இதுமாமாய கல்லூரி மாணவிகள், இப்படியே எத்தனையோ வகையான டைகள் அந்த பஸ் ஸ்டாப்பிலே... எல்லோருமே ஒரு பஸ்சுக்காக காத்திருக்கின்றோம்.. படிகளிலே கால்கள் தொங்க பஸ் வந்து நின்றது. ஏற முடிந்தவர்கள் ஏறினார்கள். மிகுதி பேர்கள் நின்று கொண்டிருந்தார்கள்.. தனியார் வான் அதில் சத்தம் போட்டுக்கொண்டே இருக்கும் கண்டக்டர் நுவரே. நுவரே, நுவரே...... நான் பஸ் பாஸ் இருந்தும் அந்த தனியார் வானில் ஏறிக்கொள்கிறேன். நேரத்துக்கு ஸ்கூலுக்கு போய் ஆக வேண்டுமே ஆறரை பஸ்சை விட்டால் இப்படித்தான்.

தனியார் வாகனத்தில் கூட மக்கள் நிறைந்து வழிய வேகமாய் வளைந்த பாதைகளினூடாக சென்று கொண்டிருந்தது. திருகோணமலை வீதியில் இறங்கிக் கொண்ட நான் வேகமும் நடையுமாக ஸ்கூலை நோக்கி செல்கின்றேன்.. ஸ்கூல் ஆரம்பித்து விட்டது. பிந்தி வருபவர்கள் நிறுத்தி வைக்கப்படுவார்கள். ஒரு தலைவி பிந்தி வருபவர்களை எல்லாம் நிறுத்தி கொண்டிருக்கின்றாள். இப்போது அதிபர் வருவார். பிந்தி வந்ததற்கு ஒரு பிரம்படி விழும். மானம் போகும்... பயம் நெஞ்சை கவ்வ நெஞ்சு வேகமாய் அடிக்கின்றது. அங்கே என் நண்பி ஹிதாயாவும் பிந்தி வந்திருக்க வேண்டும். கைகளை உதறிக் கொள்கிறாள்.. என்னைப்பார்த்து சிரிக்கிறாள் கண் சிமிட்டுகிறாள் அவள் குறும்புக்காரி, காலை உதறுகிறாள்... சுசானு ரயீம் அவளும் ஒரு தலைவி. பிந்தி வந்து விட்டாள். அதிபர் வருகின்றார் ஒவ்வொருவருக்கும் அடி விழுகின்றது. நான் பிந்தி வந்த தலைவியையே பார்த்துக் கொண்டிருக்கின்றேன். அவள் ஏதோ தன் கடமையை செய்வது போல் எங்களை வரிசையாக நிறுத்தி அதிபரிடம் அனுப்பிக் கொண்டிருக்கின்றாள்.. அவள் பிந்தி வந்து விட்டு நடிக்கின்றாள்.. அரசியலில் தான் இப்படி தலைவர்கள் தலைவிகள் ஏமாற்று வார்கள் என்றால் ஸ்கூலில் கூடவா! "சுளீர்" எனக்கும் ஒன்று விழுகிறது. வாங்கிக்கொண்டு அதிபரை திட்டிக்கொண்டே போனேன்.

வகுப்பில் போய் அமர்ந்த எனக்கு ஆச்சரியம். ட்ரான்ஸ்பர் என்று போன ராமநாதன் டீச்சர் மீண்டும் அமர்ந்திருந்தார். அவர் வகுப்பிலிருந்தால் மாணவிகளுக்கு கொண்டாட்டம் தான். கண்களை மூடி உறங்கிக் கொண்டிருப்பார். பிள்ளைகள் பயிற்சி 32 எடுத்து செய்யுங்கோ என குட்டித்தூக்கம் போட்டுக் கொண்டிருப்பார். என்ன கவலையோ... இந்த டீச்சருக்கு இந்த டீச்சருக்கு 29 வயது தானிருக்கும். எப்போதும சிரித்ததை நான் கண்டதில்லை... எல்லா வகுப்பிலும் இப்படித்தானும் நாங்கள் சூட்டிய பெயர் 'உறக்கம்' மாறி மாறி அடிக்கும் மணி ஓசை இரண்டு மணியாகின்றது. நான் வீட்டுக்கு விரைகின்றேன்.

★ ★ ★

நான் சப்பாத்துகளை கழற்றி வைத்து விட்டு உள்ளே நுழைகின்றேன். குளித்து விட்டு சாப்பிட்டுக்கொண்டிருந்த போது ஏதோ சத்தம். வெளியே ஒரு பெண் என் சப்பாத்துகளை கழுவிக் கொண்டிருந்தாள்.. நாற்பது வயதிருக்கும் நான் ஓடிப்போய் அம்மா நீங்கதான் புதுசா வேலைக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வந்த அம்மாவா! தன் வாயை கைகளால் மூடிக்கொண்டு சிரித்துக் கொண்டே ஆமாம் என்கிருள்

"உங்கள் பெயர் என்ன"

"மங்களம்"

"அழகான பெயர் அம்மா நீங்க என் சப்பாத்துகளையோ என் உடைகளையோ கழுவாதீர்கள் அது எனக்கு பிடிக்காது நானே கழுவிக்கொள்வேன்" என எடுத்துக் கொண்டேன். சிரித்துக் கொண்டு போனுள். எப்போது பார்த்தாலும் இந்த மங்களம் சிரித்துக் கொண்டேயிருக்கின்ருளே! பெடியன்களை கண்டால் வெட்கப்படுவாள்! அழுக்கு சேலையுடன் வீட்டுக்கு வந்த மங்களம் இப்போது மாலையாகி அவளது வீட்டுக்கு போகும் போதுஅழகாக உடுத்திக் கொண்டு போனுள்.... அம்மா நல்ல சேலை கொடுத்திருக்கின்ருள் போலும்

அது ஒரு சனிக்கிழமை அதிகாலையிலே மங்களம் வந்து விட்டாள்...

அம்மா நீங்கள் ஏன் பொட்டு வைப்பதில்லை, காது தோடு போடுவதில்லை, நான் கேட்டேன்

"வந்துட்டாங்க பெரிய மனுசி ஆராச்சி செய்ய, நீங்க அவட கதைய கேட்காம போய் வேலைய கவனியுங்க மங்களம் என்ருர் அம்மா. மங்களம் சிரித்துக் கொண்டே போனுள்..

மங்களம் தோட்டத்தில் புல்லு வெட்டிக்கொண்டிருந்தாள்.. நான் மெதுவாக போய் கதைகொடுத்தேன நீங்க கலியாணம் கட்டிட்டீங்களா? சிரித்தாள்

எனக்கு கோபம் வந்தது ஏன் சிரிக்கிறீங்க?

சும்மாயிருங்கங்க அம்மா என்ருள். அவளது சிரிப்பிற்கு பிறகு பெரியதொரு சோகம் மறைந்திருக்கும் நான் விடவில்லை மீண்டும் கேட்டேன் நீங்கள் ஏன் பொட்டு வைப்பதில்லை?

நான் வேதத்துக்கு மாறிட்டேன்

"முன்பு நீங்க வேதம் இல்லையா"

"இல்லைங்கம்மா முன்பு இந்து. அப்புறம் மாறிட்டன்"

"ஏன்" என்றேன்

"அவரு தான் மாற சொன்னுரு"

"எவரு"

"எங்க வூட்டுக்காரரு"

"அவரு வேதமா"

"இல்ல அவரும் மாறினுரு, நானும் மாறிட்டேன்"

"அவரு என்ன வேல செய்யிருரு"

சிரித்தாள் அவள்

"சிரிக்காம சொல்லுங்க"

"வேலயில்லம்மா எப்பயாவது கூலி வேல கெடைச்சா செய்யூம் செஞ்சிட்டு குடிச்சிட்டு வரும்" என்ருள்.

"உங்கள் முன் பல்லு ஏன் உடைஞ்சிருக்கு"

"கிணற்றடியில வழுக்கி விழுந்திட்டன்" என்ருள்

"நீங்க ஏன் வேதத்துக்கு மாறினீங்க"

"என் கடேசி மகனு சப்பாணி அவன வேதத்துக்கு மாறுனு அனுத மடத்துல சேர்த்துவிடுறேனு சொன்னுங்க அதுனுல மாறுனேன் சேத்து விட்டாங்க" என்ருள்

"யாரு"

"எங்க தோட்டத்துக்கு வேதம் படிச்சிகொடுக்க வேனுல வர்ர தொரமாருக" என்ருள்

"உங்களுக்கு ஜெபம் சொல்ல தெரியுமா?" என்றேன்

"தெரியாது " என்ருள்

"கோயிலுக்கு போவீங்களா"?

"ஓ போவேனே அங்க போய் அந்த யேசுவ பார்ப்பேன்"

"மற்ற ரெண்டு புள்ளைகளும் அவங்ககிட்ட தான் வேதம் படிக்குது" என்ருள்

நாட்கள் உருண்டோட தான் தெரிந்தது மங்களம் கணவனுல் மிகவும் துன்புறுத்தப்படுகின்ருள் என்று. தினமும் குடித்து விட்டு அடிப்பானும் அடித்த அடியில் பற்கள் கூட உடைந்து விட்டதாம். மங்களம் பாவம். தன் வாழ்க்கையை கூட எப்படி வாழ்வது என்று தெரியாத இந்த வயதில் அவள் சின்ன வயதிலிருந்து கும்பிட்ட தெய்வத்தை கூட மறந்துவிட்டுதன் குழந்தைக்காக மதம் மாறிக கொண்டாளா? அல்லது கணவனுக்காக மதம் மாறிக் கொண்டாளா? என்பது எனக்கு தெரியாது.

மங்களம் தனிய அமர்ந்து யோசிப்பாள்... தோட்டத்துக்கு புல்லுவெட்டப்போகின்றேன் என கூறி எரிக்கும் வெயிலில் அமர்ந்திருப்பாள். அவளது கருத்த முகம் வாடியிருக்கும் எண்ணெய் பூசிய கூந்தல் வெயிலில் கொதித்துக் கொண்டிருக்கும். மங்களம் எங்கிருந்து வந்தாள்.. புதிதாகதான் இந்த தோட்டத்திற்கு குடியேறி வந்திருந்தாள். அதற்கு முன்பு எங்கிருந்தாள் என்றே தெரியாது. கேட்டாலும் சொல்ல மாட்டாள். எப்போதும் யோசித்தவாறு இருப்பாள்.

அவளைப் பார்ப்பதற்கு பரிதாபமாகயிருக்கும் சிலவேளைகளில் நான் கூப்பிட்டாலும் கூட அவள் ஆழ்ந்த சிந்தனையிலிருப்பாள். இப்போதெல்லாம் மங்களம் ஒழுங்காக வேலைக்கு வருவதில்லை, ஏனே தெரியாது, மங்களம் எப்போதும் சோகமாயிருப்பதுஏன்? மங்களத்தை கணவன் தினமும் அடிப்பதனுல் மங்களம் இப்போது உணர்ச்சிகளற்ற ஒரு மரம் போல் வாழ்ந்து கொண்டிருந்தாள், படித்தவளா அவள் விவாகரத்து எல்லாம் எடுத்துக்கொள்ள? தன் பெயரையே எழுத படிக்க தெரியாத அப்பாவிகளில் ஒருத்தியல்லவா? அவள் சில நாட்களாக மங்களம் வருவதேயில்லை.

மங்களம் ஏன் வரவில்லை? ஒரு நாள் மங்களத்தை பஸ் ஸ்டான்டிலே கண்டேன். தோட்டம் மாறி போய்விட்டாளாம்.

"ஏன் மங்களம்"

அவள் மௌனமாக நின்ருள்.

முன்பை விட இளைத்திருந்தாள், கழுத்திற்கு கீழ் முள்ளு தள்ளிக் கொண்டிருந்தது கன்னத்திலும் குழிவிழுந்து, அழகிழந்துநோயாளி போல் காணப்பட்டாள்

"பிள்ளைக சுகமாயிருக்காங்களா" என்றேன்

"அவங்க ரெண்டு பேரும் டவுனுல ஒரு டீக்கடையில வேலை செய்யுருங்கம்மா" என்ருள்

"அவரு இப்பவும் உங்கள அடிப்பாரா"

"அந்த கேவலமானவன் இன்னொரு பொம்பளய வூட்டுக்கு கூட்டியாந் துட்டானுங்கம்மா அதுதான் நா

**33ம் பக்கம் பார்க்க..**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## கனடாவில் தமிழ்...

குறிப்பிடாததால் இதை நான் எழுதவில்லை பிழையைப் பிழை என்று சொல்லாததுகூட ஒருவகை யில் கையாலகாத்தனம்தான்! நான் மேலே குறிப்பிட்டதுபோல எனக்கு புத்திஜீவிகளின் (அப்படித் தம்மை எண்ணுபவர்களின்) அங்கீகாரம் தேவையில்லை. ஆனால் தகவல்கள் தரும்போது சரியானதா என்பதை ஊர்ஜிதம் செய்யவேண்டியது அவசியம். இந்த ம.க.ரந்தன் (மண்டையில் களிமண் வேறு நாடகங்களையோ கலைநிகழ்ச்சி களையோ பார்த்ததில்லையா? பூனை கண்ணை மூடிக்கொண்டு உலகம் இருண்டதாக நினைத்தகதைதான். தகவல்களும், தரவுகளும் பிழையாகக் கொடுபட்டதுதான் அண்மையில் சுந்தரராமசாமி இங்கு வந்து "வாங்கிக் கட்டிக் கொண்ட தற்குக்" காரணம். எழுந்தமா னத்தில் எழுதுவதும், விமர்சிப் பதும் தவிர்க்க வேண்டியவை, மகர(ந்)தனின் கனடாவில் தமிழில் பல மேடை நிகழ்ச்சிகள், இசைநிகழ்வுகள் பற்றிய குறிப்பே கிடையாது இன்னொன்று இதற்கு எதிரான கருத்து அண்மையில் மஞ்சரியில் வெளியானது. ப. ஸ்ரீஸ்கந்தனின் கடிதத்திலும் ஓரிரு விடயங்களில் எனக்கு உடன பாடில்லை ஏற்கனவே அவருக்கும், தேடகத்திற்கும் உள்ள பகைமை யை இதன் மூலம் வெளிக்கொணர ஏதுவாயுள்ளது. புன்னகைமலர் பற்றியும் தேவையின்றிக் கடித்துள்ளார். ஆனாலும் துணிந்து தனிஒருவனை நின்று பிழையைப் பிழையென்று சொல்லும் பாங்கு, சரியான தகவல் களைத் தர முயற்சிக்கும் தன்மை எனக்குப் பிடித்துள்ளது.

இறுதியாக ஒன்று.... தங்கள் பெயர் சுபமங்களாவில் வந்துள்ளதாகச் சிலரும் தங்கள் பெயர் இப்படி விலாசம் தெரியாத சிலருடன் வந்தள்ளதாகச் சிலரும் சந்தோமும், கவலையும் (முறையே) அடைகின்ற னராம். இந்த மகர(ந்)தன் தன்னைப் பகிரங்கப்படுத்தா விடில் மீண்டும் தொடர்வேன்.

**நிலா குகதாசன்**

## குழந்தைக்காக..

யாகங்கள் இக்காலங்களில் பயனற்றுப் போவதற்கு காரணங்கள் யாகங்களைச் செய்து தருபவர்களின் தூய்மை இன்மையும் சரியாக கணிக்கப்படாத யாககாலமும் என உபந்நியாசகர் ஒருவர் சொன்னது சிந்திக்கப்பட வேண்டியது. மொன்றியால் 'மலைக் கோவிலு'க்கு போய்வணங்கியதனால் பிள்ளைப்பேறு உண்டானது என சிலர் கூறக்கேட்டிருக்கிறோம். அந்த நேர்த்தியை நிறைவேற்ற முழங்காலில் படியேறி வருவதைக கூட பார்த்திருக்கிறோம். நம்பிக்கை அர்ப்பணம் அல்லது பக்தி போன்றவை மானிட சக்திக்கு மேலான விளைவுகளைக் கொடுக்கும் என அதில் அனுபவப்பட்டவர்கள் கூறும் போது அவற்றை புறக்கணிப்பது பகுத்தறிவு வாதிகளுக்கு சுலபம். ஆனால் பொய் என்பது நிருபிக்கப்படாதவரை காலங்காலமாக நம்பப்பட்டது உண்மை என்று கொள்வது எப்படி அறியாமையாகும்?

### புத்திர பாக்கியம் பற்றிச் சோதிடம்

பெண்கள் பூப்பெய்துவதற்கும் மாதவிலக்கு காலங்களின் இடைவெளிகளுக்கும் கர்ப்பம் பூரணமாகும் காலத்துக்கும் சந்திரசாரம் ஏற்படுவதுடன் மிகுந்த தொடர்பு இருப்பது அவதானிக்கப் பட்டுள்ளது. RODNEY COLLIN என்பவரின் ஆய்வில் 'வானத்தில் சஞ்சரிக்கும் பொருட்களில் இருந்து வரும் இலத்திரோனிக்கதிர்வீச்சுக்கள் பூமியின் மூலக்கூற்று மாற்றங்களை உருவாக்க அவை உயிர்ச் சேதனங்களில் உள்ள காலங்களில் மாற்றத்தை விளைவிக்கின்றன. என்கிறார் அவ்வாறான கலங்களில் ஏற்படும் மாற்றத்தால் சுரப்பிகளில் மாற்றம் ஏற்படலாம் DR.Charles Nordman சொல்வதன்படி "நட்சத்திரங்கள் வெளியேற்றிக் கொண்டிருக்கும் அளவிலடங்கா கதிரியக்கங்கள் உயிரினங்களில் மாற்றத்தை ஏற்படுத்தும்." என்பதை அறியக்கூடியதாக உள்ளது. இந்து சோதிடத்தின்படி பூமிக்கு குறித்த சில கோணங்களில் "சில கிரகங்கள்" அமைந்திருக்கும்போது கருத்தரிக்க அதிகமான வாய்ப்புகள் உண்டு. அந்தச் சில கிரகங்கள் எவை என்பது அந்தப் பெண் பிறந்தபோது கருத்தரிக்க அதிகமான வாய்ப்புகள் உண்டு. அந்தச் சில கிரகங்கள் எவை என்பது அந்தப் பெண் பிறந்தபோது அதே கிரகங்கள் அமைந்திருந்த கோணத்தின் அளவைப் பொறுத்தது. அதாவது குழந்தை பிறந்தபோது அதே கிரகங்கள் ஏற்பட்ட கதிரியக்கங்களால் ஏற்பட்ட சுரப்பிகளின் கலம் மீண்டும் பின்னர் "குறித்த" கதிரியக்கம் ஏற்படும் போது தொழில்புரிய ஆரம்பிக்கலாம் என விஞ்ஞானக் கண்ணாடியினூடு சோதிடத்தைப் பார்க்கலாம். எனவே சரியான முறையில் பார்க்கப்பட்ட சோதிட அனுசரணை குழந்தைப் பாக்கியத்தை கொடுத்திருக்கலாம்என நாம் நம்புவதிலும் தவறில்லை. அவ்வாறான முறையில் குழந்தைப் பாக்கியத்துக்கு ஆலோசனையை நாடுவதைக்கூட தடுப்பதற்கு எவரிடமும் ஆதாரமில்லை சந்தர்ப்பங் களில் இந்த முயற்சி வெற்றியளித்தது என்றும் கேள்விப்பட்டிருக்கிறோம். 'குறிக்கப்பட்ட' நேரத்தில் (ஓரை, இலக்கினம், கிரகசஞ்சாரம் என்றபடி அமைந்த) ஆண்பெண் சங்கமத்தில் உருவாகும் கரு ஆண்குழந்தையா பெண்குழந்தையா என தீர்மானிக்க முடியும் என சோதிடத்தில் கூறப்பட்டிருப்பது எவ்வளவு உண்மையென்பது தெரியவில்லை. ஜாதகப்படி சில "சாந்தி"களை செய்தால் குழந்தை பிறக்கும் என சோதிடர்கள் சொல்வது அனுபவத்தில் பல தருணங்களில் வெறும் "பேய்க்காட்டு" ஆக இருப்பினும் சில சந்தர்ப்பங்களில் சரிவந்தும் இருக்கிறது. எனவே இவ்வாறான சாந்திகளைச் செய்யுமுன் அந்த ஆலோசனை வழங்கியவரின் வாக்குத்தூய்மை சோதிட அறிவு என்பனவற்றை கவனத்தில் கொள்ள வேண்டும். சில நூல்களின் படி தவறாக செய்யப்பட்ட சாந்திகள் எதிர்மாறான விளைவுகளையும் தருமாம். சில இலக்கிய நூல்களில் குறிப்பிட்ட வண்ணம் மாதவிலக்கின் பின்னர் ஒற்றை விழுந்த நாளா இரட்டை விழுந்த நாளா எனப்பார்த்து சங்கமிப்பதால் விரும்பியபடி ஆண்குழந்தையை பெற்றுக்கொள்ளலாம் என்பது ஆதாரமற்றது. கருத்தரித்த சில மாதங்களுக்குள் கருவிலேயே பெண்ணாக பிறக்கப்போகும் குழந்தையை ஆணாக மாற்றும் 'பும்ஸவனம்' என்று கூட ஒன்று இருக்கிறது தெரியுமா?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஜே.வி.பியின்...

வேண்டும்.

பாதுகாப்பு அதிகாரிகள் தந்திரமாக இவ் நிபந்தனைகளுக்கு உடன்பட்டனர். டி.எம். ஆனந்த அவர்களது வாக்குறுதியை நம்பினுர். அவருடைய நோக்கம் ஜேவிபியை மீண்டும் வெளிப்படையான அரசியல் ஓட்டத்தில் இணையச் செய்வதும் அதன் மூலமாக ஜேவிபி அழிவதைத் தடுப்பதுமேயாகும்.

டி.எம். ஆனந்த வெளிப்படுத்திய தகவல்களின் படி செயல்பட்ட ஜானக பெரேராவின் தலைமையிலான விசேட இராணுவக் குழுவினர் கலஹ என்னும் பிரதேசத்தில் உள்ள அரலிய தோட்டத்தில் பியதாச ரணசிங்க, எச்.பி ஹேரத் ஆகிய இரு அரசியல்குழு உறுப்பினர்களை கைது செய்தனர்.

டி.எம். ஆனந்த கைது செய்யப்பட்ட பின்னர் அவரிடமிருந்து பெற்றுக்கொண்ட தகவலுக்கு அமைய பியதாச ரணசிங்கவும் எச்.பி.ஹேரத்தும் கைது செய்யப்படுவதுடன் ஜேவிபிக்கு எதிரான ஆயுதப் படையினரின் தாக்குதல்களில் மாபெரும் திருப்பம் ஏற்பட்டது. அதற்கு சிலகாலத்திற்கு முன்னர் ஜேவிபி அரசியல்குழுவின் முக்கிய உறுப்பினர்களான சுமித் அத்துகோறல, பி.ஆர்.பி. விமலரத்ன ஆகிய இருவரும் கைது செய்யப்பட்ட போதிலும் அவர்களிடமிருந்து எவ்வித தகவல்களையும் பெறமுடியவில்லை. பாதுகாப்பு படையினரால் அவ் இருவரும் கொல்லப்பட்டனர்.

### திருத்தம்

பெப்ரவரி 04, 94 தாயகம் 32ம் பக்கம் 1 வது கலத்தில் "ஆனல் பிரேமதாச பதவிக்கு வந்த பின்னர் இப்பிரதேசங்களில் மீண்டும் முன்னர் நிலவியதையும் விட" என்பதை தயவு செய்து "ஆனல் பிரேமதாச பதவிக்கு வந்ததன் பின் அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டு கைது செய்யப்பட்டிருந்த பகுதியினரும் விடுதலை செய்யப்பட்ட பின்னர் இப்பிரதேசங்களில் முன்னர் நிலவியதையும்விட" எனத்திருத்தி வாசிக்கவும். தவறுக்கு வருந்துகிருேம்.

## நிஜங்கள்..

தோட்டம் மாறிட்டேன் என்றுள்.

என்னிடம் அம்மா தந்த ஸ்கூல் பீஸ் இருந்தது அதை மங்களத்திடம் கொடுத்தேன்.

"நன்ருக சாப்பிடுங்கம்மா, உங்கட தோட்டத்து அட்ரச தாறிங்களா" என வாங்கிக்கொண்டேன்.

மங்களம் கையெடுத்து கும்பிட்டு போய்விட்டாள்.

அவளை பார்க்க மிகவும் வேதனையாக இருந்தது.

அம்மாவிடம் ஆவலாய் சொன்னேன், மங்களத்தை கண்டேன் என, அம்மாவும் சோகமாய் விசாரித்தாள், வேதனைப்பட்டாள்.

"அம்மா ஸ்கூல் பீசை மங்களத்திடம் கொடுத்திட்டேன்" என்றேன்

கோபத்தில் அம்மா கத்தினுள் "இனிமேல் என்னிடம் ஸ்கூல் பீஸ் கேட்காத"

அம்மாவுக்கு தெரியாமல் அப்பாவிடம் வாங்கிக்கொண்டு போய்விட்டேன்.

★ ★ ★

பாவம் மங்களம் இப்போது என்ன செய்கிருளோ?

## அந்த நாலு பேருக்கு..

என்ன செய்ய வேண்டும்? வெறுமனே 'தூதுவனைச் சுடாமல்' காரணத்தை ஆராய வேண்டும். இங்கே ஊருக்கு ஊர், ஆளுக்கு ஆள் சங்கம் அமைத்து பிரிவினையை ஏற்படுத்துவதும் மொத்த தமிழர்களுக்கும் பிரதிநிதிகள் என்று கூறிக் கொண்டு 'வால் பிடிப்பதும்' என்று எமது சமூகத்தின் மேல் மட்டம் பதவியாசையிலும் பணத தாசையிலும் முதுகு சொறிவதிலும் அலையும் போது இளைய தலைமுறை திசை மாறுவதை கவனிக்க முடிவதில்லை.

★ ★ ★

இந்த நிலையில் தமிழர்கள் தங்கள் திறமையால் முத்திரை பொறிப்பதைப் பற்றி யாரும் பேசுவதாகக் காணுேம். கடந்த வாரம் கனடிய டென்னிஸ் சம்பியன் போட்டி ஒன்றில் தமிழ் பெண்ணை சோன்யா ஜெயசீலன் என்பவர் வெற்றி பெற்று தங்கப் பதக்கம் பெற்றதை தொலைக்காட்சியில் பார்த்தேன். மகிழ்ச்சியாக இருந்தது.

கனடாவில் பெரிய நிறுவனமான சவின் அலுவலக உபகரணங்கள் தயாரிப்பில் ஈடுபடுகின்றது. இதன் chairman ஆக பணிபுரிபவர் ஒரு தமிழர். இவர் முன்பு ஐ.பி.எம் நிறுவனத்தில் vice president ஆகப் பணியாற்றியவர். இப்படி பல விடயங்களில் முத்திரை பதிக்கிருர்கள் தமிழர்கள். இவர்கள் பற்றி தமிழர்களுக்கே தெரியாது. நாம் என்ன செய்ய முடியும்?

★ ★ ★

இளம் தலைமுறைக்கு எப்போதும் ஒரு Role model இருக்கும். அதாவது முன்மாதிரியாக, இவரைப் போல வர வேண்டும் என்று ஆர்வத்தை தூண்டுகின்ற ஒரு நிலை... இங்கே விளையாட்டு வீரர்கள், றெக் பாடகர்கள், நடிகர்கள்.. நம்ம தலைமுறையின் றோல் மொடல் யார் என்று தெரியும் தானே.. முருகப் பெருமான் வேலாயுதத்தோடு நின்ற மாதிரி, ஏ.கே47 நிக்கமற நிறைந்திருக்கும் எம் பெருமான்! பிறகு எப்படி ஐயா, பிள்ளைகளுக்கு நல்ல வழியில் முன்னேறும் யோசனை வரும்? ஆயுதமேஎல்லாப் பிரச்சனைகளுக்கும் தீர்வு, புகழுக்கு வழி என்ற நிலையில்.. இளைய தலைமுறை அதே வன்முறையை இங்கும் கொண்டாடுகிறது. இதனல் பல்கலைக்கழகங்களிலும் வேறிடங்களிலும் தங்கள் திறமையால் முத்திரை பொறிப்பவர்களை விட, சண்டியர்களும், துப்பாக்கி வீரர்களும் இங்கே பிரபலமானவர்கள், household name ஆகிருர்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# அந்த நாலு பேருக்கு நன்றி

அறுஞர் போராசிரியர் கல்லாநிதி கியூறியஸ் ஜி

கனடாவில் பத்திரிகைகளை வாசித்து செய்திகளை அறிந்து கொள்வதை விட, பத்திரிகைகள் பற்றியே அறிந்து கொள்வது மிகவும் சுவாரஸ்மானது. அவ்வளவு கிக்கான விடயங்கள். சென்றவாரம் 'அசை போடும் சரி' பார்த்தேன். ஜலண்ட் பத்திரிகை கட்டுரை பற்றி மூச்! ஆனால் இம்முறை 'மக்களே எம் மலைகள்' என்று யாழ்ப்பாண மக்களை பிரபாகரன் வெகு கச்சிதமாக விபரித்தார் என்றிருக்கிறது. புலி ஆதரவாளர்களின் ஆங்கில அறிவில் அபார நம்பிக்கையோ என்னவோ? அதுசரி, ஒரு கட்டுரைக்காக துள்ளிக் குதித்த விமர்சகர் இதற்கு என்ன சொல்லப் போகிறார்? இங்குள்ள நிலைமையை இருட்டடிப்பு செய்ததாக துள்ளுபவர், இப்படியான 'திரிப்புகளுக்கு' என்ன சொல்லப் போகிறார்?

★ ★ ★

முனி சொன்னது போல, 'மரை' நின்று 'சரி' வருகிறது. முன்பு 'மரை' விற்பனையில் முன்நிற்கும் வாரப் பத்திரிகை என்று இருந்தது. இப்போது 'சரி' தான் விற்பனையில் முன்னிற்கும் தமிழ் வாரப் பத்திரிகை என்கிறது. ஆனால் ஒன்று நின்று மற்றது வந்தாலும் இரண்டிற்கும் இடையில் பாரிய வித்தியாசங்கள், தோற்றத்தில் கூட இல்லை.




அறு(சு)வை

பங்காளர் தகராறுதான் புதிய பத்திரிகையின் தோற்றத்துக்கு காரணம் என்றும் கதை.. ஏற்கனவே சகோதரப் பத்திரிகையாக, இணை வெளியீடாக வெளிவந்த 'சரி' திடீரென்று 'மரையை' விட அதிகமாக விற்கிறதாம். எழுத்தாளர்கள் அனைவரும் 'மரை'யை விட்டு 'சரி'க்கு தாவியிருக்கிறார்கள். பங்குச்சொத்து பாழ்பட்ட சொத்து. .. கிழிஞ்சது போ!

★ ★ ★

தற்போது 'சரி'க்கு போட்டியாக 'மரை'யை மீண்டும் அவிழ்த்து விட வேறு ஆட்களைத் தேடித் திரிகிறார்கள் என்றும் கேள்வி. எனவே, யாராவது பத்திரிகை ஆசிரியராக வேண்டும் என்பதே வாழ்வின் ஒரே இலட்சியமாகக் கொண்டிருந்து, கம்பியூட்டர் வாங்க அலைவீர்களாயின் வீணாய் காசை கொட்டாமல் தகுந்த இடங்களில் தொடர்பு கொண்டு ஆசிரியராகுங்கள். வேண்டியது கையில் ஒரு சிவப்புப் பேனை.. எழுதுவதற்காக அல்ல. கொழும்பு, சென்னைப் பத்திரிகைகளில் வந்த செய்திகளை மார்க் பண்ணி கொடுக்க வேண்டியதுதான் தொழில். விழாக்கள், வைபவங்களில் நீங்களும் ஒரு அந்தஸ்துடன் போய் வருவீர்கள். கியூறியஸ்க்கும் எழுதித் தொலைக்க உங்களிடமிருந்து ஏதாவது கிடைக்காமலா போகும்?

★ ★ ★

'ஓசை' ஓசையில்லாமல் தன் பிராணனை முடித்துக் கொண்டது. இப்போது கூடு விட்டு கூடு பாய்கின்றது போல, 'நாட்டுக்குள்' புகுந்துவிட்டது. 'நாடு' ஆசிரியர் பல்கலைக்கழகம் செல்வதால் பத்திரிகை நின்றதாம். இதற்குள் 'மூச்சு விடுகின்ற' ஓசையை மட்டும் எழுப்பிக் கொண்டிருந்த ஓசை, சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி 'கனடிய உரிமையைப்' பெற்றுக் கொண்டது. அப்படி என்ன உரிமை? அங்கிருந்து கூரியரில் பத்திரிகை வர, இங்கிருந்து வாராவாரம் றோயல்டி. முதலில் 'கனடா ஈழநாடு' வந்தது. பின்னர் 'தமிழ் ஈழநாடு' ஆகியது. பின்னர் வெறும் ஈழநாடு ஆகியது. வழமையான ஈழநாட்டின் முகப்புத் தோற்றம் முதல் சில இதழ்களுடன் மறைந்து வேறுருவில் வருகிறது. ஏற்கனவே உரிமை பெற்றவர்களின் ஆட்சேபமோ என்னவோ? 'தமிழ் கூறு நல்லுலகிற்கு' சேவை செய்த ஓசை அடங்கியதில் தமிழ் இலக்கிய உலகுக்கு பாரிய இழப்புதானே. தமிழ் மக்கள் என்ன செய்யப் போகிறார்களோ... முன்பு ஓசை நடத்திய சிறுகதைப் போட்டிக்கு ஆரம்பத்தில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட சிறுகதைகள் கிடைத்தன என்று ஒரு உடான்ஸ். இப்போது அது குறைந்து 1400 ஆகியிருக்கிறது.

'ஓசை' 'நாடு' ஆகியதும் இப்போது பிரச்சனை ஆரம்பமாகியிருக்கிறது. பழைய 'நாடு' மீண்டும் வெளிவந்திருக்கிறது. மொத்தத்தில் ஒரே நாட்டில் இரண்டு பதிப்புகள் வெளியாகும் ஒரே பத்திரிகையாகி இருக்கிறது. வாசகர்கள் தலைமுடியைப் பிய்க்கிறார்கள். ஒரே பெயரை வைத்து இருவர் போட்டி. . வானொலி விளம்பரங்கள் அமர்க்களம். விளம்பரங்களுக்கு தங்களுடன் தொடர்பு கொள்ளும்படி...

கொஞ்சக் காலத்திற்கு முன்னர் பொதிகையில் 'கற்றாரைக் கற்றாரே காமுறுவர்' என்று இரண்டு ஆசிரியர்களும் பேட்டி கொடுத்திருந்தார்கள்... அண்ணை, தம்பி என்று. இன்று அண்ணன் என்னடா தம்பி என்னடா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவசரமான உலகத்திலே என்று நடக்கிறது நாடகம். இதெல்லாம் நாட்டுக்கு ரொம்ப அவசியம் தான்.

★ ★ ★

இந்த வார சஞ்சிகைகளின் கோளாறுகள் ஒரு புறம் இருக்க... மாத இதழாக வருகின்ற 'தகவல்' தனது ஆண்டு மலரை வெளியிட்டிருக்கிறது. வண்ணக் கோலத்தில்... கனடிய வாழ்வு பற்றிய அவசியமான தகவல்கள் அதில் வருவது, எந்த வித அரசியல் வாடையும் இல்லாமல் இருப்பது நல்லது தான். பல அறிஞர்கள் தமிழர்களுக்கு பயன்படக் கூடிய விடயங்களை வெளிக்கொணர்வதும் அதுதான்.

ஆனால் இந்த சஞ்சிகை வெளிவருவதற்கு அரசாங்கமோ, வேறெந்த நிதியுதவியுமோ கிடைப்பதில்லை, விளம்பர தாரர்களின் பணத்தில் தான் வெளிவருகிறது என்று ஒரு சத்திய வாக்குமூலம்... ஓகோ அப்படியா... பெரிய அரிச்சந்திரன், வாய்மை தவற மாட்டார் அல்லவா! இவ்வளவு தூரம் முக்கியத்துவம் கொடுக்கின்ற காரணம்... எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்பதாக இருக்குமோ?

கனடாவில் அரச மானியம் பெறுகின்ற தமிழ் அமைப்புகள் குறித்து கடுமையாக நுண்ணாய்வு செய்வது கியூறியஸ் மட்டும் தான். எனவே இந்த அறிக்கையை கியூறியஸின் முகத்தில் அடித்த சவாலாக ஏற்றுக் கொண்டு பதிலளிக்க வேண்டிய தார்மீகக் கடமை ஒன்றுண்டல்லவா? இதோ.

முன்பு வெளிவந்த தகவல் 8 ஆயிரம் பிரதிகள் வெளிவருவதாக வந்தது. இதை ஓசைப் பத்திரிகை 'வாங்கு வாங்கியிருந்தது'. சென்ற ஆண்டு மலரில் மாதாந்த வெளியீடு 5 ஆயிரம் பிரதிகள் என்றிருந்தது. இம்முறை ஆண்டு மலரில் மாதாந்த வெளியீடு நான்காயிரம் பிரதிகள் என்றிருக்கிறது. (ஆண்டுமலர் ஐயாயிரம் பிரதிகளாம்). மொத்தத்தில் இலவசமாக கிடைக்கின்ற ஒரு சஞ்சிகையின் சர்க்குலேஷன் எண்ணாயிரத்திலிருந்து நான்காயிரமாக, பாதியாக குறைந்திருக்கிறது. இதற்குள் 'தொகையினைப் பத்தாயிரமாகவும் அதிகரிக்க வேண்டும் என்ற இலக்கினை நோக்கியே நாம் செயற்பட்டுக் கொண்டிருக்கிறோம், எங்கள் விருப்பம் நிறைவேறும் காலம் வெகுதூரத்தில் இருக்காது' என்றும் இருக்கிறது. அதெப்படி? கணக்கு உதைக்கிறதே! சென்ற வருடமும் 'பிரதிகளை பத்தாயிரமாக்க வேண்டும் என்பது எமது திட்டம்' என்றிருக்கிறது. ஆனால் ஆயிரம் பிரதிகள் தற்போது குறைந்திருக்கிறது.

அதிருக்கட்டும். அரசாங்கத்திடமோ, நிறுவனத்திடமிருந்தோ பணம் கிடைக்கவில்லை, முழுக்க முழுக்க விளம்பரப் பணம் மூலம் தான் சஞ்சிகை வெளியிடப் படுகிறது என்று கூறப்பட்டிருக்கிறது. நல்ல விடயம். 'கனடாவில் அதிகளவு விற்பனையாகின்ற வார இதழைப்' பிரசுரித்து விளம்பரமும் வாங்கி பணத்துக்கும் விற்பவர்களை விட இது மேலானதே!

'கத்தோலிக்க குடிவரவு நிலைய இயக்குனர் கடந்த வருட ஆண்டு மலரில் எழுதிய தமது கட்டுரையில் இது பற்றி விளக்கமாக சொல்லியுள்ளார்' என்றிருக்கிறது. நானும் தான் இப்போது பதின்மூன்றும் தடவையாக அந்த மலரை புரட்டுகிறேன். அப்படி ஒரு கட்டுரையே இல்லையே! (இரண்டாம் ஆண்டு மலர், பெப் 93).

இங்கு வருகின்ற பெரும்பாலான பத்திரிகைகள், சஞ்சிகைகள் தனியார் முயற்சிகள். ஆனால் இந்த தகவல் மட்டும் தயாரிக்கப்படுவது ஒரு தகவல் நிலையம், ஒரு மததாபனத்தின் குடிவரவுப் பிரிவும் சேர்ந்து. (நான்கு நிறுவனங்கள் சேர்ந்து விடுகின்ற ஒரே சஞ்சிகை). வெளியிடப்படுவது ஒரு தமிழர் தகவல் ஆய்வு பிரிவும் இன்னொரு தனியார் நிறுவனமும் சேர்ந்து... மொத்தத்தில் சம்பந்தப்பட்டது மூன்று பொது அமைப்புகளும் ஒரு தனியார் நிறுவனமும்.

ஒரு சஞ்சிகை வெளியீட்டில் இந்த 'எக்கச்சக்கமான' வலைப்பின்னல் ஏன்? மத தாபனத்தின் குடிவரவுப் பிரிவு தமிழ் சஞ்சிகை தயாரிப்பில் ஈடுபடுவது எதனால்? அங்கே பணிபுரிவது ஐயன்மீர் என்பதால்! சரி. தகவல் நிலையம் என்ற பொது அமைப்பு ஈடுபடுவது எதனால்? அதிலும் ஐயன்மீர் செயலாளர் என்பதால்!. சரி. ஆய்வுப் பிரிவு வெளியீட்டில் ஈடுபடுவது எதனால்? அதிலும் ஐயன்மீர் 'திருவிளையாடல்' உள்ளதால்.. தனியார் நிறுவனம் சேர்ந்து கொள்வது எதனால்? அதுவும் ஐயன்மீருடைய சொந்தம் என்பதால். மொத்தத்தில் இதில் சம்பந்தப்பட்ட எல்லா அமைப்புகளிலும் ஐயன்மீர் நீக்கமற நிறைந்துள்ளார். நான்கு அமைப்புகளுக்குள் இருக்கும் ஒருவருக்கு எவ்வளவு தூரம் conflict of interests எனப்படும் நலவுரிமை முரண்பாடுகள் ஏற்படும் என்று சொல்லியா தெரிய வேண்டும்.

சஞ்சிகை வெளியிட என்று பணம் வாங்காதிருக்கலாம். மத அமைப்பு தவிர்ந்த மற்ற இரு பொது அமைப்புகளினதும் பணி பற்றி சிறிது விளக்கமாக கூற முடியுமா? ஒரு அமைப்பு தொலைபேசி சேவை நடத்துகிறது, மற்றது என்ன ஆய்வில் ஈடுபடுகிறது என்று தெரியாது. இந்த அமைப்புகளின் செயற்பாட்டிற்கான செலவீனங்களை யார் பொறுப்பேற்கிறார்கள்? அதுவும் நூறு வீதம் விளம்பரங்கள் தானா? தொண்ணூறு வீத செலவுகளை விளம்பரங்களும் பத்து வீதத்தை தனியார் நிறுவனமும் பொறுப்பேற்பதாயின், மீதி மூன்று நிறுவனங்களும் என்ன செய்கின்றன? வெறுமனே தயாரிப்பிலும் வெளியீட்டிலும் மட்டும் தானா? தனியார் நிறுவனம் எந்த பயனும் இன்றி பத்து வீதத்தை செலவிடுவதன் நோக்கம் என்ன? அதுவும் ஒரு லாபம்- எதிர்பாரா தொண்டு நிறுவனமா?

இதற்குள் தமிழ் கட்டுரை 90 வீதம் விளம்பரங்கள் என்று சொல்ல, ஆங்கிலக் கட்டுரையில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'நூறு வீதம் விளம்பரதாரர்களின் நிதியுதவியே' என்றிருக்கிறது. அத்துடன் தனியார் நிறுவனம் பத்து வீதம் பொறுப்பேற்பதையோ, அல்லது இலவசமாக அச்சமைப்பு வேலைகளில் ஈடுபடுவதையோ ஆங்கிலக் கட்டுரையில் குறிக்கவும் இல்லை. எனவே அச்சமைப்பு வேலைகளுக்கு என்று பணம் வாங்குவதாக நாம் கருத இடமுண்டல்லவா?

கடைசியில் தனியார் நிறுவன நிர்வாகிகள், இயக்குனர்கள், தங்கப்பதக்கம் வழங்கிய பெற்றூர் என்று பல தடவைகள் தனக்கு தானே நன்றி கூறிக் கொண்டு முடிகிறது இது. வெறுமனே பணம் வாங்கவில்லை என்று அறிக்கை விடுவதை விட மற்ற நிறுவனங்கள் பற்றியும் தகவல்களைத் தந்தால், அந்த நிறுவனங்களின் சேவையையும் தமிழ் மக்கள் பெற்றுக் கொள்ள உதவியாக இருக்குமே... இதைவிட இன்னொரு தேசிய மன்றத்திலும் அன்னூர் சேவை தொடர்கிறது. கிழிந்தது போ!

எனக்குத் தெரியும்.. உவன் கோளாறுகாரன்.. உப்பிடித்தான் விதண்டாவாதம் பேசுவான் என்று பலர் முணுமுணுப்பீர்கள். எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்....

(இந்த ஆய்வில் எனக்கு உதவிய போராசிரியர், அறுஞர், கல்லாநிதி, மற்றும் கியூறியஸின் தந்தையாரின் கடைசி மகனுக்கும் நன்றிகள்)

★ ★ ★

கனடாவில் வார இதழ்கள் மொய்த்த நிலையில் பெரும் குண்டு ஒன்று.. தினசரிப் பத்திரிகை வெளிரப் போகிறதாம். பத்திரிகை வருகிறதோ என்னவோ, சில "வாராந்திரி"களுக்கு பேதி கொடுக்கும் நோக்கம் தான் அதிகம் போலிருக்கிறது. மேலே குறிப்பிட்ட சர்ச்சைக்குரிய தனியார் நிறுவனம் தான் வெளியிடுகிறது. நடைமுறைச் சாத்தியங்கள், வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகள் குறித்த சந்தேகங்கள் நிறைய.. இருப்பினும் நல்ல முயற்சி.. வாழ்க பணி.. நூறு வீதம் விளம்பரப் பணத்தினுல் இதுவும் இலவசமாய் கிடைக்குமோ என்னவோ? உலகத்தமிழருக்கு இப்படி ஒரு போட்டியா?

★ ★ ★

இது ஒரு புறமிருக்க சோற்றுச் சட்டிக்குள் இன்னொரு பூகம்பம்.. சென்ற வாரம் சில வாசகர்கள் எம்மிடம் குமுறிக் கொண்டார்கள். ரொறன்ரோ சண்ணில் தமிழர்களை gangsters என்று குறிப்பிட்டிருப்பதாக... ரொறன்ரோ சண்ணில் எழுதும் மார்கோலிஸ் பற்றி இங்கே எழுதியிருக்கிறேன். அதே நபர் அகதிகள் பற்றி எழுதும் போது புதிதாக அகதிகளாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியவர்கள் என்று ஒரு லிஸ்ட் போட்டிருந்தார். அதில் இலங்கையர்கள் இல்லை, இறுதியில் ரஷ்ய, வியட்னுமிய, இலங்கை gangster களை ஏற்றுக் கொள்ள வேண்டாம் என்றிருந்தது.

ஒரு சிலரின் நடவடிக்கைகளால் முழு இனமுமே தலைகுனிகிறது. துப்பாக்கிச் சூடுகள், கோஷ்டி மோதல்கள் என்று அடிக்கடி பத்திரிகைகளில் நம்மவர்கள் வரும் போது இவ்வாறுன வர்ணனைகள் வருவது சகஜமே. இது போன்ற அடிதடிகளில் சம்பந்தப் படாதவர்கள் ஒட்டுமொத்தமாக அனைவரையும் குண்டர்கள் என்று சொல்லும் போது குமுறுவது நியாயம். ஆனுல் எங்கள் சமூக மட்டத்தில் இந்த வன்செயல்களுக்கு எதிரான எதிர்ப்புகள் என்ன அளவில் இருக்கிறது? இன்னமும் இந்த அடிதடிகளில் ஈடுபடுபவர்களுக்கு விருது கொடுக்கவில்லை என்பதைத் தவிர...

கனடியப் பத்திரிகைகளில் சண் போன்றன குடியேற்ற வாசிகள் மீதான எதிர்ப்புணர்வைத் தூண்டுவன, கனடாவில் குற்றச் செயல்கள் குடியேற்றவாசிகள், வேற்றினத்தவர்களால் நடத்தப் படுகின்றன என்ற மாயையை ஏற்படுத்துவதில் முன்நிற்பன. அவை தான் முன்நிற்கின்றன என்றால், அதற்கு காரணமான நாம்

33ம் பக்கம் பார்க்க..

This newspaper
is published by
Georgicka communications.
A member of
Ethnic Press Council Of Canada.

Editor: George R.Ckrhushchev

P.O.Box 1031, Station "F",
Toronto, Ont, M4Y 2T7.

Tel: (416) 920 9081
Fax: 963 5738
E mail:71650.3216
@Compuserve.com

இப்பத்திரிகை ஜோர்ஜிக்கா
தொடர்பு நிறுவனத்தினுல்
வெளியிடப்படுகிறது.
ஆசிரியர்;
ஜோர்ஜ் இ. குருஷ்சேவ்

உங்கள் ஆக்கங்கள், பத்திரிகை பற்றிய உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்கள் என்பவற்றை வரவேற்கிறோம். உங்கள் கருத்துக்களை எழுத்து மூலமாக அனுப்புங்கள். உங்கள் கருத்துக்கள் எதுவாயினும் பிரசுரிக்க முயற்சிப்போம். ஆக்கங்கள் தரங்கண்டு பிரசுரமாகும். ஆக்கங்களின் கருத்து சிதையாமல் மாற்றங்கள் செய்ய ஆசிரியருக்கு உரிமை உண்டு. ஆக்கங்களுடன் உங்கள் தொலைபேசி இலக்கங்களையும் விலாசங்களையும் குறிப்பிடுங்கள்.

ஆக்கங்களை மீளப் பெற விரும்புபவர்கள் சுயவிலாசமிட்ட முத்திரையிட்ட அஞ்சற்கூடு அனுப்பவும். படைப்புகளில் சொல்லப்படும் கருத்துக்களுக்கு எழுதியவர்களே பொறுப்பு. படைப்புகளில் வரும் கருத்துகள் ஆசிரியரின் கருத்தாக இருக்க வேண்டிய அவசியமில்லை.

## தாயகம்
## சந்தா விபரம்

கனடா ஆறுமாதம் $30
வெளிநாடுகள்
ஆறு மாதம் US$60
வெளிநாட்டு வாசகர்களின் காசோலைகளின் இலக்கம் encoded செய்யப்பட்டிருக்க வேண்டும். காசோலைகள் அனைத்தும் Georgicka communications பெயருக்கு எழுதப்பட வேண்டும். (தாயகத்தின் பெயருக்கு அல்ல)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ஒரே இடத்தில் உங்கள் அனைத்து இலங்கை, இந்திய, கனடிய
உணவுப் பொருட் தேவைகளுக்கும் நாட வேண்டிய இடம்

# அன்ரனி பிறதர்ஸ்

**1472 QUEEN ST WEST (QUEEN/LANSDOWNE),**
**TORONTO, ONT. M6K 1M4**

வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9 மணி முதல் இரவு 11 மணி வரை

உடன் மீன்,
இறைச்சி,
மரக்கறி, பழவகைகள்
மலிவு விலையில்

தமிழக, இலங்கை
வாரப்பத்திரிகைகள்,
சஞ்சிகைகள் உடனுக்குடன்

முத்திரை, சிகரெட்,
TTC Tickets, Lottery Tickets


★ போட்டோக்கொப்பி,
ஃபாக்ஸ் வசதிகள்

★ தமிழ், ஹிந்தி, மலையாள
வீடியோக்கள்
வாடகைக்குப் பெறலாம்

★ லேசர்
இசைத்தட்டுக்கள்
மலிவு விலையில்

## ANTONY BROTHERS

**TEL:(416) 588-0733**
**TEL/FAX:(416) 516 3903**




சிங்கப்பூரில் இருந்து
இறக்குமதி செய்யப்பட்ட
உடைகள்,
பரிசுப் பொருட்கள்,
அலங்காரப் பொருட்கள்
அனைத்தும் மலிவு விலையில்
பெற்றுக் கொள்ள

## ANTONY BROTHERS FASHION HOUSE

**1484 QUEEN ST WEST**
**Tel:(416) 588 0310**

www.tamilarangam.net


# சிவாஸ் ரேடிங் கோ லிமிட்

## மாபெரும் மலிவு விற்பனை

★ இலங்கை, இந்திய உணவுப்பொருட்கள்
★ உடன் இறைச்சி,கடலுணவு, மரக்கறி வகைகள்
★ தயாரிக்கப்பட்ட உணவுவகைகள்
(இடியப்பம்,தோசை,அப்பம்)
★ சமையல் உபகரணங்கள்
★ இலங்கை, இந்திய சஞ்சிகைகள்
அனைத்தும் மலிவுவிலையில்

# SIVA'S TRADING CO LTD

3852 Finch Ave East (Kennedy/Finch)
Tel:(416) 321 2739

# P.S.S.T

5210 Finch Ave East #23
(Finch/Middlefield)
Tel:609-0141

வீடியோ ஒலிப்பதிவு நாடாக்கள்,
இந்திய உணவு வகைகளின் மொத்த விற்பனையாளர்

Video Transfer (Any system) $8.99

சகல புதிய, பழைய தமிழ், இந்தி, மலையாளப் படங்கள்
வாடகைக்கு கிடைக்கும்